கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI • 01.03.2009 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



நிஜமும்...



...நிழலும்



வித்தியாச மல்லி!



கல்கி

01-03-2009

நியாயமாக இன்று பூஜாவுக்கு வந்து சேர்கிற அத்தனை பூங்கொத்துகளும் பாவனாவுக்கு வந்து சேர வேண்டியவைதான். 'நான் கடவுள்' படத்தின் அம்சவல்லி கதாபாத்திரத்துக்காக பாலா முதலில் தேர்ந்தெடுத்தது பாவனாவை. ஆர்யா-பாவனாவை வைத்து புகைப்படங்களும் சில காட்சிகளும் எடுக்கப்பட்டன. பிற்பாடு தேதி பிரச்னையால் அந்தப் படத்திலிருந்து விலகினார் பாவனா. இப்போது 'நான் கடவுள்' வெளிவருகிற சமயத்தில் பாவனா கையில் ஒரு தமிழ்ப்படமும் இல்லை. அவர் நம்பிய மற்ற படங்களும் அவரைக் கைவிட்டு விட்டன. இந்த நிலையை பாவனா எப்படி எடுத்துக் கொள்கிறார்?

பாவனா பளீர் பேட்டி



''நான் கடவுள் படத்துக்காக நான் ஒரு ஸீன் பண்ணினேன். அப்புறம் படம் தாமதமாயிடுச்சு. அது எனக்கு சரியா வரலை. மற்ற படங்களுக்குத் தேதிகள் கொடுத்திருந்தேன். நான் கடவுள் யூனிட்ல சரியா டேட்ஸ் சொல்லலை. என்னாலயும் காத்திருக்க

தேசிய விருதை தாரை

முடியலை. ஒரு படத்துக்காக வருஷக்கணக்காகக் காத்திருக்க நான் என்ன கோடி ரூபாய் சம்பளமா வாங்கறேன்? அவார்டுக்காக எல்லாம் ஒரு படம் பண்ண முடியாது.

இப்போது பூஜாவுக்குக் கிடைக்கற பாராட்டுகளைப் பார்த்து எனக்குக் கொஞ்சம்கூட பொறாமை இல்லை. நாளைக்கு அவங்களுக்குத் தேசிய விருது கிடைச்சா முதல் ஆளா போன் பண்ணி பாராட்டுவேன். நான் அதுல நடிக்காதது விதின்னுதான் சொல்லணும்'' என்றவரிடம், நான் கடவுளை விட்டுவிட்டு நடித்த படங்களும் அவருக்குக் கைகொடுக்காதது பற்றிக் கேட்டோம்.

''வாழ்த்துகள் படத்தோட கதை சொன்னபோது அது என்னை ஆச்சரியப்படுத்தவேயில்லை. எனக்கு வாய்ப்பு கிடைச்சதால அதுல நடிச்சேன். அந்தப் படம் பெரிய வெற்றியைத் தொடும்னு எல்லாம் நான் நினைக்கலை. இப்போ நான் தமிழில் ஒரு படத்துல கூட நடிக்கலைதான். காரணம் எனக்குப் பிடித்த கதாபாத்திரங்கள் கிடைக்கலை. பதிலா நல்ல படங்கள்ல மட்டும் நடிக்கணும்னு நினைக்கறேன். தமிழ்ல என் திறமையைச் சரியாப் பயன்படுத்தலைன்னு சொல்லலை. அப்படி ஒண்ணும் என்கிட்ட திறமை கொட்டிக் கிடக்கலை. நல்ல பெரிய பேனர், பெரிய நடிகர்கள், நல்ல கதை - இது எல்லாம் அமையும்போது நிச்சயம் தமிழ்ல நடிப்பேன். ஆனால் நான் தொடர்ந்து மலையாளப் படங்களில் நடிச்சுட்டுத்தான் இருக்கேன். இடைவெளி எல்லாம் தமிழுக்கு மட்டும்தான்'' என்கிறார்.

- செந்தில்

வார்த்தேனா?

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: **லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

நீயும் ரோல்மாடல் தான்!

உடையழகு... நடையழகு...



ஃபேஷன் மாடல்கள் என்றாலே நம் கண் முன்னால் தோன்றுபவை சிக்கென்ற உடல் வாகு, கான்ஃபிடன்டான நடை, சரளமான பேச்சு, வித்தியாசமான உடை, லேட்டஸ்ட் ஹேர் ஸ்டைல், கம்பீரமான போஸ்... இப்படி நீளமாகப் போகும். இன்றைய இளம்பெண்களுக்கு ரோல் மாடல்களே ஃபேஷன் மாடல்கள் தான். நாமும் மாடல் மாதிரி ஆகவேண்டும் என மாய்ந்து போகும் பெண்களுக்காகச் சில யோசனைகள்! இதைப் பின்பற்றினால் நீங்களும் மாடல்தான்...

ஃபிட்னஸ்: ஃபிட்டாக இருக்க வேண்டும். மாடலென்றால் ஒல்லியாக இருக்க வேண்டும்தான். ஆனால் ஹெல்தியாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம். உடற்பயிற்சி அத்தியாவசியம். எக்ஸர்சைஸ், டயட் (பட்டினி அல்ல), மற்றும் நிறையத் தண்ணீர் அருந்த வேண்டும். சோம்பல் படாமல் செய்தால் மாடல் போன்ற மேனி கிட்டும்.

ஸ்டைல்: தலையிலிருந்து கால் வரை உங்களுடைய ஸ்டைல் எப்படி என்று ஆராயவும். ஹேர் ஸ்டைல், காலணிகள் - இவை இரண்டுமே ஒரு மாடலுக்கு மிக முக்கியமான அம்சங்கள். உங்கள் முகத்துக்கேற்றவாறு ஹேர் ஸ்டைல் செய்வது அவசியம். அழகான, ஹெல்தியான, பளபளக்கும் முடி நீங்கள் ஒரு மாடல் என விசிலடித்துச் சொல்லும். அதே போல காலணிகளும் பொருத்தமாகப் போடத் தெரிய வேண்டும். எப்போதும் ஹைஹீல்ஸ் தேவையில்லை. ஆனால் ஒரு ஸ்டைல் தெரியவேண்டும். அழகான லேட்டஸ்ட் ஹேர் ஸ்டைல் + கம்ஃபர்டபிள் காலணிகள் ஒரு ஸ்டைல் தோற்றத்தை உருவாக்கும்.

ஃபேஷன்: உடை விஷயத்தில் படு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இது தான் லேட்டஸ்ட் ஃபேஷன் என எதை வேண்டுமானாலும் போடக்கூடாது. உங்கள் உயரம், ஹேர் ஸ்டைல், சரும நிறம்... இதைக் கவனத்தில் கொண்டு ஆடை அணிந்தால் கிளாமராகத் தெரிவீர்கள். டிசைனர் லேபிள் பிராண்டட் உடைகள் போட்டால்தான் மாடல் லுக் வரும் என்பதல்ல... ஃபேஷன் மாகஸின்களைப்

புரட்டினாலே ட்ரஸ் ஐடியாக்கள் பிரமாத மாக வரும். உடையினால்தான் அழகு கூடும் என்பது பிரமை.

● நாட்டு நிலவரம், கல்ச்சர், ஆர்ட், டான்ஸ் இந்த விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவும். தங்குதடையில்லா மல் பேசக் கற்றுக் கொள்ளுங்கள். இன் றைய மாடல்கள் வெறும் அழகுப் பெட்டகமல்ல; அறிவுப் பெட்டகமும் கூட!

● சருமப் பாதுகாப்பு, கை கால் நகங் களைச் சீராக வெட்டி பாலீஷ் போட்டு பளிரென்று வைத்துக் கொள்வது, சரியான போஸ்ச்சரில் நின்று உட்கார்ந்து, நடப் பது போன்றவற்றை பிராக்டீஸ் செய் வது, பற்களை வெண்மையாக முத்து போலப் பராமரிப்பது... இதெல்லாம் செய்தாலே நீங்கள் மாடல்தான்!

● ஒருவித ஸ்ட்ரெஸ்ஸில் எப் போதும் இருப்பதைக் கைவிடவும்.

● மாடலாக இருந்தால் கேட்வாக் பண்ண வேண்டும் என்ற அவசிய மில்லை. ஹோம்மேக்கர் மாடலாக இருக்கலாம். நீங்கள், டீச்சராக, வக்கீ லாக, பிஸினஸ் வுமனாக... எந்தத் துறை யில் இருந்தாலும் மாடலைப் போல வசீகரமாக இருக்கலாம்.

● நல்ல பர்ஸனாலிட்டியுடன் இரக்க மான குணம், பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொண் டால் நீங்கள் மாடல் மாத்திரமல்ல... ரோல் மாடலாகவும் ஆக வாய்ப்புண்டு. (மாடல்களே மிஸ் வேர்ல்ட், மிஸ் யுனிவர்ஸ் டைட்டில் வின் பண்ணும் போது, 'மதர் தெரஸாவாக ஆசை' என்று சொல்லித்தான் நைஸாக வெற்றி பெறு கிறார்கள்.)

- லதா சேகர்



பா.ம.க. தாக்கல் செய்த நிழல் பட்ஜெட், அன்பழகன் தாக்கல் செய்த நிஜ பட்ஜெட் ஆகியவற்றைக் குறித்த தமது விமர்சனங்களை வைக்கிறார் பொருளாதாரக் கட்டுரையாளரான எஸ்.கோபாலகிருஷ்ணன்.

நிழல்:

மேல்நாடுகளில், முக்கியமான எதிர்க் கட்சி நிழல் அரசாங்கம் நடத்தி, அரசின் குறைகளை எடுத்துச் சொல்வது மட்டுமல்லாமல், நிழல் நிதிநிலை அறிக்கையை பட்ஜெட்டுக்கு முன் கொடுத்து, ஜனநாயகத்தை மேலும் மெருகேற்றும். இப்படிப் பட்ட ஆக்கபூர்வமான காரியங்களை இந்திய எதிர்க்கட்சிகள் செய்யாதா என்ற ஏக்கத்தைத் தீர்த்து வைக்கிறது பாட்டாளி மக்கள் கட்சி. டாக்டர் ராமதாஸுக்கு முதலில் ஒரு 'பொக்கே' கொடுப்போம்.



● ராமதாஸ்

ஓர் அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் முன்னர், சமூகத்தின் எல்லாப் பிரிவினருடனும் கலந்துரையாடல் நடத்துவது மட்டுமல்லாமல், தோழமைக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் ஆகியவற்றையும் கலந்தாலோசிக்க வேண்டும் என்கிறது பா.ம.க. ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கை எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு பத்து டிப்ஸ் கொடுத்திருக்கிறார்கள். அதில் மிக, மிக முக்கியமானது, உற்பத்திக்கு உதவாத செலவினத்தைத் தவிர்த்து, அதன் மூலம் விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்பது. நேரடியாக இலவசத் திட்டங்களைக் கைவிட வேண்டுமென்று சொல்லக்கூடிய துணிவு பா.ம.க.வுக்கு இன்னமும் வராததைப் புரிந்துகொள்ள முடிகிறது. சமீபத்திய கருத்தாக்கம் அவுட்கம் பட்ஜெட் (outcome budget). ஒவ்வொரு துறையிலும் அரசு செய்யும் செலவு என்ன தாக்கங்களை விளைவிக்கிறது என்று சொல்வதுதான் அவுட்கம் பட்ஜெட். மத்திய அரசு 2006ம் ஆண்டிலிருந்து, இதுபோன்ற அவுட்கம் பட்ஜெட்டை வெளியிட்டு வருகிறது. தமிழக அரசும் இதைச் செய்ய வேண்டும் என்கிறது பா.ம.க. வரி ஏய்ப்பு, வருவாய் இழப்பு ஆகியவற்றைத் தடுக்கவும், தவிர்க்கவும் பல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தில் 48 லட்சம் பேர் வேலை

இப்படிப்பட்ட ஆக்கபூர்வமான காரியங்களை இந்திய எதிர்க்கட்சிகள் செய்யாதா என்ற ஏக்கத்தைத் தீர்த்து வைக்கிறது பா.ம.க.



நிழலும் நிஜமும்

–பட்ஜெட் பரபர

வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டுக் காத்திருப்பதையும் வருடம் ஒன்றுக்கு 14,000 பேருக்கே மாநில அரசு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்புள்ளதையும் வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறது நிழல் அறிக்கை. மாநிலத்தில் செயல்படும் பத்து மத்திய அரசு திட்டங்களின் மூலம், வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்கிற யோசனையையும் சொல்கிறது. இது மட்டுமல்லாமல் இருபது சிறு, குறுந்தொழில்களைப் பட்டியலிட்டு, அவற்றை ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்பை அதிகரிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆட்சியில் இல்லாத நிலையிலும், இது போன்ற நிதிநிலை அறிக்கையை வெளியிடுவதால், மிகுந்த கவனம் எடுத்து, மாநிலத்தின் வருவாய், மற்றும் செலவுக் கணக்கில் கிட்டத்தட்ட நிஜ பட்ஜெட்டில் உள்ளதைப் போன்ற புள்ளிவிவரங்களைக் கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது. நூற்றுக்கும் மேற்பட்ட தலைப்புகளில், மக்கள் பிரச்னைகளையும், திட்டங்களையும் எடுத்து வைத்து தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சி, கூட்டுறவு, போக்குவரத்து, குடிநீர்ப் பிரச்னை, மின்சாரம், சுகாதாரம், கல்வி, நெசவாளர் என்று எல்லாத் துறைகளிலும் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பட்டியலிட்டிருக்கிறார்கள். பா.ம.க. ஆட்சியில் இருப்பது போன்ற நிலையை அனுமானித்து, நிழல் அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். மாநிலத்தின் வருவாயைக் கணக்கில் கொண்டு ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதையும் சொல்கிறார்கள்.

உயிர்க் கொள்கையான பூரண மது விலக்கை வலியுறுத்துகிறது நிழல் அறிக்கை. மதுவிலக்கை அமுல்படுத்தினால், மாநிலத்தின் வருவாய் குறைந்து

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Weekly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No. 12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No. 12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2009

Lakshmi Natarajan
Publisher

திட்டச் செலவுகளுக்கு நிதி கிடைக்காதென்று சொல்லப்படும் வாதத்தை உடைக்கிறது! ''மதுவின் மூலம் மாநிலத்துக்குக் கிடைக்கும் வருமானம் சுமார் 14,000 கோடி. மத்திய அரசின் வருவாயான சேவை வரியிலிருந்து மாநிலத்துக்கு வரவேண்டிய பங்களிப்பை அதிகரித்தல், வரிநிலுவையை வசூலித்தல், விற்பனை வரி சீர்திருத்தம், முத்திரைத்தாள் பதிவுக் கட்டணத்தைச் சீரமைத்தல், வாகன வரி சீர்திருத்தம், வரியில்லா வருவாய்ப் பெருக்கம், செலவுக் குறைப்பு நடவடிக்கைகள் போன்றவற்றில் இந்த 14,000 கோடியை ஈடுசெய்ய முடியும்'' என்று நெற்றியடியாகச் சொல்கிறார்கள். மணல் கொள்ளையைத் தடுக்க 'இரண்டாவது விற்பனை' என்ற முறை அடியோடு தவிர்க்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால், இடைத்தரகர்களிடம் குவியும் கோடிகள் அரசுக்கு வரும் என்பதையும் அழுத்தமாகச் சொல்கிறார்கள். பூரண மதுவிலக்குடன் குஜராத் மாநிலம் உபரி

நிஜம்

அன்பழகன் தாக்கல் செய்த மாநில பட்ஜெட், வோட்டுக்களைக் குறிவைத்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. பா.ம.க.வின் நிழல் பட்ஜெட்டில் உள்ள ஆக்கபூர்வமான யோசனைகளை மருந்துக்கும் ஏற்கவில்லை!

நமது வீட்டு அஞ்சறைப் பெட்டியிலிருக்கும் எல்லா பொருட்களுக்கும் வரிச் சலுகை வழங்கி விட்டார்கள், கிட்டத்தட்ட இரண்டு டஜன் பொருட்களுக்கு வரிச்சலுகை அல்லது வரி ஒழிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் நூறு கோடி ரூபாய் வருவாய் இழப்பு. ஆனால் இந்தச் சலுகைகள் மக்களைச் சென்றடைகிறதா என்றால் 'நோ' என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மொத்த மற்றும் சில்லறை வணிகர்களைக் கட்டுப்படுத்தும் தைரியம் எந்த அரசுக்கும் இருப்பதில்லை. பெட்ரோல், டீசல் விலை குறைப்பின் பயன் எல்லா நிலையிலும் பிரதிபலிக்கவில்லை.

✱அன்பழகன்



எதைச் சொல்வது, எதை விடுவது என்று திணறும் அளவுக்கு சலுகைகளும், திட்டங்களும், அறிவிப்புகளும் அமைந்திருக்கின்றன. ' வருவாயைப் பெருக்க மதுவை விட்டால் வேறு வழியில்லை என்ற நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருப்பது கொடுமை.

எல்லோரையும் கவனத்தில் எடுத்துக் கொண்ட அன்பழகன் [கலைஞர்?] நெசவாளர்களின் துயர் துடைக்கத் திட்டம் எதுவும் அறிவிக்காதது ஏன்? மேலும், உலக உருக்கம் மற்றும் மின்வெட்டு காரணமாக தமிழ்நாட்டில் சிறு, குறுந்தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்குத் தக்க நிவாரணம் இல்லை. ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. கரும்பு விவசாயிகளின் கோரிக்கையைக் கவனத்தில் எடுத்திருக்கலாம். பயிர்க்காப்பீடு, காப்புறுதித் திட்டம், பயிர்க்கடன் வட்டி ரத்து போன்றவை பாராட்டத்தக்கவை. மற்றபடி புதிய வரிச்சுமை ஏதுமில்லை என்ற அளவில் மக்கள் தற்காலிகமாகத் திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

- கௌசி

பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதையும் குறிப்பிடுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்வு இல்லாமல் ஆளும்கட்சி பா.ம.க.வின் யோசனைகளைப் பரிசீலித்தால் எதிர்காலத் தலைமுறை அவர்களை வாழ்த்தும்.

தங்கள் கருத்துக்களை எடுத்துக் கொள்கிறார்களா, புறந்தள்ளுகிறார்களா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், தொடர்ந்து நிழல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்யும் பா.ம.க.வின் அணுகுமுறை, ஜனநாயகத்தை இன்னமும் வலுப்பெறச் செய்யும். இந்த முயற்சியில் மருத்துவர் ராமதாஸுக்கு பெருமளவில் உதவியாக இருக்கும், பா.ம.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ராமதாஸுக்கும் மலர்ச் செண்டு தருவோம்!

- ப்ரியன்

''போரின் கொடூரத்தால் இந்தியா வந்த ஒரு இலங்கைத் தமிழ்ப் பெண், வந்த இடத்தில் இருப்பு கொள்ளாமல் மீண்டும் இலங்கைக்குத் திரும்பிப் போக ஆசைப்படுகிறாள். அவளின் ஆசைக்கு எதிராக ஏராளமான யதார்த்தங்கள் இடையூறு செய்கின்றன. அவற்றையெல்லாம் மீறி தன் சொந்தங்களோடு எப்படி கைகோக்கிறாள் என்பதுதான் 'புலம் ஈழம்' படத்தின் கதை. தமிழ்நாட்டுத் தமிழில் பத்து வார்த்தைக்கு ஆறு ஆங்கில வார்த்தைகள் கலப்போம். ஆனால், ஆங்கிலமே கலக்காத சுத்தமான இலங்கைத் தமிழில் பேசி நடிப்பது எனக்குச் சவாலாகவே இருந்தது'' பேசிக்கொண்டே போகிறார் 'புலம் ஈழம்' குறும்பட நாயகி ஸ்வேதா. மல்லி, குட்டி என்ற இரண்டு குறும்படங்களில் நடித்ததற்காக இருமுறை தேசிய விருது பெற்றவர். இரண்டு சர்வதேச விருதுகள் என... விருதுகளின் கனம் கூடிக் கொண்டே போகிறது இவரது தோளில். போதாததற்கு 'புலம் ஈழம்' குறும்படத்தில் 'சிறந்த நடிப்பு' என்ற பரவலான பாராட்டு வேறு.

அண்ணா பல்கலைக்கழகத்தில் இரண்டாமாண்டு பொறியியல் படிக்கும் ஸ்வேதாவை ஒரு மாலையில் சந்தித்தோம்...



ஏன் குறும்படங்கள் மட்டும்...?

''நிறைய காரணங்கள் இருக்கு. எனக்குப் படிப்புதான் முக்கியம். சின்ன வயசுல பள்ளியில படிச்சுக்கிட்டு இருக்கும்போதுதான் 'குட்டி', 'மல்லி' திரைப்படங்கள்ல நடிச்சேன். அப்ப கூட அதிக நாள் லீவு போடாத மாதிரி, முக்கால் வாசி விடுமுறை நாட்களிலேயே ஷூட்டிங் முடியும்படி பார்த்துக்கொண்டேன். பத்தாவது முடித்த பிறகு முழுமூச்சாக படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக இரண்டு வருடங்கள் சினிமாவிலேயே நடிக்காமல் இருந்தேன். இப்போதும் அப்படித்தான். படிப்புக்கு இடைஞ்சல் வராத மாதிரி கல்லூரி விடுமுறை நாட்களில்தான் படப்பிடிப்பில் கலந்து கொள்கிறேன்.

தமிழ் சினிமாக்களில் ஹீரோயின்களை ஒரு கிளாமர் பொம்மையாகத்தான் பார்க்கிறார்கள். நடிப்பெல்லாம் இரண்டாம் பட்சம்தான். ஏதோ வந்தோமா ஒரு ரெண்டு டான்ஸ் பண்ணினோமா, ஐந்து சீன்ல வசனங்கள் பேசினோமா அதோட முடிஞ்சாச்சு என்ற நிலைமைதான். அப்படி நடிப்பதற்கு நான் தயாராக இல்லை.''

நயன்தாரா, த்ரிஷா போல டாப் தமிழ் கதாநாயகியாக வலம்வர வேண்டும் என்ற எண்ணம் இல்லையா?

''நிச்சயம் இல்லை. நடிப்பை நடிப்புக்காக மட்டுமே செய்ய ஆசைப்படுகிறேன். நடிப்பு என்பது சங்கீதம், நாட்டியம் போல ஒரு கலை. அந்தக் கலையை நான் ரொம்ப நேசிக்கிறேன். பணத்துக்காகவோ, புகழுக்காகவோ, அந்தக் கலையைப் பழக வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதுமே வராது. இதோ கெமிக்கல் இன்ஜினீயரிங் படித்துக்கொண்டிருக்கிறேன். இந்தப் படிப்பை நல்லபடியாக முடித்து ஒரு கெமிக்கல் இன்ஜினீயராக வேலை பார்க்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்!''

குட்டி...? புலம் ஈழம்...?

''என்னோட நடிப்பில் நிச்சயம் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அனுபவமும், வயதும் கொடுத்த ஒரு முதிர்ச்சி என்று கூடச் சொல்லலாம். மற்றபடி நடிப்புக்

கலை என்பது அப்படியேதான் இருக்கிறது.''

மறக்க முடியாத பாராட்டு?

''நான் ஐந்து வயதுச் சிறுமியாக இருந்த போது என்னை முதன்முதலாகப் பார்த்து விட்டு, இயக்குநர் பாரதிராஜா என் அப்பா விடம், 'உங்க பொண்ணு கலைத்துறையில பெரிய ஆளா வருவா' என்று சொன்ன வார்த்தைகளை மறக்க முடியாது. அதைப் போலவே நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும் போது, ஒரு பள்ளியில் அட்மிஷனுக்காகச் சென்றிருந்தோம். அங்கிருக்கும் டீச்சர்ஸ், 'படத்தில் நடித்திருப்பதை பிரின்ஸிபாலி டம் சொல்லிவிடாதே. நீ ஒரு நடிகை எனத் தெரிந்தால் இந்தப் பள்ளியில் இடம் கிடைக்காது' எனச் சொன்னார்கள். அதைப்போல அவர்களிடம் சொல்ல வில்லை. சரியாக ஒரு வருடத்தில் அப்படத்தில் நடித்ததற்காக தேசிய விருது கிடைத்தது. அதற்கான அறி விப்பு வந்ததும் பள்ளி முதல்வர் அந்தச் செய்தியைக் கேட்டு ரொம்ப சந்தோஷப்பட்டு வாழ்த்தி யதையும் மறக்க முடியாது.''

ஈழப் பிரச்னையைப் பற்றி நீங் கள் என்ன நினைக்கிறீர்கள்?

''இந்தப் படத்தில் நடிக்கும் வரை இலங்கைவாழ் தமிழர்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்னையைப் பற்றி நான் அவ்வளவாக அறிந்திருக்க வில்லை. இப்படத்தில் நடித்த பிறகுதான் அவர்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்னைகளைப் பற்றியும், அவர் களது போராட்டம் நிறைந்த வாழ்க்கை முறையைப் பற்றி யும் தெரிந்துகொண்டேன். போரும், ரத்தமுமில்லாத ஒரு வாழ்வு, தேசம்... அவர்களுக் குக் கிடைக்கட்டும்.''

- நளினி சம்பத்குமார்

அட்டை, படங்கள் :

ஸ்ரீஹரி



''மனசு இலகுவா இருக்கறப்போ கையும் சுலபமா பேசும்'' என்கிறார் எண்பது வயதை சமீபத்தில் எட்டியுள்ள வயலின் வித்வான் டி.என்.கிருஷ்ணன். கலர்ஃபுல் கர்நாடிக் மியூசிக் உலகின் அபூர்வ பிளாக் அண்ட் வொயிட் கலைஞர்! கலப்பில்லாத சம்பிரதாய சுத்தத்துக்காக அனைத்து வட்டாரங்களிலும் அங்கீகாரம்; அள்ளிச் சேர்த்த பட்டங்கள் - எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த வயதிலும் துல்லியம் தப்பாத வாசிப்பு... எப்படி முடிகிறது?

''இப்பவும் தினமும் சாதகம் பண்றேன். சின்ன வயசுல இருக்கற உடல் வலிமை இப்போ இருக்காது; அதனாலேயே ஒரு நாள் வாசிக்கலைன்னா கூட மறுநாள் சிரமம் அதிகமா தெரியும். சாப்பிடறது, வெளியில போறது, நிகழ்ச்சிகள் ஒத்துக்கறது என்று எல்லாத்துலயும் உடல் நிலைக்கு ஏற்ப நிர்ணயமா யோசிச்சு செயல்படற மாதிரிதான் சங்கீதத்திலேயும்! மனசுக்கு முதல்ல தெரியணும் கை பேசுமா என்று...''

கர்நாடிக் மியூசிக்கின் யூ.எஸ்.பி. (Unique Selling Proposition) பற்றி இளம் கலைஞர்கள் அதிகம் பேசும் இக்காலத்தில் கிருஷ்ணனின் கருத்து என்ன? அதன் USP எதுவென்று கருதுகிறார்?

''அது மார்க்கெட்டிங் சொற்றொடர் இல்லையா...?'' என்று முதலில் இலேசாக ஆட்சேபிக்கிறார். பிறகு, ''விச்ராந்தி! விச்ராந்திதான் அதன் தனிப்பெரும் குணாதிசயம்'' என்கிறார் நிதானமாக. ''முன்பெல்லாம் நிறைய கீர்த்தனைகளைப் பாடம் பண்ணிப் பாடமாட்டா... எவ்வளவு பெரிய வித்வானானாலும் சில குறிப்பிட்ட பாட்டுகள்தான். அவற்றையே இன்னும் ஆழமா பாட முடியுமான்னு பார்ப்பா. கற்பனையிலேயும் ஒரு ஆழமும் நிதானமும் இருக்கும். ஒரு பாட்டை எவ்வளவு தூரம் ஒரு கலைஞர் உள்வாங்கியிருக்கார் என்கிறதைப் பொறுத்து அவரோட மனோதர்மமும் பெருகும். அது இன்றைக்கு மாறியிருக்கு. ஆனா, அதுதான் நம்ம சங்கீதத்தோட பலம் - அந்த ஆழம், நிதானம், தேடல். இன்னைக்கும் பைரவி வர்ணம் வாசிக்கறப்போ புதுசா ஒரு நுணுக்கமோ அழகோ எனக்குத் தென்படறது.''

இந்த விச்ராந்தியை



விச்ராந்தியைத்

அவர் எவ்வகையில் தமது வெற்றிக்குக் கையாண்டாராம்...?''இன்னமும் தேடிண்டிருக்கேன்...'' என்கிறார்! ''அறுபத்தஞ்சு வயசுக்கப்புறம்தான் ஓரளவு திருப்தி ஏற்பட்டுது. இன்னும் முழுசா வெற்றி அடைஞ்சுட்டதாச் சொல்லமாட்டேன்.''

பல வயலின் வித்வான்கள் பாதியிலேயே பாதை மாறி வாய்ப்பாட்டுக்குப் போய் விடுகிறார்களே? பலர் தாங்களே பாட்டு இயற்ற ஆரம்பிக்கிறார்களே? எவ்வளவுதான் சிறப்பாக வாசித்தாலும் சாஹித்யங்களை (பாடலின் சொற்களை) வாத்தியத்தில் 'உச்சரிக்க' முடியாது என்பதால் ஏற்படும் விளைவா...? அவருக்கு இத்தகைய ஏக்கங்கள் ஏற்பட்டதுண்டா?

''ஏக்கங்கள் இல்லவே இல்லை!'' என்கிறார் தீர்மானமாக. ''சாஹித்யம் தெரிஞ்சு வாசிக்கறப்போ கூட நான் அதன் அர்த்தத்தை நினைச்சுண்டிருக்க மாட்டேன்... அது பைரவியோ தோடியோதான். அதிலேயே ஒரு பூரணத்துவம் இருக்கு. அந்த உயர்வைப் புரிஞ்சுக்க, ஒரு தோடியை மட்டுமே முழுசா தெரிஞ்சுக்க, இன்னொரு ஜன்மம் வேணும்! தம்பூராவில் சுருதியை நன்னா சேர்த்தாச்சுனாலே போதும், அந்த சுருதிக்கு ஃபிடிலையும் நன்னா சேர்த்து, 'க'ன்னு காந்தாரத்தைப் பிடிச்சாச்சுனாலே, அதிலேயே எல்லாம் அடங்கிடும். அந்த நிறைவு கிடைக்காதபோதுதான் வேற ஏதாவது பண்ணத் தோணும். இதோ இப்போது கூட, வாசிக்காத சமயத்துலகூட மை மைண்ட் இஸ் வித் மியூசிக் - எப்போதும் சங்கீதத்தோடதான் இருக்கு. இந்தத் தன்னுணர்வு வந்துடுத்துன்னா அப்புறம் வாய்ப்பாட்டு பாடணும்னு தோணாது... சாஹித்யம் பண்றது, பாட்டு போடறது எல்லாம் ரொம்பப் பெரிய சமாசாரம். மும்மூர்த்திகள் போன்ற

தேடி...

மகான்கள் அதுக்குன்னே பிறந்தா. அதுக்காக நான் பிறந்திருந்தா எந்த முயற்சியும் இல்லாம அப்போதே அதுக்குப் போயிருப்பேன். பகவான் என்னை அதுக்காகப் படைக்கலை.''

சரி, ஒரு பக்கவாத்திய வயலின் கலைஞர் எப்போ ஸோலோ வாசிப்புக்கு மாறலாம்...?

''தனித்தன்மை உருவாகணும். நிறைய பெரிய கலைஞர்களுக்குப் பக்கவாத்தியமா வாசிக்கணும். ஒரு தலைசிறந்த பக்கவாத்தியக் கலைஞராய் இருக்கிறவரும் தன்னளவிலே முழுமையானவர்தான். அப்படி ஆகிவிட்டா, அப்புறம் ஸோலோ வாசிக்கலாம், தாராளமா.''

இத்தனை வித்தையையும் பெயர் சொல்லக்கூடிய சில சிஷ்யர்களுக்குக் கற்றுத்தரவில்லையே? என்ற நம் ஆதங்கத்துக்கு அதிக வருத்தப்படாமல் பதில் சொல்கிறார் டி.என்.கிருஷ்ணன்.

''விஜியும் ஸ்ரீராமும் (அவரது மகளும் மகனும்) வாசிக்கிறா. பொறுமையா உழைக்கிறவர்கள் வரமாட்டேன் என்கிறார்களே! கற்றுத்தர இப்போதும் நான் தயார். ஆனால், முதலும் இறுதியுமான இலக்கு கச்சேரி பண்ணுவதுதான்னு வரக்கூடாது!''

''ஐந்து வயதில், அதன் அருமை தெரியாமலே ஃபிடிலை வாசிக்க ஆரம்பிச்சேன். இதுல மனசுக்குப் பிடிபடாத அழகு இருக்குன்னு தெரியவே நாளாச்சு. இது உசத்தி அப்படின்னு எண்ணம் விழுந்து ரசிக்க ஆரம்பிச்சேன்... இன்னமும் முழுசா அதைத் தெரிஞ்சுக்கல்லை, அனுபவிச்சுடலை...'' நெகிழ்ந்து பேசிக்கொண்டே போகிறார்...

சந்திப்பு, படம் : **சீதா ரவி**



கல்கி



2009 மார்ச் 1
ஸர்வதாரி மாசி 17
மலர் : 67
இதழ் : 31


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

வரியின்றி வருத்தும் பட்ஜெட்!

லாலு பிரசாத் யாதவ் ரயில்வே பட்ஜெட்டை வழங்கிய அன்றே மிகப் பெரிய ரயில் விபத்து நடந்திருக்கிறது! ரயில்வே துறை 19,230 கோடி ரூபாய் லாபம் ஈட்டியும், அச் செய்தியின் மகிழ்ச்சியை இவ்விபத்தும் அதில் பதினைந்து பேரின் மரணமும் கணிசமாகக் குறைத்துவிட்டன. தனியார்மயமான வேகத்தில் லாபம் பார்த்தாலும், அதே வேகத்தில் விபத்துகள் குறையவில்லை என்பது கவலைக்குரியது. ரயில்களின் எண்ணிக்கை அதிகரித்தால் போதாது; சேவையின் தரம் உயர வேண்டும். ரயில் பாதைகள் பெருகினால் போதாது; சுகாதாரம் மேம்பட வேண்டும். புதுப் புது ரயில்வே திட்டங்களை அறிவித்துக்கொண்டே போவதில் அர்த்தமில்லை; அவை உரிய காலத்துக்குள் முடிவுற்று ரயில்கள் இயங்க வேண்டும். இல்லாவிடில் திட்டச் செலவு கூடிக்கொண்டே போகும். லாபத்தில் நஷ்டம் ஏற்படும்!

புதிய வரிகள் விதிக்கப்படாததால் மட்டுமே ஒரு பட்ஜெட் சிறந்த பட்ஜெட் ஆகிவிட முடியாது. இதற்கு உதாரணமாகத் திகழ்கின்றன இவ்வாண்டின் தமிழக பட்ஜெட்டும் மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டும்.

தமிழக பட்ஜெட்டில் நிதியமைச்சர் அன்பழகன் சில ஆரோக்கியமான மாற்றங்களை அறிவித்துள்ளார். விவசாயக் கூட்டுறவுக் கடன்களை கண்ணை மூடிக்கொண்டு ரத்து செய்யாமல், காலவரையறைக்குட்பட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தினால் வட்டித் தொகை ரத்தாகும் என்கிற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. விவசாய நிலத்துக்கான வரி






எளிமைப்படுத்தப்பட்டுச் சீரமைக்கப்பட்டுள்ளதும் முற்போக்கான, துணிகர முடிவு.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரவே, வழக்கமாகிப்போன இலவசங்களையும் புதிய சலுகைகளையும் வழங்க, தமிழ்நாடு பட்ஜெட் கோடி கோடியாக நிதி ஒதுக்கியுள்ளது. ஆனால், அரசு செலவினங்களைக் குறைக்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பது இந்த பட்ஜெட்டின் மிகப் பெரிய குறைபாடு. அதனால் 11,823.64 கோடி ரூபாய் துண்டு விழுகிறது! அரசு வருவாயைக் கூட்டுவதற்கான முயற்சிகளுள் ஒன்றாக, டாஸ்மாக் வருமான குறியீடு இரண்டாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால், இன்னும் எத்தனை தமிழர்கள் மதுவுக்கு அடிமை ஆவார்கள் என்று கணக்குப் போட்டால் நெஞ்சம் பதறுகிறது!

மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டிலும் சிக்கன நடவடிக்கைகளுக்கான எந்த முயற்சியும் அறிவிக்கப்படவில்லை. அப்படியொரு கலாசாரம் நமது அரசிடம் கிடையாது என்பது மீண்டும் நிரூபணமாகியுள்ளது. இவ்வாண்டு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் உள்ளது நமது நாடு. அதை உத்தேசித்தாவது, உற்பத்திக்கு உதவாத டாம்பீகச் செலவுகளைக் குறைத்து, திட்டச் செலவுகளை அதிகரித்திருக்கலாம். பட்ஜெட் இதற்கு நேர்மாறாக உள்ளது. ராணுவச் செலவுக்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டிருப்பதுடன் 1,31,317 கோடி ரூபாய் மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது! ஏற்கெனவே 65,300 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடியான நிலையில், புதிதாகப் பல கோடிகள் விவசாயக் கடனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் வோட்டுகளாக மாறும் என்பது எதிர்பார்ப்பு!

செலவுகளும் குறையவில்லை, பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. ஆனால், புதிய வரி விதிப்பு இல்லை! எத்தனை காலத்துக்கு அரசு இப்படி சமாளிக்க முடியும்? தேர்தல் முடிந்ததுமே மத்திய அரசு கண்மூடித்தனமாக வரிகள் விதிக்கும். மாநில அரசும் அதற்குச் சளைக்காமல் புது வரிகளைப் புகுத்தும். இறுதியில் சுமையைத் தாங்கப் போவது வரி செலுத்தும் சராசரி இந்தியன்தான்!

குடியரசு



திரை விமர்சனம்

அமைச்சர் ஒருவர் செய்த ஊழலை அம்பலப்படுத்தும் துடிப்புமிக்க ஒரு பத்திரிகையாளர், அந்த அமைச்சர் கொடுக்கும் உபாதைகளைச் சமாளித்து தன் சாமர்த்தியத்தால் ஊழலை உலகுக்கு எப்படி வெளிச்சம் போட்டுக் காண்பிக்கிறார் என்பதுதான் கதை.

ப்ளஸ்:

★ சமூகப் பிரச்னையைக் கதையாகக் கையிலெடுத்திருக்கும் துணிச்சல்.
★ அதற்கு ஏற்றாற்போல கதாபாத்திரத் தேர்வு
★ விக்னேஷ்வரனின் பொறுப்பான நடிப்பு
★ வேண்டிய மட்டும் ஒதுங்கியே இருக்கும் பின்னணி இசை
★ குத்துப்பாட்டு, ரெட்டை அர்த்த ஜோக் கலக்காத துணிவு
★ துருத்திக்கொண்டு தெரியாத ஹீரோயிஸம்.
★ வியக்கவைக்கும் சாமுராய் வாள் சண்டைக் காட்சி...

மைனஸ்:

★ தொங்கலான திரைக்கதை
★ சலிப்பேற்படுத்தும் வசனங்கள்
★ எரிச்சலூட்டும் இசை
★ மனத்தோடு ஒட்டாத பாடல்கள்
★ கிக்லிபிக்லிதனமான க்ளைமாக்ஸ்
★ திணிக்கப்பட்ட காலேஜ் காட்சிகள்
★ நிழல்கள் ரவியின் பாத்திரத்தில் வானம் தெரியும் அளவுக்கு ஓட்டை.

குடியரசு - ஆகாயக் கோட்டை

- தேவிஸ்ரீ

ஆன்மீக உலகில் அற்புத நூல்

ஒரு யோகியின் சுயசரிதம்

பரமஹம்ஸ யோகானந்தர்

(AUTOBIOGRAPHY of a YOGI
by
PARAMAHANSA YOGANANDA)



20ஆம் நூற்றாண்டில் வெளியான
சிறந்த 100 ஆன்மீக நூல்களில்
ஒன்றானதும், 22 மொழிகளில்
மொழிபெயர்க்கப்பட்டதுமான
உள்ளங்கவர் மகாகாவியம்

Yogoda Satsanga Society of India

Monastic Visit

(யோகதா சந்நியாசிகள் விஜயம்)

இடம் : SRI RAMA KALYANA MANDAPAM
No. 24, Cathedral Garden Road, Behind Palmgrove Hotel,
(Gemini Circle), Chennai - 600 034.

தேதி : 27, 28 Feb to 1st March '09

அங்கத்தினராகவும். புத்தகங்கள் வாங்கவும். மேலும் விவரங்களுக்கும்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி / தொலைபேசி எண்கள்:

YOGODA SATSANGA DHYANA KENDRA
'Omkar' Apts., New No. 14 (Old No. 17), Rajarathinam Street, Kilpauk,
Chennai - 600 010. Ph : 044-3252 3665 Mobile : 94444 88051
e-mail : ysdk.chennai@gmail.com

யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா, ராஞ்சி-834 001. ✆ : 0651-2460071
யோகதா சத்சங்க தியான கேந்திரம், மதுரை ✆ : 98421 79797
கோவை ✆ : 93456 23940 சேலம் ✆ : 92452 52212 திருச்சி ✆ : 97517 89314
தஞ்சாவூர் ✆ : 94871 71787 நாகப்பட்டிணம் ✆ : 98430 67664
கடலூர் ✆ : 04142-292777 பாண்டிச்சேரி ✆ : 99944 73716
website : yssofindia.org ysdkchennai.org

RAE-4201

1950களில் கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் தலைமறைவாக இருந்த காலம். காவல் துறை அவர்களைத் தேடித் தேடிக் கைது செய்தது. ஆனால், காவல் துறையின் காதில் பூ சுற்றிவிட்டு தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் பலர். அதில் முக்கியமானவர் என்.கே.கிருஷ்ணன். காவல் துறைக்கு இவரது விஷயத்தில் என்ன சங்கடம் என்றால், கிருஷ்ணன், உள்துறை அமைச்சர் டாக்டர் பி.சுப்பராயனின் மருமகன். அவரது மகள் பார்வதியைத் திருமணம் செய்திருந்தார் கிருஷ்ணன். மருமகனும், மகளும் அவர்கள் மூன்று வயதுக் குழந்தையும்,



✱ டாக்டர் சுப்பராயன்



✱ காமராஜுடன்...

தலைமறைவு -

சுப்பராயனுடன் தங்கி இருந்தனர். எப்படியும் மனைவியையும் குழந்தையையும் பார்க்க கிருஷ்ணன் வருவார் என்று உள்துறை அமைச்சரின் வீட்டிலும் கண்காணித்தது காவல் துறை. ''உள்துறை அமைச்சர் என்று பார்க்காதீர்கள். எந்த நேரத்திலும் நீங்கள் என் வீட்டைச் சோதனை செய்யலாம். என்னையும் விசாரிக்கலாம்'' என்று காவல் துறைக்குச் சொல்லியிருந்தார் சுப்பராயன். வீட்டில் காவல் இருந்த காவலர்கள், கிருஷ்ணன் குழந்தையுடன் விளையாடுவார்கள். ஒரு காவல்காரர் குழந்தையிடம் ''அப்பா எங்கமா?'' என்று கேட்க குழந்தை, ''ரஷ்யாவில் இருக்கிறார்'' என்று சொல்லி விட்டது. இந்தத் தகவல் ரகசிய அறிக்கையாக மாறி, உள்துறை அமைச்சர் கைக்குச் சென்றது. அதைப் பார்த்த சுப்பராயன் மகளைக் கூப்பிட்டு விசாரித்தார். 'எனக்குத் தெரியாது' என்று அவர் சொல்ல, காங்கிரஸ் வட்டாரத்தில் 'சுப்பராயனைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும்' என்று குரல்கள் எழுந்தன. ''ஒரு உள்துறை அமைச்சராக என் கடமை என்னவென்று நான் அறிவேன். தேடப்படும் குற்றவாளியை வீட்டில் வைத்துக்கொள்வது என் பதவியின் அடிப்படையில் அல்லாமல்

தனிப்பட்ட முறையிலும் அது தவறு என்பதை உணர்ந்தவன். என்னை நம்புங்கள். இல்லையேல் இந்த நிமிடமே ராஜினாமா செய்கிறேன்'' என்று அறிக்கை விடவே விவகாரம் அமுங்கிப் போனது. ''கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மகனைக் காப்பாற்ற, முதல்வர் பதவியைக்கூட தவறாகப் பயன்படுத்தும் காலகட்டம் இது! சுப்பராயன் போன்றவர்களும் இந்தத் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது நாம் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டிய ஒன்று'' என்கிறார் எழுத்தாளர் ஜீவபாரதி. டாக்டர் பி.சுப்பராயன் மற்றும் அவர் குடும்பத்தினர் வாழ்க்கையை ஜீவபாரதி எழுத, கொங்கு நாடு அறக்கட்டளை 'குமாரமங்கலம் தியாக தீபங்கள்' என்ற புத்தமாக வெளியிட்டிருக்கிறது.

சுதந்திரத்துக்கு முன்பு சென்னை மாகாணத்தின் முதல்வராகவும் பதினேழு ஆண்டுகள் இருந்திருக்கிறார் சுப்பராயன். அண்ணாமலை பல்கலைக் கழகம் உருவாக, அரசிலிருந்து நிதி கொடுத்து உதவினார். ஊழியர் தேர்வுக்கு சர்வீஸ் கமிஷன், அறநிலையத்துறை, பிற்பட்டோருக்கு இட ஒதுக்கீடு என்று சுப்பராயனின் சாதனைகள் நிறைய. சுப்பராயன் மனைவி ராதாபாய் புரட்சிப் பெண்மணி. தாழ்த்தப்பட்டவர்களுக்காக பாடுபட்ட ராதாபாய், தம்மை 'அருந்ததியர் சுடு காட்டில் புதைக்க வேண்டும்' என்று உயில் எழுதி மறைந்தவர்.

டெய்ல்பீஸ்: தலைமறைவாக இருந்த கிருஷ்ணன், உடல் நலம் குன்றிப் போக, கட்சி அவரை சென்னை பொது மருத்துவ மனையில் சேர்த்தது. பின்னர் குணமான வுடன் காவல் துறை கண்ணில் மண் தூவி, மார்ச்சுவரிக்குப் போய், பிணம் போல் அவர் வெளியே தப்பி வந்தது சிலிர்க்க வைக்கும் மற்றொரு அத்தியாயம்!



* நேருவுடன் சுப்பராயன் (நடுவில்)

தலை நிமிர்வு !



* ராதாபாய்

" தாழ்த்தப்பட்டவர்களுக்காக பாடுபட்ட ராதாபாய் அருந்ததியர் சுடுகாட்டில் புதைக்க வேண்டும் என்று உயில் எழுதி மறைந்தவர்."

கொங்குநாடு அறக்கட்டளை வெளியீடு, 39.பி, நார்த் பெரேடு ரோடு முதல்வீதி, சக்கரபாணி காலனி, பரங்கிமலை, சென்னை - 16. போன் : 22333444

நூலின் பெயர் :
குமாரமங்கலம் தியாக தீபங்கள்
விலை : ரூ.250/-
பக்கங்கள் : 536

உலகம் முழுக்க ரிசஷன் நீடிக்கிற இக்காலகட்டத்தில் கூட, கிரிக்கெட்டுக்கு மட்டும் எந்தத் தோட்டத்தில் பணம் விளைகிறது என்று புரியவில்லை. உதாரணம் - ஐ.பி.எல். ஏலம். அதில் உள்ள நியாய தர்மங்கள்தான் எல்லோரையும் கலவரப்படுத்தியிருக்கின்றன. இதுவரை ஒரே அணியில் ஒரே சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த வீரர்களைத் தரம்பிரித்து, அதற்கேற்ற தொகை குறிப்பிட்டு, கலகம் ஏற்படுத்த வழிசெய்து விட்டார்கள். என்னைவிடப் புதிய வீரர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் என்னைக் கவலைக்குள்ளாக்கியது என்று, சென்ற வருடம் வாசிம் ஜாபர் பேசியது நினைவிருக்கலாம்.

இந்த வருடம் தோனியைக் காட்டிலும் பீட்டர்சனும் ஃபிளிண்டாஃபுக்கும் பெங்களூர், சென்னை அணி சார்பாக அதிகத் தொகை பேசப்பட்டுள்ளனர்.



மும்பை கேப்டன் என்கிற ஒரே காரணத்துக்காக சச்சினின் ஏல விலையைக் கட்டுப்படுத்திவிட்டார்கள். சென்றமுறை ஏலம் எடுத்துவிட்டதால் மீண்டும் தோனியை ஏலம் போடவேண்டியதில்லை. ஃபிளிண்டாஃபும் பீட்டர்சனும் உள்ள இங்கிலாந்து அணிதான் சென்ற இடங்களிலெல்லாம் தர்மஅடி வாங்குகிறது. தம் தாய்நாட்டுக்கே துரும்பைக் கிள்ளிப் போடாதவர்கள் சென்னைக்கும் பெங்களூருக்கும் என்ன படி அளக்கப் போகிறார்கள் என்று புரியவில்லை.

இந்திய அணியின் தவிர்க்க முடியாத வீரராக யூசுப் பதான் உருவாகி வருவது நல்ல அறிகுறி. ஸ்ரீலங்காவுடனான 20-20 போட்டியில் ஆட்டத்திலும் உடல்மொழியிலும் விவியன் ரிச்சர்ட்ஸை ஞாபகமூட்டினார் பதான். அவர்தான் இப்படி பபிள் கம்மை மென்று கொண்டே பந்துகளை அநாயசமாக எதிர்கொள்வார். பயந்தாங்கொள்ளி என்று இந்திய அணியில் இப்போது ஒருவரைக்கூட சொல்லமுடிவதில்லை. எல்லோரும் சிங்கத்தின் வாய்க்குள் தலையை நுழைக்கத் தயாராக இருக்கிறார்கள்.

நடந்து முடிந்த ஸ்ரீலங்கா தொடரில் சொல்லக்கூடிய விஷயங்கள் இரண்டு. ஒன்று - மோசமான நடுவர்கள். குறிப்பாக, ஸ்ரீலங்கா நடுவர்கள் இந்தத் தொடரில் செயலாற்றியவிதம் அவர்களுடைய நடுநிலைமையை ரொம்பவே சந்தேகம் கொள்ள வைக்கிறது. அதுவும் மூன்றாவது ஒருநாள் போட்டியில் சச்சினுக்கு வழங்கப்பட்ட எல்.பி.டபிள்யூ. சுத்த அநியாயம். கிரிக்கெட் விதிமுறைகள் தெரிந்த எவரும் அந்த அப்பீலுக்குக் கையை உயர்த்தியிருக்கமாட்டார்கள். நடுவர் என்கிற அடையாளத்தோடு மைதானத்தில் கால் வைக்கும் ஒருவர் ஒருதலைபட்சமாக நடந்துகொள்வது விளையாட்டுக்கு நல்லதல்ல.

இரண்டாவது - தில்ஷன். ஸ்ரீலங்காவுடனான 20-20 போட்டியில் தில்ஷன் கேப்டனாகச் செயல்பட்டவிதம் பார்க்க அலாதியாக இருந்தது. கிரிக்கெட் வீரர்கள் டென்ஷன் ஆகி உச்சஸ்தாயியில் கத்துவதை தெரு கிரிக்கெட்களில் பார்த்திருப்போம். அன்றைய தினம் வீரர்களின் ஒவ்வொரு பிழைக்கும் தில்ஷன் கோபத்தின் உச்சிக்குச் செல்வதும், வீரர்களைக் கடிந்து கொள்வதும், கையைக் காலை உதறுவதும் பார்க்க அவ்வளவு சுவாரசியமாக இருந்தது. கிரிக்கெட் களத்தில் இப்படியொரு கதாபாத்திரத்தைப் பார்த்து எவ்வளவு நாளாயிற்று! ●


இந்தியாவின்
ரிச்சர்ட்ஸ்!
ச.ந.கண்ணன்

மின்னல்கதைகள்

ரயில் வண்டியில் நானும் என் மனைவியும் அமர்ந்திருக்க, எதிரில் இரண்டு வயதுக் குழந்தையும் அதன் பெற்றோர்களும் அமர்ந்திருந்தனர்.

குழந்தை என் மனைவியிடம் ஒட்டிக் கொள்ள, தனது கைப்பையிலிருந்து பிஸ்கெட் பாக்கெட் ஒன்றை எடுத்து குழந்தையிடம் நீட்டவும், நான் 'தராதே' என்று பார்வையால் அதட்டினேன். அது அவளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்த, முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தாள்.

அடுத்த நிறுத்தத்தில் குழந்தையும் பெற்றோரும் இறங்கியதும் என் மனைவி கேட்டாள்.

''குழந்தை எவ்வளவு அன்பா என்கூட



புரிஞ்சுதுங்க

பழகிச்சு, ஒரு கவர் பிஸ்கெட் தந்தா குறைஞ்சா போயிடுவேன்!'' சற்று கோபமாகவே கேட்டாள் என் மனைவி.

''ரயில் பயணங்கள்ல சாப்பிடுற பொருள்ல மயக்க மருந்து தடவிக் குடுத்து பணத்தையும் பொருளையும் திருடிக்கிட்டு போற இந்தக் காலத்துல, நீ பிரியமா பிஸ்கெட் தரப்போயி அதுல மயக்க மருந்து தடவியிருக்குமோன்னு ஒரு நிமிஷம் குழந்தையோட அப்பா அம்மா உன்னைச் சந்தேகப்பட்டுட்டா நிலைமை என்னாகும் யோசிச்சுப் பாரு. அதான் தராதேன்னு தடுத்தேன்!'' என்றபோது, அவள் முகத்தில் பரவிக்கிடந்த கோபம் விலகி, புன்னகை படர ஆரம்பித்தது. ●


ஐயன்புரம் பால்ராசய்யா

உங்களைப்

இணைய தளத்தில் www.vaangapazhahalam.com என்ற வெப் சைட்டை உலவவிட்டான் மனோகர். மறுநாளே மலைபோல் வந்து குவிந்தன மின்னஞ்சல்கள்.

நிறைய கடிதங்கள் 'பெண்களுடன் பழக ஆசை!' என்று வந்திருப்பதைப்

பார்க்க ஆசை!



பார்த்து ஆச்சரியமானான் மனோகர். ஒரு பெண் பெயரில் மின்னஞ்சல் முகவரி உருவாக்கி, அதிலிருந்து பெண் எழுதுவது போல் ஒருவருக்குப் பதில் அனுப்பினான் மனோகர்.

மறுநாளே, 'உங்களைப் பார்க்க ஆசை, புகைப்படம் அனுப்பவும்' என்று கேட்டு பதில் வந்தது. மனோகர் சிரித்தான். 'இந்த அப்பாவியைக் கோடம்பாக்கம் அனுப்புவது' என்று முடிவு செய்து, வெளிகலா நாட்டு நடிகையின் புகைப்படத்தை வைத்து 'நீங்களும் இதுபோல் புகைப்படம் அனுப்பி வைக்கவும்' என்று அனுப்பினான்.

எதிர்பார்த்ததுபோல் பதிலும் புகைப்படமும் இமெயிலில் வர, யார் அந்த அப்பாவி என்று திறந்து பார்த்து அதிர்ந்தான்.

அது அவனது அப்பாவின் புகைப்படம். ●

சார் ரொம்ப கிரேட்!



ரோவரில் வேகமாகப் போகும்போது ஒரு சிறுவன் லிஃப்ட் கேட்டான். மறுத்து விட்டுப் பறந்தேன். சில நிமிடங்களில் மழை பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டது. பெரிதாகும் போலத் தோன்றியது. ரிவர்ஸ் எடுத்த நான், அந்தப் பையனை நெருங்கி ஏறிக்கொள்ளச் சொன்னேன். "சார் ரொம்ப கிரேட்" என்றான். ஆனால் அவனை ஏறிக்கொள்ளச் சொன்ன காரணம், அவன் கையில் பெரிய குடை இருந்தது. என் ஜாகைக்குப் பக்கத்தில் தான், அவன் செல்ல வேண்டிய இடம் என்பதால், அது வரை நான் மழையில் நனையாமல் இருக்க குடை பிடிப்பான் பாருங்கள்! ●

நெல்லை சுதா

உதிக்கின்ற செங்கதிர்!

ஸ்ரீ லலிதா மூன்றாம் பாகம்

ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத்தில் இருக்கக் கூடிய விஷயங்கள் வேதஸமானமானவை. அம்பாளைப் பற்றிச் சொல்கிறபோது, வேதப் பொருளாக இருக்கக்கூடியவள், வேதாந்த ஸமன்விதாவாக இருக்கக்கூடிய வள் என்று பலவிதமான அர்ச்சனைத் திருநாமங்கள் உண்டு.

வேதம் சொல்லக்கூடியதை, உபநிஷத் சொல்லக்கூடியதை சஹஸ்ரநாமத்திலே பார்க்கலாம். சஹஸ்ரநாமம் எப்போது வந்தது? தேதி சொல்ல முடியுமா?

அபிராமி பட்டர் என்றைக்குப் பாடினார் என்பதை, சரியாகத் துல்லியமாகச் சொல்ல முடியாவிட்டாலும் ஓரளவுக்குத் தேதி சொல்லலாம். இரண்டு நூற்றாண்டுக்குள் கணக்கிட்டுச் சொல்லலாம் - சரபோஜி மன்னன் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தார் என்று தோராயமாகச் சொல்லலாம்.

அருணகிரிநாதருடைய காலத்தை ஓரளவுக்குச் சொல்லலாம். அதிலே கூட கொஞ்சம் சிக்கல் இருக்கிறது.

ராமாயண, மஹாபாரத காலங்களை, யுகங்களை வைத்துக்கொண்டு கணக்கிட்டுச் சொல்ல முடியுமே தவிர, எந்த துவாபர யுகம்? எந்த திரேதா யுகம் என்று கேள்வி கேட்டுக்கொண்டே போனால் சிக்கல்தான்.

விஷ்ணு சஹஸ்ரநாமத்துக்குக் காலம் சொல்வதானால், பீஷ்மர் அதைச் சொன்ன தனாலே, பீஷ்மருடைய காலம் என்று சொல்லலாம்.

லலிதா சஹஸ்ரநாமத்தை அகஸ்தியர் சொன்னார் என்றால், அவருடைய காலம் என்பது எது? இன்றைக்கும் அகஸ்தியர் இருப்ப தாக அல்லவா சொல்கிறார்கள்?

யாரெல்லாம் அகஸ்தியரைப் பார்த்தார் கள் என்று கேட்டால் சொல்ல முடியாது! ரொம்ப சர்வசாதாரணமாக, ''ஆமாம், ஒரு மலை இருந்ததே! அங்கே பார்த்தேனே'' என்று யாரும் சொல்லப் போவதில்லை!

வ.வே.சு. அய்யர் அகஸ்தியரைப் பார்த்ததாகச் சொல்கிறார்கள். கல்யாண தீர்த் தத்திலே, அவர் பலமுறை அகஸ்திய ரோடு சம்பாஷணை நடத்தியதாகச் சொல்லப்படு கிறது. மிகப் பெரிய மகானாக இருந்த வ.வே.சு. அய்யரால் அகஸ்திய ரைப் பார்த் திருக்க முடியும். அந்த அளவுக்கு அவருக்கு சக்தி இருந்தது; அகஸ்தியரும் அவருக்குக் காட்சி கொடுக்கத் தயாராக இருந்தார்.

அப்படியானால் அகஸ்தியருடைய காலத்தை நாம் நிர்ணயம் செய்ய முடியாது என்றுதானே ஆகிறது! அகஸ்தியரின் காலத்தை நிர்ணயித்து அதன் மூலம் ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமத்தின் காலத்தை நிர்ணயிக்க முடியாது என்பதும் தெளி வாகிறது. ஹயக்ரீவரும் அகஸ்தியரும் உரையாடினார்கள் என்பது நமக்குத் தெரி யும். அந்த சம்பாஷணையினூடே என்ன வருகிறது தெரியுமா? ''இவ்வளவு நேரம் லலிதாம்பிகையின் பெருமைகளை, திருவர லாற்றை - லலிதோபாக்யானத்தைச் சொன் னீர்கள்... ஆனால் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமத் தைச் சொல்லவில்லையே?'' என்று அகஸ்தியர் ஹயக்ரீவரிடம் கேட்ப தாக வருகிறது.

''நீர் கேட்டால்தானே சொல்லு வேன்...'' என்று அதற்குப் பிறகு


சுதா சேஷய்யன்

தான் சொல்ல ஆரம்பிக்கிறார் ஹயக்ரீவர்.

- இப்படி அகஸ்தியரும் ஹயக்ரீவரும் சம்பாஷித்தது ஒரு காலகட்டம் என்றால், அதற்கு முன்பே ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் இருந்திருக்கிறது என்பது இதன் மூலம் ஊர்ஜிதமாகிறது. ஆனால் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன் என்பது தெரியாது. எப்படி அம்பாள் நம் சிந்தனைக்கு எட்டாத வளோ, அப்படியே அவள் திருநாமங் களைக் கொண்ட சஹஸ்ரநாமமும் 'இந்தக் காலத்தைச் சேர்ந்தது' என்று வரையறுக்க முடியாதது.

கம்பர் கற்பனைக்கு வேர்

சஹஸ்ரநாமத்தில் வந்ததைத்தான் பல மஹான்கள் பிற்காலத்தில் தங்கள் கிரந்தங் களில் - படைப்புகளில் - கையாண்டார்கள். - இது நூற்றுக்கு நூறு அல்ல, நூற்றுக்கு இருநூறு அல்ல, நூற்றுக்கு ஆயிரம் சதவிகி தம் உண்மை! இதற்கு இரண்டே இரண்டு எடுத்துக்காட்டுகள் தருகிறேன்:

கம்பர், சஹஸ்ரநாமத்தை ஆதாரமாகக் கொண்டு சிலவற்றைக் கையாண்டிருக் கிறார். ஓரிடத்தில், கைகேயியைப் பற்றிப் பாடவேண்டிய சூழலில், அவள் தன் நகை களையெல்லாம் களைந்து போட்டாள், கூந்தலில் சூடியிருந்த மலர்களையெல்லாம் தூக்கி எறிந்தாள் என்று சொல்லிக் கொண்டே வந்து, கோபா கிருஹத்துக்குள் போய் தசரத மஹாராஜாவுக்காக காத்திருக் கும் வேளையில், 'தன் நெற்றியிலிருந்த திலகத்தை அழித்தாள்' என்பார். அப்படிச் சொல்கிறபோது, 'மதியினில் மறுதுடைப் பாள் போல, அளகவாள்நுதல் திலகமும் அழித்தாள்' என்று குறிப்பிடுவார்.

சஹஸ்ரநாம சிந்தை இல்லாமல், நேரடி யாக இந்த வாசகத்தை மட்டுமே பார்த்தோ மானால், கொஞ்சம் நெருடலாக இருக்கும். பூர்ணிமை நிலவு. அந்தப் பூர்ணிமை நிலவில் இருக்கிற களங்கத்தைத் துடைப் பதைப் போல, தன் அளக வாள் நுதலில் உள்ள திலகத்தை அழித்தாள்! 'அளகம்' என்றால் முன்னுச்சிக் கூந்தல். 'வாள் நுதல்' - அழகான வளைந்த நெற்றி.

இதையேதான் சஹஸ்ரநாமத்தில் **அஷ்டமி சந்திர விப்ராஜத் அலிகஸ்தல ஷோபிதா** என்று சொல்லியிருக்கிறது. அஷ்டமி சந்திரன் போன்ற அழகான நெற்றி அம்பாளுடையது. அளகம் - கூந்தல் - அதிலே சுருண்டிருக்கிறது.

கைகேயி என்னதான் கோபத்தில் இருந் தாலும், அவள் தன் நெற்றித் திலகத்தை அழித்ததற்கு, 'சந்திரனில் உள்ள களங்கத் தைத் துடைத்ததுபோல' என்று உவமானம் சொல்லியிருக்கலாமா கம்பர்? என்று நமக்கு நெருடல் ஏற்படும்.


"இவ்வளவு நேரம் லலிதாம்பிகையின் பெருமைகளைச் சொன்னீர்கள். ஆனால் லலிதா சஹஸ்ரநாமத்தைச் சொல்லவில்லையே?"

ஆனால், எல்லா நாட்டுக் கதைகளிலும் நிலவிலே ஒரு உருவம் இருப்பதாகச் சொல்லப்படும்!

நாம் கூடச் சொல்லுவோம். ''நிலவிலே பெரிய முயல் இருக்கிறது'' என்று. அதைப் போய்ப் பிடிக்க வேண்டும் என்று இந்திரஜித்தன் முயன்றதாகச் சொல்லு வோம். சின்னக் குழந்தையாக இருக்கிற போது அவன் அந்த முயலைத் தூக்கிப் போட்டானாம். அதற்காக இப்போது திரும் பப் பிடிக்கப் போகிறான் என்போம். சீனாவிலும் இதே மாதிரி கதை உண்டு. எகிப்தில், நிலாவில் ஒரு பாட்டி இருக்

கிறான் என்பார்கள்! கண்ணுக்குப் பார்க்கிற போது நிலவிலே உள்ள நிழல் எப்படியெல் லாம் தெரிகிறதோ, அப்படியெல்லாம் கதைகள்!

உண்மையில், நிலவிலே இருக்கிற பள்ளங்கள் தோற்றுவிக்கக்கூடிய நிழல்கள் தான் இந்த உருவங்கள்! ஏதேதோ படங் களைப் போல அவை தெரிகின்றன.



அம்பாளே பிரத்யக்ஷமானது போலக் கூடத் தெரியும். இது அவரவர் பார்வை யைப் பொறுத்தது.

கம்பர் எவ்வாறு கைகேயியின் நெற் றியை நிலவுக்கு ஒப்பிட்டுப் பாடினார் என்று பார்த்தால், சஹஸ்ரநாமத்தை அவர் அடிப்படையாகக் கொண்டது தெரிய வரும்.

அஷ்டமி சந்திர விப்ராஜத் அலிகஸ்தல ஷோபிதா என்பதற்கு அடுத்து வரும் திருநாமம் முக சந்திர களங்காப ம்ருக நாபி விசேஷகா.

அம்பிகையினுடைய முகமாகிற சந்திர னில் ஒரு மரு போல் தோன்றுகிறதாம் அவளது நெற்றித் திலகம்! இங்கே களங்கம் (களங்காப) என்ற சொல்லுக்கு குற்றம் - குறை என்பது அல்ல அர்த்தம்.


நெற்றியில் வைக்கக்கூடியது அலங்கார திலகம். உச்சிவகிட்டில் வைப்பது மாங்கல் யத்துக்காக வைக்கக்கூடிய திலகம். உதிக் கின்ற செங்கதிர் உச்சித் திலகம் என்று ஆரம்பித்தாரே அபிராமி பட்டர்; இதைப் பற்றி ஆசார்யர் சௌந்தர்யலஹரியில் சொல் கிறபோது, அம்பாளுடைய வகிட்டிலே பானுவினுடைய கிரணங்கள் - புதிதாக உதிக்கும் சூரிய னின் கிரணங்கள் பொலி வதாகச் சொல்லுவார். 'நவீன அந்த கிரணாம்' என்று குறிப்பிடுவார். இதற்கு இன்னும் அடிப்படை எங்கே யிருந்து கிடைக்கிறது என் றால் சஹஸ்ரநாமத்திலிருந்து தான்! - **ஸ்ருதி ஸீமந்த ஸிந்தூரி க்ருத பாதாப்ஜ தூளிகா** என்ற திருநாமத்தி லிருந்து.

இந்தத் தொடர்பு நமக்கு விளங்கிவிட்டதென்றால், கம்பர் ஏன் அப்படிப் பாடினார் என்பதும் விளங்கிவிடும்.


முகசந்திர களங்காப - என்பது பார்த் தோம். ம்ருகநாபி விசேஷகா - ம்ருக நாபி என்றால் மிருகமான மானிடமிருந்து கிடைக்கக்கூடிய கஸ்தூரி திலகத்தை அணிந் திருக்கிறாள் என்பது அர்த்தம்.

கம்பர் பாடிய இந்த விஷயம் எங்கேயிருந்து கிடைத்தது என்பது புரிகிறபோதுதான் நம்முடைய நெருடல் போகும்.

(வளரும்)



* நந்தலாலா



* தேணுகா

கலை விமர்சகர் தேணுகா - பட்டிமன்றப் பேச்சாளர் நந்தலாலா இல்லத் திருமண விழாவுக்கு வந்திருந்தவங்களுக்குப் புது அனுபவம். கல்யாணத்துக்கு வந்து கிளம்பும்போது தேங்காய் பை கொடுப்பது வழக்கம். ஆனால் வாழ்த்த வந்திருந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் நினைவுப் பரிசாக சிறுகதைப் புத்தகம் ஒன்று அளிக்கப்பட்டது! புதிதான நினைவுப் பரிசு. புதுமையான கௌரவம். புதுமைப்பித்தன், கு.அழகிரி எழுதியவை உட்பட மொத்தம் ஏழு சிறுகதைகள் அடங்கிய புத்தகம். ''அவை அத்தனையும் இல்லற வாழ்வில் கணவன்-மனைவி குடும்ப உறுப்பினர்களின் மன உணர்வுகளை அழகியல்ரீதியாகப் பதிவு செய்துள்ள சிறுகதைகள். வாசிப்போரின் மனங்கள் பண்படும். மனநிறைவு தரும் திருமணத் தாம்பூலம் இதுதான்!'' எனக் கூறுகிறார் கலை விமர்சகர் தேணுகா.

- ஸ்ரீஅரசு

புத்தகத் தாம்பூலம்



சின்னச் சின்ன சந்தேகங்கள்

கருவிலிருந்து கல்லறை வரை நமக்குத் தேவையான ஒரு குணம்... 'ஆழ்ந்து உள்நோக்கி ஆராய்தல்'. இந்தக் குணம் மருத்துவத்துக்கு அவசியம் தேவை. நோய்நாடி நோய் முதல் நாட இப்போது 'ஸ்கேன்' கருவிகள் உதவி செய்யத் துவங்கி விட்டன. ஸ்கேன் எழுப்பும் சின்னச் சின்னச் சந்தேகங்களை ரேடியோலஜிஸ்ட் கி.வனிதாவிடம் கேட்டபோது...

ஸ்கேன் என்றால் என்ன? இதில் எத்தனை வகைகள் உள்ளன?

'' 'ஸ்கேன்' என்பது ஒரு பொதுவான வார்த்தை. எதையுமே உள்நோக்கி, ஆழ்ந்து பார்த்து ஆராய்வது என்று கொள்ளலாம். 'ஸ்கேன்' என்பதில் பல வகைகள் உள்ளன. பொதுவாகச் சொல்லக்கூடியவை 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்' - ஒலி அலைகளைக் கொண்டு செய்யக்கூடிய ஸ்கேன் இது. ஒலி அலைகள் என்றால், நாம் காதுகளால் கேட்க முடியாத மிக நுட்பமான ஒலி அலைகளை உபயோகப்படுத்திச் செய்யப்படக்கூடியது.

அடுத்து, சி.டி. ஸ்கேன். இது எக்ஸ்-ரே கதிர்களைக் கொண்டு செய்யப்படுகிறது. எம்.ஆர்.ஐ. ஸ்கேனில் காந்த அலைகளைக் கொண்டும், நியூக்ளியர் ஸ்கேனில் கதிரியக்க அணுக்கருக்களை உடம்புக்குள் செலுத்தியும், பெட் ஸ்கேனில் positron என்கிற கதிரியக்க அணுத்துகள்களை உமிழும் அணுக்கருக்களை உடலில் செலுத்தியும் செய்யப்படுகின்றன.''

ஸ்கேன் செய்வதால் ஏற்படக்கூடிய பக்கவிளைவுகள் என்னென்ன?

''அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மற்றும் டாப்லர் ஸ்கேன்களை உடம்பில் எந்தப் பாகத்தில் வேண்டுமென்றாலும் மேற்கொள்ளலாம். பக்கவிளைவு ஏற்படாது.



சும்மா செய்யலாமா ஸ்கேனிங்?

சி.டி. ஸ்கேன் கதிரியக்கப் பாதிப்பை உடலில் ஏற்படுத்தும். அதனால் மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தல் இல்லாமல், 'சும்மா சி.டி. ஸ்கேன் எடுத்துத்தான் பார்ப்போமே' என்ற அசட்டைத்தனம் இதில் காட்டக்கூடாது. மற்ற வகை ஸ்கேன்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பக்கவிளைவுகள் இல்லை.''

ஸ்கேன் ஒருவருக்கு எதற்காகச் செய்யப்படுகிறது? ஸ்கேனின் பயன்கள் என்ன?

''கருவின் வளர்ச்சியை அறிந்து கொள்ளவும், இருதயக் கோளாறுகள், வயிறு சம்பந்தப்பட்ட நோய் மற்றும் சிறுநீரகம், கருப்பை சம்பந்தப்பட்ட நோய்களைக் கண்டறியவும் உதவும்.

டாப்ளர் ஸ்கேன் என்பது ஒருவரது உடலில் ரத்த ஓட்டம் சீராக இருந்து வருகிறதா? ரத்தநாளங்களில் எங்காவது அடைப்பு இருக்கிறதா என்பதைப் பற்றியும் கண்டறிய உதவும்.

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் என்பது உடம்பில் உள்ள திசுக்களில் ஏற்பட்டிருக்கும் கோளாறுகளை நுண்மையாகக் கண்டறிய உதவும்.

சி.டி. ஸ்கேன் உடல் உறுப்புகளின் அமைப்பில் (structure) எந்தெந்த இடத்தில் கோளாறுகள் இருக்கின்றன? என்று கண்டுபிடிக்க உதவும். உடல் எலும்புகளைச் சரிவர சோதனை செய்யவும் இது உதவும்.

✱ கி. வனிதா



நியூக்ளியர் ஸ்கேன் மூலம் மூளை, இருதயம், சிறுநீரகம், நுரையீரல், தைராய்டு முதலியவற்றின் செயல்பாடுகளை (functions) அறியலாம்.

பெட் - சி.டி. ஸ்கேன் என்பது, சி.டி. ஸ்கேனின் உடல் அமைப்பை அறியும் தன்மையையும், பெட் ஸ்கேனின் உடல் செயல்பாடு அறியும் தன்மையையும் ஒருங்கிணைத்து, தெளிவாக நோய் அறியவல்லது. புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், புற்றுநோய் பரவுவதைக் கண்டறிதல் மற்றும் புற்றுநோய்க்கு pin pointed treatment திட்டமிடுதல் ஆகியவற்றில் இதன் பயன்பாடுகள் மிக மிக அதிகம்.''

ஸ்கேன் என்பது அதிக அளவு பணத்தைச் செலவழித்து செய்யக்கூடிய ஒரு விஷயமா?

''அல்ட்ரா சவுண்ட் என்பது 250, 300 ரூபாய்க்கே கூட தற்பொழுது செய்யப்படுகிறது. சி.டி./எம்.ஆர்.ஐ. போன்ற ஸ்கேன்களைச் செய்ய எந்த வகை ஸ்கேன் என்பதைப் பொறுத்து ரூ. 600 முதல் 10,000 வரை செலவாகிறது.''

ஸ்கேனிங்கில் எவ்வளவு துல்லியமாகப் பார்க்க முடியும்?

''விரல் நுனியின் 1 மி.மீ. அளவைக் கூட பார்க்க முடியும். நமது மூளையின் மிகச் சிறிய பிட்யூட்டரி கிளாண்டை 0.1 மி.மீ. முதல் 0.5 மி.மீ. வரை கூட எடுத்து சி.டி./எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் பார்த்துவிட முடியும்.''

- நளினி சம்பத்குமார்

ஹாய் டார்லிங்!



7

“ஐ வாண்ட்

சுஷ்மிதா ஒரு ரேடியோ ஜாக்கி. அவளுடைய ரேடியோ நிகழ்ச்சியின் பாப்புலாரிட்டி, அவளை டெலிவிஷனுக்கு இழுத்துச் சென்றது. அவளது டி.வி. நிகழ்ச்சியோ டி.ஆர்.பி. ரேட்டிங்கில் அசத்தியது. அவளுக்கென்று யாஹூவில் ஒரு ரசிகர் மன்றம் கூட இருப்பதாகக் கேள்வி. கல்லூரி கலை நிகழ்ச்சிகளுக்கு அவளை ஜட்ஜாக அழைப்பார்கள். நகரத்தில் சினிமா விருது விழா என்றால் சுஷ்மிதாவை அங்கே நிச்சயம் பார்க்கலாம்.

பிரபல கல்லூரியில் விஸ்காம் படிக்கிறபோதே மீடியாவுக்கு வந்துவிட்டவள் சுஷ். மிகவும் சுதந்திரமான சூழ்நிலையில் வளர்ந்தவள். அவளது பெற்றோர்கள் வேறு ஊரில் இருந்ததால், ஹாஸ்டல் வாசம். படிப்பை முடித்த கையோடு, ஐ.டி. கம்பெனிகளில் வேலை பார்க்கும், தன் இரண்டு சிநேகிதிகளுடன் சேர்ந்து கொண்டு, தங்குவதற்கு ஒரு அபார்ட்மெண்ட் எடுத்துக்கொண்டாள். மனத்துக்குப் பிடித்த வேலை; கைநிறைய சம்பளம்; நிறைய ஆண், பெண் நண்பர்கள்; ஜாலியான ஒரு வாழ்க்கை தனக்குக் கிடைத்திருப்பதாக நினைத்து நெஞ்சு நிறைய சந்தோஷப்படுவாள்.

எப்போதாவது இரண்டு நாள் சேர்ந்தாற்போல லீவு கிடைத்தால் ஊருக்குப் பறந்து போய் அம்மா, அப்பாவைப் பார்த்துவிட்டு வருவாள். மற்றபடி நினைத்தபோது பேசிக்கொள்ள மொபைல். சமீபகாலமாக, சுஷ்மிதாவுக்கு தன்னுடைய அம்மாவிடமிருந்து போன் வந்தால், பேச்சு கடைசியில் எங்கே போய் முடியும் என்று தெரியும். ''உனக்கும் வயசாகிட்டே போகுது; நீயோ எப்போ கல்யாணப் பேச்சை எடுத்தாலும், இன்னும் ரெண்டு மூணு வருஷம் போகட்டுமே! அதுக்குள்ளே என்ன அவசரம்?ன்னு சொல்லறே!'' என்பதாகவே இருக்கும். அது மட்டுமில்லை; ''அப்புறம் என்ன? கல்யாணம்தானே?'' என்று யார் கேட்டாலுமே சுஷ்ஷுக்குத் துளியும் பிடிக்காது. இவளைப் போல படிப்பை முடித்தால் வேலை; அடுத்தது கல்யாணம் என்ற ஃபிலாசஃபியை வெறுக்கும் பெண்கள் இன்று நிறைய பேர் இருக்கிறார்கள். வாழ்க்கையை சுதந்திரமாக கொஞ்ச காலம் அனுபவிக்க வேண்டும் என்பது அவர்கள் கொள்கை.

பெற்றோர்களில் பலரும், மகளுக்குத்

டாக்டர் விஜய் நாகஸ்வாமி

திருமணத்தை முடித்து வைத்துவிட்டால் நம் கடமை முடிந்தது; மகனுக்குத் திருமணம் முடிந்து மருமகள் வந்தால் வீட்டுப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, நாம் ஓய்வு எடுக்கலாம் என்ற கோணத்தில் சிந்திக்கிறார்கள்.

ஒரு ஆண் திருமணம் செய்துகொள்வது, தன் பெற்றோர்களுக்கு மருமகளையும், பேரன் பேத்திகளையும் கொடுப்பதற்கு அல்ல. அதே போல் ஒரு பெண் திருமணம் செய்துகொள்வது, தன் பெற்றோர்களுக்கு மாப்பிள்ளையைத் தருவதற்கோ, பேரன், பேத்திகளைப் பெற்றுக் கொடுப்பதற்கோ அல்ல. வாழ்க்கையில் தன்னுடன் எல்லாவற்றிலும் பங்குகொள்ள ஒரு வாழ்க்கைத் துணை


டு மீட் யூ"!

வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்போதுதான், அவர்கள் திருமணத்தின் அவசியத்தை உணர்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு உணர்வுபூர்வமான எண்ணம் தான் திருமணப் பாதையின் முதல் நுழைவாயில்.

அப்படி இல்லாமல், பெற்றோர்கள் சொல்கிறார்கள்; அதன் படி நடப்பது நம் கடமை என்ற எண்ணத்துடன் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தால், அந்தத் திருமணம், மகிழ்ச்சியான மணவாழ்க்கைக்கு அடித்தளமாக அமையாது.

பெற்றோர்களின் கட்டாயத்தின்பேரில் நடத்தப்படும் திருமணம் எந்த அளவுக்குப் போகும் என்பதற்கு தமிழரசி, செந்தில் திருமணம் ஒரு உதாரணம். செந்தில் ஒரு ஸ்மார்ட்டான இளம் டாக்டர். பெரிய ஆஸ்பத்திரியில் கன்சல்டன்டாக இருப்பதுடன், சொந்தமாக ஒரு கிளினிக்கும் உண்டு. நல்ல குடும்பப் பின்னணி கொண்டவன். இளம் வயது முதலே நாட்டின் பாரம்பரியப் பெருமைகளைச் சொல்லிக் கொடுத்து வளர்க்கப்பட்டவன். இப்படிப்பட்ட பையன் தன் மகளுக்குக் கிடைத்திருப்பது அதிர்ஷ்டம் என்று நினைத்தார்கள் தமிழரசியின் பெற்றோர்.

தமிழரசி எம்.பி.ஏ. படித்துவிட்டு, ஒரு பெரிய கம்பெனியில் உயர் பொறுப்பில் இருப்பவள். தமிழரசிக்கு சுதந்திரமான சிந்



தனை, புத்திசாலித்தனம் எல்லாம் இருந்தாலும், காதல், கீதல் என்பதிலெல்லாம் ஆர்வமில்லை. அதே சமயம் பெற்றோர்கள் பார்த்து முடிவுசெய்யும் பையனை, கண்ணை மூடிக் கொண்டு கணவனாக ஏற்றுக் கொள்ளவும் அவள் தயாரில்லை. தனக்குப் பொருத்தமானவனாக இருப்பான் என்று தோன்றினால் மட்டுமே திருமணம் செய்துகொள்ளலாம் என்று முடிவு செய்திருந்தாள்.



"எங்க பொண்ணு, உங்க பையனோடு பழகிப் பார்க்கணுமாம்; பிடிச்சிருந்தா அப்புறம் அவள் தன் சம்மதத்தைச் சொல்வாளாம்."

செந்தில், ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்து கொண்டவன்; குழந்தைகளை அக்கறையுடன் வளர்ப்பதில் அப்பாக்களுக்கும் பொறுப்பு உண்டு என்று நினைப்பவன். தனக்கு வருபவள் நல்லதொரு வாழ்க்கைத் துணைவியாக இருக்க வேண்டும் என்பது அவனது எதிர்பார்ப்பு.

தமிழரசியிடம் அவளது பெற்றோர்கள் செந்திலைப் பற்றின விவரங்களைச் சொல்லும்போதே, ''பரவாயில்லை, பயோ-டேட்டா நல்லாத்தான் இருக்கு'' என்று சொன்னாலும், தன்னைப் பற்றிய விவரங்களை செந்திலுக்கு அனுப்பி வைக்கவில்லை. இதில் செந்திலுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்தான்.

ஒருவழியாய், அந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை, பெண் பார்க்க வருவதற்கு அரை மனத்துடன் சம்மதம் தெரிவித்தாள் தமிழ். இரு குடும்பத்தினரும் சந்தித்தார்கள். செந்திலுக்கும் தமிழரசியை மிகவும் பிடித்தது. இரு வீட்டுப் பெரியவர்களும் சேர்ந்து செந்திலும், தமிழரசியும் பொருத்தமான ஜோடி என்று சொல்லி மகிழ்ந்தார்கள்.

''எங்களுக்கு ஓ.கே.'' என்று செந்தில் வீட்டிலிருந்து வந்த தகவலைத் தமிழிடம் சொன்னபோது, ''அம்மா! நாங்க ரெண்டு பேரும் பார்க்கணும்; பேசணும்; ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிஞ்சுக்கணும். அப்புறம்தான் கல்யாணம் பத்தி ஒரு முடிவு எடுக்க முடியும்'' என்றதை பெற்றோர்களால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. தமிழ், தனது கருத்தில் தீர்மானமாக இருந்தாள். ''பிள்ளை வீட்ல போய், எங்க பொண்ணு, உங்க பையனோடு பழகிப் பார்க்கணுமாம்; பிடிச்சிருந்தா அப்புறம் அவள் தன் சம்மதத்தைச் சொல்வாளாம்'' என்று சொல்ல முடியுமா? ''சரி! நாம கொடுத்து வெச்சது அவ்வளவுதான்!'' என்று சொல்லி, செந்தில் விவகாரத்தைச் சற்று ஒதுக்கி வைத்தார்கள் தமிழின் பெற்றோர். நாசூக்கான முறையில் செந்தில் குடும்பத்தினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

''அப்பாடா!'' என்று பெரிசாய் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் தமிழரசி. மூன்று மாதம் ஆகியிருக்கும். ''ஐ வான்ட் டு மீட் யூ'' என்று செந்திலிடமிருந்து, தமிழுக்கு ஒரு இமெயில் வந்தது!

(அழைப்பு தொடரும்)

எழுத்தாக்கம் : **எஸ்.சந்திரமௌலி**

குறிப்பு : இத்தொடரில் இடம்பெற்றுள்ள படங்களுக்கும், மனிதர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை!




அகமும் புறமும்

புறத்தில் தேடி ஓடுகிற வஸ்துக்களிலிருந்து கிடைக்கிற ஆனந்தமெல்லாம் ஒரு திவலை மாதிரிதான். இதை ஒருத்தன் உணர்ந்து விட்டால் அப்புறம் வெளி இன்பத்தைத் தேடவே மாட்டான். தன்னைத் தானே அனுபவித்துக்கொண்டு ஆனந்த சமுத்திரமாக இருப்பான். சமுத்திரம் இருக்கிற இடத்திலேயே கரையை விட்டு வராமல் இருந்தாலும், அதனிடம் நதிகள் போய் விழுகின்றன அல்லவா? அப்படியே ஆசைகள் இவனிடம் வந்து விழுந்து சமுத்திரத்தில் நதிகள் விழுந்து மறைவது போல் மறைந்தே போய்விடும். 'அபூர்ய மாணம் அசலப்ரதிஷ்டம் சமுத்ரம்' என்று கீதை சொன்ன மாதிரி பேரின்பக் கடலாக நிறைந்து, அசைவதற்கு இடமே இல்லாத அளவுக்கு எங்கும் நிறைந்து, அசையாமல் பரம சாந்தமாக நிற்பான். தேவேந்திர பதவியின் ஆனந்தம் கூட இந்த ஆத்மானந்தக் கடலில் ஒரு துளிதான் என்கிறார் ஸ்ரீ பகவத் பாதர்கள்: 'யத்ஸௌக்யாம்புதி லேச லேசத இமே சக்ராதயோ நிர்விருதா:' (மனீஷா பஞ்சகம்.)

பதவி, பணம், ஸ்திரீ புருஷாள், கௌரவம், பப்ளிஸிடி - என்றிப்படி வெளியிலிருந்து நமக்கு ஆனந்தம் கிடைப்பதாக எண்ணிக்கொண்டு ஓயாமல் யத்தனம் செய்வது அத்தனையும், சமுத்திரமாக இருக்கிற நாம் அதை அறியாமல் ஒரு சொட்டு ஜலத்துக்காகத் தவிக்கிற மாதிரிதான். வெளிப் பொருள் எதுவோ கிடைக்காததால் நமக்குக் குறை வந்துவிட்டதாகத் துக்கப்படுவது சுத்தத் தப்பு. நமக்குக் குறையே இல்லை. நமக்குள் நாமே பூரண வஸ்து. நமக்கு அந்நியமாக வெளி என்றே ஒன்று இல்லை. வெளியிலே இருக்கிற அத்தனை ஆனந்தமும் நம்முள்ளேயே அடக்கம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்



''நான் இங்கிருந்து இமயமலைக்கு ஒரு மணி நேரத்துல போயிடறேன்... அப்படின்னா என்னோட வயசு என்ன?''

''இருபத்தைஞ்சு!''

''எப்படிச் சரியா சொன்னே?''

''எனக்குத் தெரிஞ்ச முழுப் பைத்தியத்துக்கு ஐம்பது வயது... அதை வெச்சுத் தான் சொன்னேன்!''

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி



''சங்க காலப் பெண் ஒருத்தி முறத்தால் புலியை விரட்டினாள் என்றால், என்ன அர்த்தம்?''

''ஒண்ணு முறம் 'ஸ்ட்ராங்கா' இருக்கணும், இல்ல புலி 'வீக்கா' இருக்கணும் சார்!''

- வெ. சீதாராமன்,
திருவல்லிக்கேணி



''எல்லாரையும் ஊதச் சொல்லிப் பார்த்த ஏட்டய்யா... யாருமே 'குடிக்கல'ன்னு தெரிஞ்சதும் டென்ஷனாயிட்டார் போல...!''

''எதை வச்சு சொல்றீங்க?''

''எழுபது ரூபா கொடுத்து 'குடிக்க' முடியலை.. இவனுகளுக்கெல்லாம் எழுபதாயிரத்துல எதுக்கு வண்டின்னு புலம்பிட்டுப் போறாரே...!''

– உ. குணசீலபாண்டியன்,
இராஜபாளையம்.



வீட்டுலேயும் இப்படித்தானா?

''உன் கணவர் போலீசாமே?''

''அதை ஏன் கேட்கறே... வீட்ல நானும் மாமியாரும் அடிச்சுக்கறப்ப கூட வேடிக்கை பார்க்கறார்!''

- அம்பை தேவா, திருநெல்வேலி



''அவர் தினமும் ஆறு மணி நேரம் டீ.வி. பார்ப்பார்.''

''அவர் ஒரு 'TV'ர (தீவிர) ரசிகன்னு சொல்லுங்க.''

- எ. பாலகிருஷ்ணன்,
சென்னை-113.

சுப்ரபாரதிமணியன்

“என் இதயம் இடம்பெயர்ந்தது எனது உடலிலிருந்து உனது உடலுக்கு...”

புதிதாக ஒன்றுமில்லை!


தன் முன் இருந்த காகிதத்தில் ரவி சட்டென எழுதினான். எதிரிலிருந்தவள் கருத்தரங்கில் தரப்பட்டிருந்த பிரசுரத்தை கவனமாகப் படித்துக்கொண்டிருந்தாள். எதிர் வரிசையில் இருக்கும் பெண்ணை ரசிப்பதென்பது சுலபமானது என்று பட்டிருக்கிறது ரவிக்கு. வெறித்துப் பார்த்தாலும், கூர்மையாய் கவனித்தால் மட்டுமே வெறித்துப் பார்ப்பது தெரியும். மற்றபடி சாதாரணப் பார்வைதான் என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். அழகை ரசிப்பதற்கு கொஞ்சம் இடைவெளி தேவை. வெகு நெருக்கம் ரசிப்பதற்குத் துணை நிற்காது - சின்னதாய் முகத்தில் இருக்கும் மருகூட பெரியளவு ஆகிவிடும். அப்பெண்ணை ரசிப்பதற்கு முன் அவள் பெயரைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தான் ரவி.

கருத்தரங்கில் பதிவு விண்ணப்பத்தில் அவள் பெயர் இருக்கும். அவர்கள் தரமாட்டார்கள். கேட்பதும் நாகரிகமாக இருக்காது. எப்படியும் தெரிந்து கொள்ள வேண்டும். திருமணமான பெண்ணாக இருந்தால்? உடம்பின் வாகு திருமணமானவள் போல்தான் காட்டுகிறது. அல்லது திருமணமாகாத பெண் திடமானவளாக இருக்கக் கூடாதா என்ன? அன்றைய கருத்தரங்கின் தலைப்பு 'கிராமத்திலிருந்து நகரத்துக்கு இடம்பெயர்வும், நகரமயமாக்கலும்' என்பதாகும்.

எழுதி இருந்த கவிதையை மீண்டும் வாசித்து முணுமுணுத்துக் கொண்டான். 'இதயம் இடம் பெயர்வதும் காதல் மயமும்' என்று கருத்தரங்கத் தலைப்பை மாற்றி எழுதிப் பார்த்தான்.

கிராமத்திலிருந்து வேறொரு கிராமத்துக்கு இடம் பெயர்தல் நிகழ்கிறது. விவசாயக் காலங்களில் அறுவடைக்கும், கிடை மேய்த்தலுக்கும், வாத்துக் கூட்டம் மேய்த்தலுக்கும் கரும்பு வெட்டவும் சிலர் இப்படி இடம் பெயர்கிறார்கள். அப்படி இடம் பெயர்ந்த சம்பந்தக் கோனார் ரவியின் ஞாபகத்தில் வந்தார். தண்ணீர் பிரச்னையால் காலியாகும் கிராமங்கள் ஒருபுறமிருக்க, கிராமத்தினர் தொழிற்சாலைகள் உள்ள பகுதிக்கு இடம் பெயர்தல் வெகு சகஜம். தமிழ்ச்செல்வியின் குடும்பம் அப்படித்தான் தேனியிலிருந்து வந்து பனியன் தொழிலில் இருக்கிறார்கள். தமிழ்ச்செல்வியின் குடும்பம் போல் பல லட்சம் பேர் பனியன் தொழிலுக்கு வந்திருக்கின்றனர். தேசிய இனப் பிரச்னை உள்நாட்டுக் கலகமாக, போராக விசுவரூபிக்கிறபோது ஒரு நாட்டிலிருந்து

இன்னொரு நாட்டுக்கு இடம் பெயர்தலால் இங்கிருக்கும் அகதி முகாம்கள் நிரம்பி வழிகின்றன. இலங்கையிலிருந்து அகதியாக வந்தவன் கரிகாலன். இப்போது இங்கேயே நிலைத்துவிட்டான். இவ்வகை இடம் பெயர்வு



களைப் பற்றித் தான் ஒருவர் அந்தக் கருத்தரங்கில் பேசிக்கொண்டிருந்தார்.

ஆனால் ரவியோ தன் இதய இடம் பெயர்வு பற்றி யோசிக்க ஆரம்பித்துவிட்டான். இன்னொரு கவிதை எழுதலாமா? சின்னதாய்? சின்னதாய் என்றால் ஹைகூ அல்லது லிமரிக். லிமரிக்குக்கு விளக்கம் எழுத வேண்டியிருக்கும். வேண்டாம். ஹைகூ முயலலாம்.

''தாவும் வண்ணத்துப் பூச்சி
பூந்தொட்டியிலிருந்து
வனத்துக்கு.''

இதில் வண்ணத்துப் பூச்சி நான். வனம் அவள் என்று சொல்லிக்கொண்டான்.

பக்கத்தில் நகர்ந்து வந்தவர் கருத்தரங்கில் பதிவு செய்தவர்களின் பயணப்படிக்கான தாளை நீட்டினார். அதில் கலந்துகொண்டவர்களின் பெயர்களும், அவர்கள் சார்ந்த அமைப்பின் பெயர்களும் இருந்தன. இந்தத் தாள் எதிர் வரிசையைக் கடந்து வந்திருக்கிறது. எதிரில் இருக்கும் வரிசையில் எட்டுப் பேர் இருக்கிறார்கள். ஏழு பேர் ஆண்கள். ஒருவர் பெண் என்பதால் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். எல்.சேவியர், எம்.கிருஷ்ணராஜ், ம.ஜெயபால், ச.பிருதிவ்ராஜ், ப.பழனி, ஆர்.ரவீந்திரன்... அட... ச.டெய்ஸி. இதுதான் அவள் பெயராக இருக்க வேண்டும். டெய்ஸி விசேஷமான பெயர்தான். பக்கத்து ஊரான அவினாசியின் தன்னார்வ அமைப்பொன்றின் பெயர் அவள் பெயருக்கு எதிரில் இருந்தது. அவன் பட்டியலைப் பார்த்துக்கொண்டே இருந்தான்.

''பில் அப் பண்ணிக் குடுங்க'' பக்கத்தில் நின்றிருந்தவர் குனிந்து அவன் காதருகில் சொன்னார். உடம்பை சிலிர்த்துக்கொண்டவன் போல் பட்டியலை நிரப்பினான். அவன் பெயர் தெரிந்துவிட்டது. டெய்ஸி... நல்ல பெயர். வித்தியாசமான பெயர். 'ச' என்னவாக இருக்கும். 'ச' பற்றிய கவலை கூடத் தேவையில்லை. டெய்ஸியின் அழகு பற்றிய கவலைதான் இப்போது. நிமிர்ந்து பார்த்தான். டெய்ஸி என்ற பெயருடன் அவள் இன்னும் அழகாகத் தெரிந்தாள்.

பேச்சாளர் பேசிக்கொண்டிருந்தார். ''வந்தேறிகள் மீது பூர்வ குடிகளுக்கு விரோதம். தொழில் வளர்ச்சியில் நியூயார்க்கும், வாஷிங்டனும் இணைந்துவிட்டன. திருப்பூரும், கோவையும் ஒன்றாகிவிட்டன. இடம் பெயர்கிறவர்கள் பெரும்பாலும் பிற்பட்ட சாதியைச் சார்ந்தவர்கள்.'' டெய்ஸி வந்தேறியா? பூர்வ குடியா? பிற்பட்ட சாதியினளா? ரவி அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். ''புதுசா ஒண்ணுமில்லே.'' கருத்தரங்கு பற்றி முணு முணுத்துக்கொண்டான்.



தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்!

மனித குல வரலாற்றைத் திருத்தி எழுதியவர்களுள் முதன்மையானவர் டார்வின். 'தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்' (Survival of the fittest) இந்த ஒரு வரி போதும் - படித்த டார்வின் நம் நினைவுக்கு வருவார். 2009 - டார்வினின் 200வது ஆண்டு.காலங்காலமாக நம்பப்பட்டு வந்த விஞ்ஞான, மத, தத்துவக் கோட்பாடுகளுக்கு மாறாக இருந்தன இவரது கருத்துக்கள்.


எதிர்ப்புகள் பல வகைகளில் வெளிப்பட்டன. இதனாலேயே மானுடவியலின் அடிப்படையாகக் கருதப்படும், 'On the Origin of Species' என்ற தமது நூலை, எழுதி முடித்து இருபது ஆண்டுகள் கழித்துதான் (1859-ல்) வெளியிட்டார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பயின்ற டார்வின், 1831-36 வரை தென் துருவத்துக்குச் சென்ற HMS பீகில் என்ற கப்பலில் இயற்கோட்பாட்டாளர் (Naturalist) ஆகப் பணியாற்றினார். அந்த ஐந்து வருடங்களில் இவர் பெற்ற அனுபவங்களே 'On the Origin of Species'-க்கு அடிப்படையாக அமைந்தன.

மானுடவியலின் புனித நூலாக இது மதிக்கப்படுகிறது. ''மனித வரலாற்றைப் பற்றிய சிறந்த சிந்தனைகளைத் தந்தவர்களுள் டார்வின் முதன்மையானவர்'' என்று ஜெர்மனிய வரலாற்றாசிரியர் வில்ஃபிரெட் ரோகஸ்ச் குறிப்பிடுகிறார். மேலும், ''அவரது கொள்கைகளில் சிறிய தவறுகளையேனும் கண்டறிய வேண்டும் என்று, நம்பிக்கையில்லாமலே பலர் முயன்றனர். முயற்சியில் தோற்றனர். ஏனெனில் அவை வெறும் கொள்கைகள் அல்ல. இயற்கையின் அடிப்படை விதி'' என்கிறார்.

டெய்ல் பீஸ்: 1837-1859 இடையிலான டார்வினது கடிதத் தொடர்புகள் குறித்த ஆய்வு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை 2250 கடிதங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை இன்னும் கூடுகிறதாம். இவையும், டார்வினின் மனைவி எம்மா எழுதிய டைரிக் குறிப்புகளும் இணையத்தில் காணக் கிடைக்கின்றன.

- காஞ்சன்



★ டார்வின்

''ரொம்பவும் பரபரப்பா இருக்கீங்க. உட்காருங்க பேசலாம்.'' டெய்ஸி அவன் அருகில் உட்கார்ந்தாள். ஒரு வகை நறுமணப் பூச்சு மணம் சற்றே வியாபிக்க ஆரம்பித்தது. டெய்ஸியிடமிருந்தா? வேறு பெண்களும் அங்கிருந்தனர்.

''உங்களுக்கு டாக்ஸி ஃபேரா, பஸ் ஃபேரா?''

''எல்லார்க்கும் டாக்ஸி ஃபேர்தா... இடம் பெயர்ந்து வந்திருக்கோமில்லே...''

அவள் சிரிக்கையில் கன்னத்தில் விழுந்த குழி, சட்டென மறைந்து சமனாகியது. முன் நெற்றியில் விழுந்த மயிர்க் கற்றை எதேச்சையாக விழுந்ததாக இருந்தது. சாப்பிட்ட திருப்தி முகத்துக்குக் களையைக் கொண்டு வந்திருந்தது.

''என்னைப் பற்றி தெரிஞ்சுக்க ஆசையா இருக்கும் உங்களுக்கு. அப்படித்தானே ரவி...''

ஆமாம் என்று சொல்வது கூச்ச

மளிப்பது போல அவன் பார்த்தான். அவள் முன் நெற்றி மயிர்க் கற்றையை வலது கை விரலால் தள்ளி நெற்றிப் பரப்பை முழுமையாய் பார்வைக்காக்கினாள்.

''நானும் கூட இடம் பெயர்ந்தவள். இல்லையில்லை... புலம் பெயர்ந்தவள். இலங்கையிலிருந்து அகதியா சின்னப் பொண்ணா இருக்கும்போது வந்தேன். இப்போ கன்னிப் பொண்ணாயிட்டேன்.''

''உங்க நாட்ல நிலைமை இப்ப மோசமாத்தான் இருக்கு.''

''எப்பவுமே மோசமாத்தான் இருக்கு. உயிரோட இங்கிருக்கோம். அவ்வளவுதான்.''

''ப்ச்ச்...''

''பேசிப் பிரயோஜனமில்லாத மாதிரி ஆகிப் போச்சு... கனவுகளைப் பத்தி ஆறுதலா பேசிக்கலாம்... அவ்வளவு தான்...''

எதையோ தேடுவது போல் கைப்பையைக் கவிழ்த்தாள். கையிலிருந்த கருத்தரங்கக் கோப்பைக் கலைத்தாள். வர்ண நிறங்களில் பேனாக்கள் சிதறின. வெளிநாட்டிலிருந்து வந்த கடிதமொன்று பிரிக்கப் படாமல் இருந்தது. கைப்பையில் எல்லா வற்றையும் திணித்தாள். பிரிக்கப்படாத வெளிநாட்டுக் கடிதம் மேஜையில் தனியாய்க் கிடந்தது.

''என்னை மாதிரி அகதியா ஐரோப்பிய நாட்டுக்குப் போன சின்ன வயசு ஃபிரெண்ட் ஒருத்தன் எழுதியிருக்கற கடிதம். ஒவ்வொரு கடிதத்திலேயும் நாம சேரப் போறோம்னு அவனோட கனவுகளைக் கொட்டித் தீர்ப்பான். அவனும் சௌகரியமா உயிரோட இருக்கிறதா எழுதுவான். நானும் சௌகரியமா இல்லாட்டியும் உயிரோடு இருக்கறதா எழுதுவேன். அவ்வளவுதான்... இந்தக் கடிதம் பிரிக்காமலே இருக்குன்னு பார்க்கறீங்களா... இனியும் பல நாட்கள் பிரிக்காமலே இருக்கும். எதேச்சையா ஒரு நாள் பிரிச்சாதா உண்டு. அப்படி ஏதாச்சும் ஒரு நாள் இது பிரிக்கப்படலாம். நீங்க செமினார் ஹாலை விட்டு வெளியே வரும்போது செமினார்ல புதுசா ஒண்ணுமில்லேன்னு சொல்லிட்டே வந்தீங்க. பால்யகால சிநேகிதன்கிட்ட இருந்து வர்ற இந்த ஐரோப்பிய நாட்டு அகதி வாழ்க்கை பத்தின கடிதங்கள்ல புதுசா ஒண்ணுமில்லன்னு தோணும். திரும்பத் திரும்ப கனவுகளைப் பத்திதான் எழுதிட்டிருப்பான். கனவு கனவாவே இருக்கும்ன்னு நம்ப ஆரம்பிச்சுட்டவ நான். புதுசா ஒண்ணுமில்லன்னு சொல்லிட்டு இந்த ஹோட்டலைக் கடந்து போய்க்கிட்டிருப்போம். இன்னைக்கும் நாளைக்கும் கூட இதுபோல கடந்து போற வேலைதான் நமக்கு.'' டெய்ஸி கைப்பையையும், கருத்தரங்குக் கோப்பையும் கையிலெடுத்துக்கொண்டு கிளம்பத் தயாரானாள். ●



கனவு கனவாவே இருக்கும்ன்னு நம்ப ஆரம்பிச்சுட்டவ நான். புதுசா ஒண்ணுமில்லன்னு சொல்லிட்டு இந்த ஹோட்டலைக் கடந்து போய்க் கிட்டிருப்போம்.

உதட்டில் முளைத்த நம்பிக்கை!



அம்மாபாளையத்தைச் சேர்ந்த இளங்கோவன் விமானப் படையில் பணியாற்றியவர். நீச்சல் குளத்தில் உல்லாசக் குளியலில் இருந்த அவர் 'டைவ்' அடித்த போது முதுகுத் தண்டு வடத்தில் அடிபட்டுப் படுகாயமடைந் தார். கழுத்துக்குக் கீழே எந்த உறுப் பையும் அசைக்க முடியாதபடி வாழ்க்கை இருண்டது. சிறப்பு இல்லத் தில் சேர்ந்து சிகிச்சை பெற்றபோது மீண்டும் சாதிக்க, வாழ இளங்கோவன் வாயில் 'பிரஷ்' வைத்து வரைய முயற்சித்தார். கடுமையான முயற்சிக் குப் பின் தேர்ந்த ஓவியராக மாறினார். சுவிட்சர்லாந்து அருகேயுள்ள, வாய் மற்றும் காலில் பிரஷ் வைத்து ஓவியம் வரைவோர் சங்கத்தில் உறுப் பினராகி, அச்சங்கத்தின் மூலம் தமது ஓவியங்களை உலகம் முழுக்க விற்கத் துவங்கினார். எலக்ட்ரானிக் வீல் சேரில் அமர்ந்தபடி வாயினால் வரையும் ஓவியங்களால் தம் வாழ்வைப் பெருமையுடனும், தன் னம்பிக்கையுடனும் வடிவமைத்துக் கொண்டிருக்கிறார். உதட்டில் முளைத்த இந்த நம்பிக்கை ஓவியங் களாக மாறி ஒளிர்கிறது.

* இளங்கோவன்



- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

தஞ்சை பரத்வாஜ்

மேஷம் : ஆடை அலங்காரப் பொருட்கள் சேரும். வேலையில் இருந்து வந்த மன பயம் விலகும். கடன் சுமை தீரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். நண்பர் - உறவினர்கள் வழியில் ஆதாயம் கிட்டும். வாக்கு வன்மை மேலோங்கும், தேர்வில் அதிக மதிப்பெண் கிட்டும். **ராசியான எண்கள்: 2, 5. ராசியான நிறம்: நீலம்.**

ரிஷபம் : வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரும். புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு வந்து சேரும். மகான்களின் தரிசனம் கிட்டும். தந்தை வழி சொத்து வந்து சேரும். தொழில் துறையில் நல்ல பலன் ஏற்படும். புதிய முயற்சி பலன் அளிக்கும். எதிரிகளால் தொல்லை இருக்காது. **ராசியான எண்கள் : 4, 7. ராசியான நிறம்: ஊதா**

மிதுனம் : உடல் நலத்தில் முன்னேற்றம் உண்டு. கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். கைப்பொருள் மீது





கவனம் தேவை. வாகனங்களில் செல்லும் போது உஷார். நண்பர்களிடம் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வேலையில் இடமாற்றம் ஏற்படும். **ராசியான எண்கள்: 1, 3. ராசியான நிறம்: பிங்க்.**

கடகம் : எதிர்பார்த்த காரியம் வெற்றி அளிக்கும். நீண்ட நாள் கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். வேலையில் நற்பெயர் ஏற்படும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். செலவுகள் கட்டுக்கடங்காது. **ராசியான எண்கள் : 2, 5. ராசியான நிறம்: ஆரஞ்சு**

சிம்மம் : மறைமுக விரோதிகளால் அவ்வளவு தொல்லை இருக்காது. உடல் நிலையில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் உஷார். கணவன் - மனைவி உறவு நன்றாக

நடக்குமென்பார்; நடக்கும்!

22.02.09 முதல்
28.02.09 வரை

இருக்கும். சனி / குரு வழிபாடு செய்து வர நன்மை உண்டாகும். **ராசியான எண்கள்: 3, 5. ராசியான நிறம்: பிங்க்**

கன்னி : மனசுக்கு நிறைவான சம்பவம் நடக்கும். கடன் சுமை தீரும். கல்வியில் நல்ல பலன் கிட்டும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நண்பர், உறவினர் மூலம் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வீடு / மனை வாங்கும் யோகம் உண்டாகும். கடன் சுமை தீரும். **ராசியான எண்கள்: 1, 4. ராசியான நிறம்: மெரூன்**

துலாம் : எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். வீடு, மனை மூலம் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். கடன் சுமை தீரும். மன சஞ்சலம் விலகும். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் அதிக லாபம் கிட்டும். **ராசியான எண்கள்:3,9. ராசியான நிறம்: பச்சை**

விருச்சிகம் : புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். மகான்களின் தரிசனம் கிட்டும். பண வசதி பெருகும். தந்தை வழியில் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். மன அமைதி ஏற்படும். ஆடை, ஆபரணப் பொருட்கள் சேரும். வாகன சுகம் கிட்டும். **ராசியான எண்கள்: 2, 6. ராசியான நிறம்: வெள்ளை**

தனுசு : திருமணம் தடை விலகி கைகூடும். மனக் கவலை விலகும். படிப்பில் முன்னேற்றம் ஏற்படும். தொல்லைகள் விலகும். வருவாய் மிகுதியாகும். விலகிப் போனவர்கள் விரும்பி வருவார்கள். கடன் சுமை விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். வாக்குவன்மை மேலோங்கும். **ராசியான எண்கள்: 1, 6. ராசியான நிறம்: இளஞ் சிவப்பு**

மகரம் : மன அழுத்தம் குறையும். வேலையில் இருந்த பிரச்னைகள் படிப்படியாகக் குறையும். பண வசதி பெருகும். கடன் சுமை தீரும். நீண்ட நாள் வழக்கு முடிவுக்கு வரும். வராத நிலுவைகள் வந்து சேரும். குடும்ப வாழ்வில் இருந்து வந்த மனக் கசப்புகள் விலகி, குடும்பம் ஒன்று கூடும். **ராசியான எண்கள்: 7, 9. ராசியான நிறம்: ஊதா**

கும்பம் : மனநிறைவான வாரம். எடுத்த காரியம் எல்லாம் வெற்றிதான். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வேலையில் இடமாற்றம் உண்டாகும். வழக்கு வெற்றி அளிக்கும். வியாபாரத்தில் நற்பலன் உண்டாகும். கல்வி வளம் மேலோங்கும். வாக்கு வன்மை மேலோங்கும். **ராசியான எண்கள்: 1, 3 . ராசியான நிறம்:இளம் பச்சை**

மீனம் : பூர்வீக சொத்து வந்து சேரும். வெளிநாட்டு பிரயாணம் வந்து சேரும். நண்பர், உறவினர் மூலம் நற்பலன் உண்டாகும். திருமணக் காரியம் நிறைவேறும். படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். கடன் தொல்லை தீரும். குழந்தைகள் மூலம் மன உற்சாகம் ஏற்படும். **ராசியான எண்கள்: 5, 8. ராசியான நிறம்: பிங்க்**

"மணிரத்னம் சார்கிட்ட அஸிஸ் டெண்டா இருந்த நேரம்... அப்பாவுக்கு முடியலைன்னு ஊருக்குப் போயிருந்தேன். 'நீ சினிமாவுக்குப் போப்பா... எனக்கு ஒண்ணும் ஆகாது'ன்னு அப்பா தைரியம் சொல்ல, 128 ரூபாய் கொடுத்து பட்டுக் கோட்டையிலிருந்து சென்னைக்கு ரயில் டிக்கெட் புக் பண்ணிட்டு வீட்டுக்கு வந் தேன். அப்பாவோட உடம்பு படபடப்பா இருந்துச்சு... சென்னைக்குப் போவோமா வேணாமான்னு மனசு கிடந்து அடிச்சுக் குது. அப்பாவோட தலைமாட்டிலேயே உட்காரத் தோணுது. ஆனாலும் 128 ரூபாய்க்கு எடுத்து வைச்சிருந்த டிக்கெட் பயமுறுத்திக்கிட்டே இருந்துச்சு. அப்பா வைத் தயக்கத்தோட பார்த்தேன். 'நீ போயிட்டு வாப்பா...'ன்னு சொல்லி சிரமப் பட்டு சிரிச்சார். அழுகையை அடக்கிட்டு சென்னைக்கு வந்தேன். நான் இங்க வர்ற துக்குள்ள 'அப்பா இறந்துட்டார்'ங்கிற தகவல் வந்திடுச்சு. நம்மளோட சுக துக் கங்கள் எல்லாத்தையும் சினிமா பறிச்சிடுது சார்... ஆனாலும் அதையும் தாண்டி இங்கே நின்னு ஜெயிக்கத் தோணுது" - கண்களில் நம்பிக்கை பிரகாசிக்கச் சொல்கிறார் இயக் குநர் முரளி அப்பாஸ்.

அஜித் நடிப்பில் 'ராசி' படம் கொடுத்த வரான முரளி அப்பாஸ், பன்னிரண்டு



* "சொல்ல சொல்ல இனிக்கும்"

டைரக்டர் டைரி



வருட இடைவெளிக்குப் பிறகு மறுபடியும் 'ஷாட் ரெடி' சொல்லிக்கொண்டிருக்கிறார். நவ்தீப், பிரகாஷ் ராஜ் நடிக்கும் 'சொல்லச் சொல்ல இனிக்கும்' என்கிற படத்தின் முக்கால்வாசி ஷூட்டிங்கை முடித்திருக்கும் முரளி அப்பாஸிடம், ''இத்தனை வருட இடைவெளி ஏன்?'' என்று கேட்டால்,

வெறுமை உடைத்து விட்டம் பார்த்துப் பேசுகிறார். ''மணிரத்னம் சார்கிட்ட அஸிஸ்டெண்டா சேர்றது பத்து படங்கள் எடுக்கிறதுக்கு ஈடான சிரமம். ஆனா, சுகாசினி மேடம் என்னைப் பத்தி சொன்ன நல்ல விஷயங்களை வைச்சு மணிரத்னம் சாரே என்னைக் கூப்பிட்டு உதவி இயக்குநரா சேர்த்துக்கிட்டார். அதனால நிக் ஆர்ட்ஸ் சக்கரவர்த்தி சாரோட முதல் படமான 'ராசி'யை இயக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தப் படம் எனக்கு நல்ல தொடக்கத்தைக் கொடுத்துச்சு. ஆனா, அப்போ சினிமா ஸ்ட்ரைக் ஆரம்பிச்ச நேரம். ஒரு வருஷமா எந்தப் படமும் தமிழில் எடுக்கப்படல. அதுக்கப்புறம் என் குடும்பத்தில் நடந்த சொல்லிக்கொள்ள முடியாத சோகம், வாழ்ந்த ஊரை விட்டு வேற ஊருக்கு என்னை அனுப்பிடுச்சு. சினிமாவுக்காக குடும்பத்தை ரொம்பவே மிஸ் பண்ணின நான், அதுக்கப்புறம் குடும்பத்துக்காக அல்லாட வேண்டிய நிலை. எல்லாத்தையும் கடந்து மறுபடியும் நண்பர்கள் உதவியால இந்தக் கனவூருக்கு வர பன்னிரண்டு வருடங்களாகிடுச்சு. என்ன சார் பண்றது... போராடிக் கிடைக்க வேண்டியது ரொம்ப சுலபத்தில் கிடைக்குது. சுலபத்தில் கிடைக்க வேண்டியது பெரிய போராட்டத்துக்கு அப்புறம் கிடைக்குது'' பெருமூச்சு விடுகிறார் முரளி அப்பாஸ்.

''இப்போ தயாராகிட்டு இருக்கிற 'சொல்லச் சொல்ல இனிக்கும்' படம் நிஜமாகவே இளைய தலைமுறைக்கு இனிக்கும். 'காதலை ரொம்ப வித்தியாசமா சொல்லி இருக்கேன்'ன்னு வழக்கமான வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்பலை. காதல் தெய்விகமானதுன்னு சொல்வாங்க... அதை விடவும் தெய்விகமான விஷயங்கள் உலகத்தில் நிறைய இருக்கு. காதல் தோல்வின்னு எத்தனையோ பேர் தற்கொலை பண்ணிக்கறாங்க. ஆனா நட்பு, பாசம், உறவுன்னு காதலை விஞ்சக்கூடிய வீரியமான விஷயங்களுக்கும் நம் மனசில் இடம் கொடுக்கணும். அதுக்காக காதலைத் தவிர்த்திடுங்கன்னு நான் சொல்லல. காதல் கைகூடலன்னா கவலைப்படாதீங்கன்னு தான் சொல்றேன். ராசி படத்தில் நடிச்ச பிரகாஷ்ராஜ் சார், 'உன் படத்துக்காக எப்போ வேணும்னாலும் என் வீட்டுக் கதவைத் தட்டலாம்'னு சொன்னார். பன்னிரண்டு வருட இடைவெளியில் என்னை மறந்திருப்பார்னு நினைச்சு தயங்கித் தயங்கி அவரைப் போய்ப் பார்த்தேன். பேர் சொல்லிக் கூப்பிட்டு 'படம் பண்ணுவோமா?'ன்னு கேட்டார். கண் கலங்கிட்டேன். சில பேரோட பேரைக் காப்பாத்துறதுக்காகவாச்சும் நாம ஜெயிச்சே ஆகணும் சார்...'' - முரளி அப்பாஸின் மெல்லிய சிரிப்பில் நம்பிக்கை வழிகிறது!

- கலாசன்

'காதல் தோல்வியால் வலைப்படவே கூடாது சார்!'

அக்கம் பக்கம்



* சோம்நாத் சாட்டர்ஜி

லோக்சபா நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் லோக்சபா டி.வி. சேனலில் பணிபுரிபவர்களில் பெரும்பாலானவர்கள் 'ஒப்பந்த அடிப்படை'யில் வேலை பார்ப்பவர்கள்தாம். அவர்களுக்கெல்லாம் சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி ஒரு வாக்குறுதி கொடுத்து, சந்தோஷப்படுத்தி இருக்கிறார். 'என் பணிக்காலம் முடிவதற்குள் உங்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்து கொடுத்துவிடுகிறேன்' என்பதுதான் அந்த வாக்குறுதி.

(சட்டுபுட்டுனு உத்தரவு போடுங்க சபா(ஷ்) நாயகரே! தேர்தல் அறிவிப்பு வந்தா... அப்புறம் சிக்கலாயிடும்!)

* சிபுசோரன்




பா.ஜ.க. கூட்டணியிலிருந்த சில கட்சிகள் பிய்த்துக் கொண்டு போய்விட, புதிதாக யாரும் கூட்டணியில் சேர முன்வராத சூழ்நிலையில் ஜார்கண்ட் மாநிலத்தில் சிபுசோரனின் ஜே.எம்.எம். கட்சியை வளைத்துப் போட டெல்லியில் காய் நகர்த்தப்படுகிறது. ஜே.எம்.எம்., பா.ஜ.க. கூட்டணிக்கு வந்தால், அதற்குப் பதிலாக 39 உறுப்பினர்கள் கொண்ட பா.ஜ.க. கூட்டணி மீண்டும் சிபுசோரனை முதலமைச்சர் பதவியில் உட்கார வைப்பதாக டீல்.

(கொள்கைக் கொழுந்துகளின் டீல் புல்லரிக்க வைக்கிறது!)

மும்பை தீவிரவாதத் தாக்குதலுக்கு முன்பு, டெல்லியிலுள்ள பாக். தூதர் மாலிக்கின் அலுவலகம் எப்போதும் ரொம்ப பிசியாக இருக்கும். டெல்லியில் எந்த முக்கிய நிகழ்ச்சியானாலும் அவருக்கு அழைப்பு வந்துவிடும். இப்போது நிலைமை தலைகீழ். இந்திய அரசு, அவரைக் கண்டுகொள்வதே இல்லை. அவ்வப்போது தன் கண்டனத்தைத் தெரிவிக்கவே அவருடன் தொடர்பு கொள்கிறது. இதனால், மற்ற நாட்டுத் தூதரகங்களும் தங்கள் நிகழ்ச்சிகளுக்கு, பாகிஸ்தான் தூதருக்கு அழைப்பு அனுப்புவதை நிறுத்திக் கொண்டு விட்டன. இப்போதெல்லாம், நாள் முழுக்க ஆபீசில் பாக். தூதர் செய்யும் ஒரே வேலை, எல்லா நியூஸ் பேப்பர்களையும் வரிக்கு வரி நிதானமாகப் படித்து பொழுதைக் கழிப்பதுதான்.

* மாலிக்



[24 மணி நேரமும் அழ, சிரிக்க, ஆடிப்பாட தனித்தனி சேனல் இருக்கே! சிச்சுவேஷனுக்கு ஏத்த மாதிரி டி.வி. சேனலை ஆன் பண்ணிக்க வேண்டியதுதானே?]



* நவீன் சாவ்லா

கோபாலசாமி - நவீன் சாவ்லா மோதல் பற்றித்தான் டெல்லியில் பரபர பேச்சு. சாவ்லா பற்றிப் பல சுவாரசியமான புகார்கள். அவற்றில் ஒன்று, தேர்தல் கமிஷன் கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்போது, சாவ்லா டாய்லெட்டுக்குப் போய், அங்கிருந்து காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கு செல்போன் மூலம் தேர்தல் கமிஷன் மீட்டிங்கில் என்ன விவாதிக்கப்படுகிறது என்று ஸ்பாட் நியூஸ் கொடுப்பாராம்.

(இனிமே அங்க கூட ஒரு ரகசிய கேமரா வைக்கணும் போல இருக்குதே!)

சிவலோக பதவிக்கும் கோஷ்டி சண்டை வருமா?



* மார்கரெட் ஆல்வா

தன் மகனுக்குத் தேர்தலில் சீட் தரவில்லை என்று விமர்சனம் செய்ததால், காங்கிரஸிலிருந்து கல்தா கொடுக்கப்பட்டார் மார்கரெட் ஆல்வா. அவரின் ஆதரவாளர் யோகேந்திர மக்வானாவுக்கும் அதே கதி. அவர் வகித்த காங்கிரஸ் கட்சியின் எஸ்.சி/எஸ்.டி. பிரிவு தலைவர் பதவிக்குக் குறிவைத்துள்ளார் டெல்லி சட்டசபையின் முன்னாள் சபாநாயகரான சௌதுரி ப்ரேம் சிங். காங்கிரஸ் கட்சியின் கோஷ்டிப் பூசல்தான் உலகப் பிரசித்தமாயிற்றே! அவருக்கு எதிரானவர்கள், இந்தப் பதவிக்கு அவரை நியமித்தால் அது அவர் முன்னர் வகித்த சபாநாயகர் பதவிக்கு அவமானம் என்கிறார்கள்.

(செத்த பிறகு சிவலோக பதவி கிடைப்பதால், அது முன்பு வகித்த மனிதப் பதவிக்கே அவமானம் என்பார்களோ?)

- பரத் ராம்

கலக்க வருதுப்பா

கல்கி

கெட் ரெடி!
கெட் ரெடி!
கெட் ரெடி!

உங்க மாவட்டத்துல
'சூப்பர்' எதுங்க? 'வேஸ்ட்' எதுங்க?

- நீங்க ஜாலியா ரவுண்டடிக்கிற டூரிஸ்ட் ஸ்பாட் எதுங்கோ?
- பார்த்ததும் பரவசமா கும்பிடு போடற கோயில் எங்கெல்லாம் இருக்குங்க?
- அசத்தலா போட்டுகிட்டு அதிரடி பண்ண சேலை.ஜீன்ஸ் சுத்துவட்டாரத்துல எங்கே பெஸ்ட்டா கிடைக்கும்ங்க?
- உங்க மரவட்டத்தோட தலை போற பிரச்னை எதுங்க? எப்படித் தீர்க்கலாம்ன்னு நினைக்கறீங்க?
- மிஸ்டர் மாவட்டம் யாருங்கண்ணா? என்ன காரணமுங்க?
- கலக்கலா கதை எழுதுவீங்களா? அசத்தலா கவிதை வருமா?
- லொள்ளு பண்ற 'ஜோக்ஸ்' கைவசம் இருக்கா?

-'ஆமா'ன்னா உடனே 'கல்கி'க்குத் தட்டி விடுங்க!

கோயம்புத்தூர்
கண்ணுங்களா... நாம 'லொள்ளு'
பண்றது மட்டுமில்ல...
எல்லாத்துலயும் 'சூப்பர்'னு
கல்கிக்கு நிரூபிங்க



கோயம்புத்தூருக்கு வர்றோம்முங்க!

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடறோம்!

ஆமாம்! உங்கள் மாவட்டத்துக்கு 'கல்கி' குழு, நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்?

ஆனா சில கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்பு மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனி கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- மாவட்டத்தின்...

பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ்

ஆன்மிக, வியாபார சுற்றுலா தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன்

சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல்

நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்

என்றவாறு கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசி தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேரவேண்டிய கடைசி தேதி : 14.3.2009



கலக்க வருதுப்பா கல்கி

கோவை மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்

☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

மண்ணில் தெரியும் வானவில்!



பயணம்

★ வானவில்


கலசலிங்கம் பல்கலைக்கழக இணை வேந்தர் கே.ஸ்ரீதரன், மொரீசியஸ் தீவில் வாழும் வாய் பேசாத, செவித்திறன் குறைவுடைய பிள்ளைகளின் உயர் தொழிற்கல்வி மேம்பாட்டுக்கென, சமீபத்தில் மொரீசியஸ் தீவுக்கு துணைவேந்தர், துறைத் தலைவர்களுடன் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரின் பயணக் குறிப்புகளிலிருந்து சில துளிகள்...


★ சென்னையிலிருந்து மொரீசியஸ் தீவுக்கான விமானப் பயணம், ஐந்தரை மணி நேரம். இந்தியப் பெருங்கடலால் சூழப்பட்டுள்ள அழகிய தீவு. எங்கு நோக்கினும் இயற்கை எழில் தவழ்கிறது.

★ தீவுப் பிரதேசத்தின் கடற்கரை சுற்றளவு 330 கி.மீ. தீவின் நிலப்பரப்பு சுமார் 1800 சதுர கி.மீ. தமிழகத்தின் ஒரு மாவட்டப் பரப்பளவு. மக்கள் தொகை பதினைந்து லட்சம்.

★ அவர்களில் தொண்ணூறு சதவிகிதம் பேர் இந்திய வம்சாவழியினர். பேச்சு, எழுத்து மொழி பெரும்பாலும் ஃபிரெஞ்ச். கொஞ்சூண்டு ஆங்கிலம்.

★ ஒரு கிராமத்தில் காளீஸ்வரி அம்மன் கோயில். சுவாமி கும்பிடச் சென்றிருந்






● கே.ஸ்ரீதரன்

தோம். எந்த பந்தாவும் எவ்விதக் கெடுபிடியும் இல்லாமல் அங்கு சுவாமி கும்பிட வந்திருந்தார் மொரீசியஸ் அரசின் துணை குடியரசுத் தலைவர் வீராசாமி செட்டியார். அவரது பூர்வீகம் நம்ம தமிழ்நாட்டின் அருப்புக்கோட்டை.

★ அவர் அருகில் சென்று எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். அவருக்கு ஏகப்பட்ட சந்தோஷம். உடனே எங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, தமிழில் பேசினார்.



● கடற்கரை

★ மொரீசியஸ் தீவில் சைவ உணவு குறைவு. பெரும்பான்மை அசைவ உணவுதான். சைனீஸ் ரெஸ்ட்டாரண்ட்டுகள் சாட்சி.

★ 'வணக்கம்' என்கிற பெயரில் தமிழ்ப் பத்திரிகை வெளியாகிறது. அதன் ஆசிரியர் பெருமாள். ஆனால், அது தமிழ் மொழியில் பிரசுரமாவதில்லை. 'VANAKKAM' என்பது போல தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்கேற்ப ஆங்கில எழுத்துகளின் வடிவத்துடன் அச்சாகி வெளி வருகிறது.

உதாரணம்: 'Sunamiyin thakkudhalil irundhu Moresies theevu thappithadhu' 'சுனாமியின் தாக்குதலிலிருந்து மொரீசியஸ் தீவு தப்பித்தது!'

★ தீவின் சுற்றுப்புற விளிம்பிலிருந்து கடல் பரப்பில் அரை கி.மீ. தூரத்துக்கு



* எரிமலை சாம்பல்...

அப்பால் தீவைச் சுற்றிலும் அமைந்துள்ளன. பவளப்பாறைகள். சுனாமியின் சீற்றம் தீவுக்குள் எட்டிப் பார்க்காமல், மொரீசியஸ் தீவின் பாதுகாப்பு அரண்களாக இருந்தவை இவை தாம். மொரீசியஸ் தீவில் காணும் இடத்திலெல்லாம் கரும்பு சாகுபடி. அங்கு ஆட்கள் இல்லாமல், சுழலும் பைப் லைன் மூலமாக தண்ணீர் சொரிவது, பார்க்க வெகு ரம்யம்!

★ கடலின் உள்ளே நீர்மூழ்கிப் படகுப் பயணம் வெகு ஜோர். ரொம்ப த்ரில். அது ஒரு தனி அனுபவம். ஒரு ரூபாய் நாணயத்தைச் சுண்டி விட்டால், அது கடல் நீருக்கடியில் தாழ்ந்து போவது வரை துல்லியமாகத் தெரிகிறது. அத்தனை சுத்தம். நீல வண்ணத்தில் கடல் நீர் நெஞ்சை அள்ளுகிறது.

வணக்கம் என்ற தமிழ்ச்சொல்லை Vanakkam என்று உச்சரிப்புக்கேற்ப ஆங்கில எழுத்துக்களின் வடிவத்துடன் அச்சாகி ஒரு இதழ் வெளிவருகிறது.



* சிவன் கோயில்

★ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் எரிமலை வெடித்த இடம், தற்போது சுற்றுலா மையம். எரிமலை எரிந்து அமுங்கிப் போனது, முன்னூறு அடி ஆழப் பள்ளத் தாக்காகக் காட்சியளிக்கிறது. ஐந்நூறு அடி அகலம், ஐந்நூறு அடி நீளமான பள்ளம். முன்னூறு அடி ஆழம். எட்டிப் பார்த்தால் ஆழத்தில் கருகிய சாம்பல் மண்.

★ ஒரு விவசாயியின் தோட்டம். நிலத்தைச் செப்பனிட இரண்டு - மூன்று அடி ஆழத்துக்குத் தோண்ட அந்த நிலப்பரப்பில் வானவில்லின் ஏழு வர்ணங்கள் ஜொலித்துள்ளன! சுமார் முன்னூறு அடி நீளம், இருநூறு அடி அகலத்துக்கு. சும்மா விடுமா அரசு? சுற்றிலும் வேலி போட்டு சுற்றுலா இடமாக அறிவித்து விட்டது. ஒரு நபருக்கு நூறு ரூபாய் கட்டணம். மழை, வெயில், காற்று, பனி என எதற்கும் நிலைகுலையாமல் ஏழு நிற வர்ணங்களைச் சுமந்து நிரந்தரமாகக் காட்சி அளிக்கிறது. அட... மண்ணில் தெரியுது வானவில்லின் வர்ண ஜாலம்! போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள் ஒரு முறை!

தொகுப்பு: **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

காதைக் கொடுங்க

தமிழ்நாட்டில் அரசியல் ஆர்வமுள்ளோர் ஆவலாகக் கண்காணிக்கும் தொகுதிகளில் சிவகங்கையும் ஒன்று. பழைய சிவகங்கை, மறுசீரமைப்பில் சில சட்டமன்றத் தொகுதிகளை இழந்து, புதுக்கோட்டை உட்பட, பல புதிய தொகுதிகளுடன் உருமாறியிருப்பதால் சிதம்பரத்துக்கு சவாலான விஷயமாகி விட்டது. காரணம் மூன்றரை வருடங்களுக்கு மேலோக பொதுத்துறை வங்கிகள் திறப்பு உட்பட, பல்வேறு நலத்திட்டங்களை பழைய வரைமுறைக்குட்பட்ட பகுதிகளில் செய்திருந்தார் ப.சி.



சட்டமன்ற உறுப்பினர் செல்வப் பெருந்தகை, மங்களூர் தொகுதியிலிருந்து விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் 2006ல் அ.இ.அ.தி.மு.க. ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஜெயலலிதாவுடன் சிறுத்தைகள் மோதிக்கொள்ள, கலைஞருடன் நெருக்கமானார் செல்வம். இந்த நிலையில் பகுஜன் சமாஜ் கட்சி செல்வத்துக்குத் தூண்டில்போட, அதில் இணைந்து மாநிலத் தலைவராகிவிட்டார். சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ய கடிதம் கொடுத்தபோது, டெக்னிகலாக "கடிதம் சரியில்லை" என்று ராஜினாமாவை ஏற்க மறுத்துவிட்டார் சபாநாயகர். இப்போது "மக்களுக்குத் தொண்டாற்ற சட்டமன்ற உறுப்பினராகத் தொடர்வேன்" என்று சொல்லியிருக்கிறார் செல்வம்!

"தி.மு.க.வுடன் கூட்டணியில் இருப்பதால் செல்வம் ராஜினாமா செய்யும் பட்சத்தில் அங்கு வரும் இடைத்தேர்தலில் நாங்கள் நிற்க வேண்டி வரும். நாங்கள் தோற்றுவிட்டால் கூட்டணி இமேஜ் பாதிக்கப்படும் என்பதால், 'தொகுதியை எங்களுக்குக் கொடுத்துவிடுங்கள். நாங்கள் வெற்றி பெற்றுவிடுவோம்' என்று ஆளும் கட்சியில் சொன்னார்கள். அதற்கெப்படி ஒப்புக்கொள்ள முடியும்? எனவே செல்வம் தர்மத்துக்கு விரோதமாகத் தொடர்கிறார். மைனாரிட்டியாக இருக்கும் தி.மு.க. அதை அனுமதிக்கிறது" என்று எரிச்சலுடன் சொல்கிறார் விடுதலைச் சிறுத்தைகள் பிரமுகர். திருமாவுக்கு மற்றொரு தலைவலி.

பிரபாகரன் கட்டளை



பிரபாகரனை உயிரோடு பிடித்து எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது இலங்கைக்கு இந்திய அரசு கொடுக்கும் அழுத்தம். ஆனால், பிற்காலப் பிரச்னைகளைப் பார்த்து, 'போட்டுத் தள்ளிவிட வேண்டும்' என்பது இலங்கை ராணுவத்தின் அஜென்டா. 'எனக்கெதுவும் ஆபத்து என்றால் நீங்களே என்னைச் சுட்டுவிட வேண்டும்' என்பது தளபதிகளுக்கு, பிரபாகரன் கட்டளை. உளவுத் துறை வட்டாரத்தில் உலா வரும் செய்தி இது.

- ஸ்ரீநி

சொல்வாசம்

ஊருக்குள் இருப்பதைவிட
சோளக் கொல்லையில் இருப்பது
சுகமாக இருக்கிறது
மகிழ்ச்சி.

தலைக்குப் பதிலாக சட்டியை
ஏன் கவிழ்த்தாய்?
ஆயினும் தேற்றிக்கொள்கிறேன்
உங்களிலும் வழுக்கையர் உண்டே.

சட்டை மாட்டி விட்டிருக்கிறாய்
எனக்கு
உன்மாதிரியே நன்றி
ஆயினும் கையிரண்டை
மடக்க முடியாமல் ஏன் செய்தாய்?
அசையாத கைக்கு
அடைக்கலான் குருவிகூட
பயப்படாதே.

கையுண்டு விரலில்லை
தலையுண்டு கழுத்தில்லை
விந்தைப் பிறவி நான் போகட்டும்

சட்டித்தலையில்
வாய்வரைந்துவிட்டால்
நான் சாப்பிட்டுவிடுவேன்
கதிரெல்லாம்
என்று பயந்தாயோ அறியேன்
வாயே இல்லாத எனக்கு ஏன்
வயிற்றை வைத்தாய்?
வைக்கோல் துருத்தும்
பசியறியா வயிறுதந்தோனே
வாழ்க நீ.

ஒரு விஷயத்தில் மட்டும்
உன்னைப்போலவே
என்னையும் சரியாகப்
படைத்துவிட்டாய் —
இதயமில்லை என்னிடமும்.




தஞ்சாவூர்க்கவிராயர்

சோளக் கொல்லை பொம்மையின் சுயசரிதம்!

7



உலகம் உன்னை நேசிக்க வேண்டும். உன்னைக் கண்டு பயப்படவேண்டும். இந்த இரண்டும் கைகூடிவிட்டால் உன்னை அடித்துக் கொள்ள யாரும் இல்லை. நேசிப்பவரைக் கண்டு எப்படிப் பயப்படமுடியும்? யாரைப் பார்த்து பயப்படுகிறோமோ அவரை எப்படி நேசிக்க முடியும்? இந்தச் சந்தேகம் உனக்கு வந்தால், இரண்டில் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொள். உன்னைக் கண்டு உலகம் பயப்பட்டால் போதுமானது. நேசிப்பு அநாவசியம்.



மாக்யவல்லியின் அரசியல் சித்தாந்தத்தை இப்போது வாசிக்கும்போது, அதிகம் அதிர்ச்சியடைய முடியவில்லை. மாபெரும் யுத்தங்களை, மாபெரும் அழிவுகளை, மாபெரும் வீழ்ச்சிகளை நாம் சந்தித்துவிட்டோம். மாக்யவல்லி எவற்றைக் கனவு கண்டாரோ அவற்றை நம் அரசியல் தலைவர்கள் செயல்படுத்திவிட்டார்கள். இன்னமும் செயல்படுத்துகிறார்கள்.

தி பிரின்ஸை இன்றைய அரசியல்வாதிகள் வாசித்தார்களா என்று தெரியவில்லை. ஆனால் கடைப்பிடிக்கிறார்கள்.

முழுப்பெயர் நிகோலோ மாக்யவல்லி (Niccolo Machiavellie). இத்தாலியர், தத்துவ ஞானி. நாடகங்கள், கவிதைகள் எழுதியிருக்கிறார். இத்தாலிய அரசாங்கத்தில் உயர் பதவி. மாக்யவல்லியின் படைப்புகளில் அதிகம் பிரசித்தி பெற்றது தி பிரின்ஸ் (The Prince). எழுதி முடித்ததும், தனிச்சுற்றுக்கு சில பிரதிகள் எடுத்து நண்பர்களிடம் மட்டும் நூலைக் காட்டியிருக்கிறார். முழுமையான முதல் பதிப்பு அவரது மரணத்துக்குப் பிறகே வெளி வந்தது. 1530ம் ஆண்டில்.

அதிகாரத்தை எப்படி கைப்பற்றுவது? எப்படித் தக்கவைத்துக் கொள்வது? அதிகாரத்தால் என்ன பயன்? இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் தி பிரின்ஸை அமைத்திருக்கிறார் மாக்யவல்லி. இளவரசர்களுக்காக எழுதப்பட்ட அரசியல் சாசனம். சரி, அதிகாரத்தை எப்படி கைப்பற்றுவதாம்? மாக்யவல்லியின் அறிவுரை இது. இலக்கை நிர்ணயித்துக் கொள். வழிமுறைகளைப் பற்றிக் கவலைப்படாதே. தவறு, சரி என்று எதுவும் இல்லை. அநாவசியமாக உன்னைக் குழப்பிக் கொள்ளாதே. உன் லட்சியம் இலக்கை அடைவது. அதில்

மருதன்

அரசியலில் எதுவும் தவறில்லை!



மட்டும்தான் நீ கவனம் செலுத்த வேண்டும்.

சட்டப்படி நடக்க வேண்டும், நியாயப்படி இருக்க வேண்டும் போன்ற வெண்டைக்காய் கொள்கைகளை முதலில் உன் மனத்தில் இருந்து துடைத்து அழி. நீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு போன்றவை தடைகற்கள். உன்னைக் கீழே பிடித்து இழுக்கும் தீயசக்தியின் மாய உருவங்கள். கலங்காதே. உன் பயணம் நீ உத்தேசித்த பாதையில் தொடரட்டும். உன் பாதை தவறானதாகவே இருந்தாலும் மாற்றிக் கொள்ளாதே. ஆன்றோர், சான்றோர் அறிவுரைகளுக்குப் பலியாகிவிடாதே. யார் வளைக்க முயன்றாலும் தோற்காதே.

மக்கள் மனத்தில் வெற்றிகரமாக உன்னைப் பற்றிய பயத்தை முதலீடு செய்துவிட்டால் பெரும் லாபம் ஈட்டி விடலாம். அவர்களைச் சுலபமாக ஏமாற்றி விடலாம். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள். தவறான வழியில் சென்றாலும் சரி, நேர்மையான வழியில் சென்றாலும் சரி. அதிகாரம் ஒன்றேதான்.

ஆட்சி உன் கைக்கு வந்ததும், நீ செய்ய வேண்டிய முதல் காரியம் ராணுவத்தைப் பலப்படுத்துவதுதான். ஏகப்பட்ட எதிரிகள் முளைப்பார்கள். எச்சரிக்கையுடன் இரு. உன் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களை எப்போதும் கண்காணித்துக் கொண்டிரு. யாரையும் சுலபத்தில் நம்பி விடாதே. இது போதும் என்னும் மனநிலை ஆபத்தானது. அதிகாரம் கிடைத்துவிட்டதே என்று சும்மா இருப்பதில் பிரயோஜனமில்லை. அதிகாரம் பெருகிக் கொண்டே போக வேண்டும். அடுத்த பிரதேசத்தின் மீது போர் தொடுத்து உனதாக்கிக் கொள். அதிகாரத்தை வலுப் படுத்து.

நானும் ஒரு அன்பு மயமான மன்னன்தான் என்று சொல்லிக் கொள். அப்படிப்பட்ட ஒரு தோற்றத்தைக்கூட ஏற்படுத்திக் கொள். ஆனால், நீ மாறிவிடாதே. உனக்குத் தேவை அமைதியும் நல்ல பெயரும் அல்ல. அதிகாரம். மேலும் அதிகாரம். அதைவிட உயர்ந்த அதிகாரம்.

ஹிட்லர்களும் முஸோலினிகளும் இந்தப் புத்தகத்தில் இருந்து உருவானவர்களே. மாக்யவல்லி அவர்களுக்காகவே சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். இரக்கம் காட்டுவது உன் பலவீனத்தைத் தான் காட்டும். முடிந்தவரை மிருகத்தனத்தைப் பிரயோகம் செய். குரூரமாக இருப்பதும்கூட சரியானதே. உன் மேல் அதீத அச்சம் உருவாகும்போது உன்னை வழிபட ஆரம்பித்துவிடுவார்கள்.

தி பிரின்ஸை இன்றைய அரசியல்வாதிகள் வாசித்தார்களா என்று தெரியவில்லை. ஆனால் கடைப்பிடிக்கிறார்கள்.



* 'பூக்குட்டி'யாக அசோக் சபரி

* ராஜேஸ்வரி

மாத்தி யோசி! யோசித்ததன் விளைவுதான்... மன்னர் ஆட்சிக்கு மாற்றாக மக்கள் ஆட்சி, மரபுக் கவிதைக்கு மாற்றாக புதுக்கவிதை, மருந்துக்கு மாற்றாக யோகா. இப்படியான மாற்றங்களின் தொடர்ச்சியில் மாற்று சினிமாவும் ஒன்று. மாற்று சினிமா எனும் நம்பிக்கையில் முக்கிய இடம் குறும்படத்துக்கு.

குறும்படத்துக்கு விற்பனைச் சந்தை இல்லாத நிலையில், 'பூங்கா' என்ற குறும்படத்துக்கு தனியார் நிறுவனங்களின் விளம்பர உதவி பெற்று திருப்பூர் புத்தகக் கண்காட்சியில் தனி ஸ்டால் வைத்து 3000 பிரதிகள் விற்று தனி சாதனையைத் துவக்கி வைத்தவர் தாண்டவக்கோன். 'பூங்கா'வைத் தொடர்ந்து 'இப்படிக்கு பேராண்டி' என்ற குறும்படத்தை அடுத்து, தற்போது தமிழருவி மணியன் வெளியிட்டுள்ள குறும்படம் 'பூக்குட்டி.'

* தாண்டவக்கோன்



திருப்பூர் அரிமா விருது, பி.எல்.ஏ. 2007 என்ற விருதுகளைப் பெற்றிருக்கும் தாண்டவக்கோனின் 'பூக்குட்டி'யில், அவர் மனைவி, மகன் மற்றும் மகள்களை நடிக்க வைத்துள்ளார்.

45 நிமிடக் குறும்படத்தின் குறுங்கதை 'பூக்குட்டி' என்ற ஏழைச் சிறுவனைப் பற்றியது. அம்மா இறந்தபின் அம்மா இருப்பதாகவே கற்பனை செய்து தனக்குத்தானே பேசிக் கொள்ளும் பூக்குட்டி என்ற சிறுவனை, பள்ளியும் சூழலும் புறக்கணிக்கின்றன. அப்பாவின் குடிப்பழக்கத்தால் மேலும் சீரழிகிறது அவன் வாழ்வு. அண்டை வீட்டுச் சிறுமி (ஹ்ருதய லட்சுமி) இந்நிலையை மாற்றுகிறாள். அனைவரின் அன்பும் ஆதரவும் பெருகி சிறுவனைச் சூழும்போது மூளைக்கட்டியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படு கிறான். காப்பாற்றும் முயற்சி தோற்கிறது. பூக்குட்டியை முழுதும் அழிக்க விரும்பாத அனைவரும் அவன் உடலை தானமாக்கி மீண்டும் வேறு வேறு நபர்களின் மூலம் பூக்குட்டியை

வாழ வைப்பதாக கதை முடிகிறது.

குறும்படத்தின் இன்றைய நிலை, குறும்படத்தின் தேவை பற்றி இயக்குநர் தாண்டவக்கோனிடம் கேட்டபோது...

''சினிமா மீது எல்லோருக்கும் ஒரு கோபம் உண்டு. அதனுடைய வணிகக் கொள்கையால் சமூகமே முகம் சுளிக்கும் போக்கு



மேலோங்கி வருகிறது. எதைக் காட்டி கூட்டம் சேர்க்கலாம் என்ற கணக்கால் சமூக அக்கறையை குழிதோண்டிப் புதைத்துவிட்டது சினிமா. இந்த நிலையில் பொறுப்புள்ள ஒரு கலைஞனுக்கு இருக்கும் ஒரே சாதனம், குறும்படம்தான். அதன் பலமும் பலவீனமும், அது முன்வைக்கும் சமூக விமர்சனத்தின் விகிதாசாரத்தில்தான் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்த மாற்று சினிமாவை சமூக சக்தியாக மாற்ற, எளிய விதிமுறையோடு கூடிய தணிக்கை முறை, நூலகங்களுக்கு நூல்களை வாங்குவது போல குறும்படங்களையும் வாங்குவது, குறும்படங்களுக்கு அரசு விருது... இவையெல்லாம் எதிர்பார்ப்பு. ஆனால், கனவு என்பது, சினிமாவுக்குப் போவது போல இளைஞர்கள், 'மாமு! ஷார்ட் ஃபிலிம் பார்க்கப் போலாமா?' என்று கேட்குமளவு இயல்பாக மாறவேண்டும் என்பதுதான்'' என்கிறார்!

- அமிர்தா

மாமு! ஒரு ஷார்ட் ஃபிலிம் பார்க்க போலாமா?

தனது மகன் இதயேந்திரன் உடலை தானம் செய்த அசோகன் குறும்படம் பற்றிச் சொல்கையில்:

'முடிந்தவரை உயிர் காப்போம்! முடியாதெனில் உடல் உறுப்பு காப்போம்' என்று சொல்லும் இந்த ஷார்ட் ஃபிலிம், பள்ளியிலேயே அதைப் பிரசாரமாய் துவக்கியிருப்பது விசேஷம். மாணவர்களின் பிரச்னையைப் புரிந்து கொள்ளாத ஆசிரியரையும், போதையின் விளைவையும் நாசூக்காக விளாசி விட்டுப் போவதில் இந்தக் குறும்படம் வெற்றி பெற்றுள்ளது.

★ மகனுடன் அசோகன்...



பாரதிபாலன்

6

காற்று வரும் பருவம்

முன்கதைச் சுருக்கம்...

சாதிக் கலவர பீதியில் பரபரப்பும் பதற்றமும் நிறைந்த சூழலில், வடக்குத் தெருவைச் சார்ந்த பஞ்சவும் குடியான தெருவைச் சேர்ந்த கோவிந்தும் ரகசியமாக, ஆபத்தான சூழலையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து நடுஇரவில் சந்தித்து காதலை வளர்த்து வருகின்றனர்.

இந்தச் சூழலில் அந்த ஊரில் ஒரு சம்பவம் நடக்கிறது. உயர்சாதியைச் சார்ந்த ஒருவன் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலிப்பதாகச் சொல்லி, அவளோடு உறவுகொண்டு ஏமாற்றி விடுகிறான். இவ்விஷயம் ஊர்ப்பஞ்சாயத்து வரை வந்து அவள் அவமானப்படுகிறாள். அவனோ பஞ்சாயத்தில் அபராதம் மட்டும் கட்டிவிட்டுத் தப்பி விடுகிறான். ஊர் முழுக்க இதே பேச்சு. கோவிந்துவுக்கும் பஞ்சவுக்கும் இச்சம்பவம் பெரும் சலனத்தை உண்டாக்குகிறது... இந்த நிலையில் தொடரும் இவர்களது காதல்...

எப்படியோ தத்தித்தத்தி நகர்ந்து, அதைத் தொட்டுவிட்டாயிற்று! எத்தனையோ மைல்கள் கடந்து வந்த களைப்பு. மூச்சிறைக்க ஓடி வந்தாற்போல் நெஞ்சு இரைந்திற்று. இந்தத் தைரியத்தைக் கொண்டு வரப் பட்டபாடு இருக்கிறதே, அதைச் சொல்லவா முடியும்? இரவாக இருந்தால் இத்தனை துடிப்பு இருக்காது. தெருவில் நடக்கவே கூசியிருக்காது. எல்லோரும் தன்னையே பாக்கறாப்புலெ ஒரு பிரமை. பிரமையா நிஜமா?

உச்சி வெயில். வடிச்ச கஞ்சித் தண்ணீர் வெயில். வரப்பில் நடக்க முடியவில்லை. புற்கள் ஈரமிதப்பாக இருந்தன. கால் வழுக்கிக் கொண்டிருந்தது. இது வேறு வழி. வழக்கமாக வரும் வழியல்ல. மாரியப்பன் தோட்டத்துக்குள் தாவினான். பருத்திக் காட்டைக் கடந்து, கத்தரி வரப்பைத் தொட்டான். வரப்பில் நடந்து குடிசையின் முதுகைத் தொட்டான்.

மழைக்குக் குடிசை கிழே இறங்கியிருந்தது. பெரியதாய் சேதாரமில்லை.

''உள்ள யாரது?''

''...............''

''யாரதுங்குறேன்?''

உள்ளே இலேசான இருமல் சப்தம்.

''என்னா வேணும்?''

''கொஞ்சம் எலெ அறுக்கணும்.''

''அட! அய்யா மக்களா! வாக'' பஞ்சுவின் அப்பன் மம்பட்டியான்.

''எலெ அறுக்கணும்'' நா குழறிற்று.

''விரதத்துக்கா?''

''ம்.''

''பக்கக் கன்னா பாத்து அறுங்கையா. கொலெ தள்ளுறதுலெ கை வெச்சிட வேணாம். அப்புறம் செட்டியாரு ஐயாவுக்குப் பதில் சொல்ல முடியாது...''

'பஞ்சு எங்கே போனாள்?' மனம் கேட்கும் கேள்விக்கு கண்கள் விடை தேடித் தவித்திற்று. இதற்கான விடையை அவரிடம் கேட்கவா முடியும்? அவள் எங்கே? அவளைப் பார்க்க வேண்டும் என்ற பரபரப்பு அவனைத் துளைத்தெடுத்திற்று. மனம் சமாதானம் கொண்டது. மோட்டார் ஓடுகிறது. வாழைக்கு அவள்தான் தண்ணீர் காட்ட வேண்டும்.



தண்ணீர் பாய்கின்ற அறிகுறி எங்கும் இல்லை. நகர்ந்தான். ஓடைச் சுவரை ஒட்டித் தண்ணீர் ஓடுகிற சப்தம். கிணற்று மேட்டுக்கு வந்தான்.

கிணற்று மேட்டுக்குப் பக்கம் சட்டென்று ஒரு மின்னல் சொடுக்கினாற் போல் இருந்தது. அவள்தான். அவளேதான்! பஞ்சு. அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். அப்படியே திகைத்துப் போனாள். அவளைப் பகலில் இப்படிப் பார்ப்பது அபூர்வம். கோவிந்து பேருக்கு நான்கு ஐந்து வாழை இலைகளைக் கிள்ளி, சுருட்டிக் கொண்டு வந்தான்.

''உன்னத்தேன் பாக்கவந்தது. உங்க பெரிசு பாத்திடுச்சு. நீ எங்க போனே? தண்ணி கட்டுறீயோன்னுதேன் வாழைக் குள்ளே போனேன்.''

''அடுப்பு எரிக்க எதுனா சிக்குதான்னு லாவிக்கிட்டு கெடந்தேன்.''

''எனக்கு ஒரே பயம்.''

''ஏனாம்?''

''மழ எப்படி பேஞ்சது. ஒங்க குடிசைய நெனைச்சுத்தேன் எனக்கு ஒரு மாதிரி இருந்தது. படுத்துக்கிட்டு உன்னையே நெனச்சேன்.''

''தெரியும்.''

''எப்படி?''

''எப்படினா அப்படித்தான். ராவுலெ இங்கிட்டு வர வேண்டாம்.''

''ஏன் பஞ்சு?''

''அப்பன் இருக்கும்; அதுக்கு கொள்ளிக் கண்ணு.''

''குடிசைக்கு ஒண்ணும் ஆவலெ?''

''மழைக் காத்துலெ ஆலமரம் சாஞ்சுடும். அருகம்புல் ஆம்புடுமா?''

''யே, யப்பா, பேச்சப் பாரு.''

மோட்டார் அறைப் பக்கம் நிழலாடிற்று. கோவிந்து விலகிக் கொண்டான். பஞ்சும் எதையோ தேடுவது போல் பாவனை செய்துகொண்டு மோட்டார் அறைக்குள் இறங்கினாள். பஞ்சுவின் அப்பன்தான். கோவிந்துவைப் பார்த்ததும், ''அட நம்ம சின்னய்யாதானாக்கும்'' என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே எட்டிப் பார்த்தார்.

''பூ கட்ட வாழ நார் கேட்டாக'' என்றாள் பஞ்சு.

''கூரையிலெ சொருகி இருந்துச்சு.''

''அங்க இருக்கா...?'' என்று படியேறினாள்.

''தாயி... அப்படியே அந்த மோட்டார் சுவிட்சை அமத்திப் போடு!''

பஞ்சு வாழை நார் எடுக்க குடிசைக்குள் ஓடினாள். ஓடினாள் என்றால் நிஜமாக இல்லை. பாவனை. எதையோ தேடுவது போல். ஒதுங்கி இவன் பார்வையில் படும்படி நின்று கொண்டாள். கோவிந்தும் காத்திருப்பது போல் மோட்டார் அறைச் சுவரில் சரிந்து நின்று கொண்டான். அந்த வாக்கில் பஞ்சு நிற்பது தெரிந்தது. உதட்டைச் சுழித்து நிற்பது தெரிந்தது. பக்கத்தில் வாழை இலை. சுந்தரிப் பூ மணம் காற்றில்.

மம்பட்டியான் வெட்டரிவாளை எடுத்து குத்த வைத்தார். ஒரு வெட்டுக் கட்டையைத் தூக்கிப் போட்டார். சோளத் தட்டைகளை இடது கையில் கொத்தாய்ப் பிடித்துக் கொண்டு மடமடவென்று வெட்டத் தொடங்கினார். வெட்டுப்பட்டது சிதறியது. இவர் பேர் என்ன? மம்பட்டியான் என்பது பட்டப் பேர்தான். நிஜப் பெயர்? அதுவே நிஜப் பெயர் மாதிரி நின்றுவிட்டது.

மம்பட்டியானுக்கு வேலை மட்டுமல்ல கையும் சுத்தம். அதற்காகத்தான் முத்துச் செட்டியார் அவரைப் பிடித்து வைத்துக் கொண்டார். முத்துச் செட்டியாருக்கு நான்கைந்து தோட்டங்கள். வடக்கே கரட்டுப் பக்கம் ரெண்டு. மேற்கே வாய்க்கால் ஓரம் ஒன்று. இது ஒன்று. அவருக்கு ஒத்தாசைக்கு ஒரு ஆள் தேவைப்பட்டது.



''அரசே! அரண்மனை வாசலில் ஒரு புலவர் வந்திருக்கிறார். இதுவரை தங்கள் மீது மற்ற புலவர்கள் பாடிய பாட்டையும், தமது புதிய பாட்டையும் - ரீமிக்ஸ் செய்வதாகச் சொல்கிறார், அனுப்பி வைக்கட்டுமா?''

- பவானி கிருஷ்ணன்,
பெங்களூரு

முத்து செட்டியார் அவரைக் கூட்டிக் கொண்டு வைத்துக் கொண்டார். மம்பட்டியானுக்கு காலனியில் ஒரு வீடு உண்டு. மண் வீடு. கைக்குள்ளே இருக்கட்டும் என்றுதான் செட்டியார் ஊரடித் தோட்டத்தில் ஒரு குடிசை இறக்கிக் கொடுத்து உட்கார வைத்திருக்கிறார்.

பஞ்சவர்ணம் வெளியே வந்தாள். கையில் ஒரு கருள் வாழை நார். ஆனால், அதை அவனிடம் தரவில்லை.

''சாப்பாட்டு வாசனை மூக்கைத் தூக்குது.''

''இன்னைக்கு அரிசிச் சோறு''

''தொட்டுக்க...?''

''புளியம் பூ தொவையல்.''

''நல்லா இருக்கும்.''

''எங்களுக்கு அதான் வெஞ்சணம்!''

''வர வேண்டாங்குறியா?''

அவனை நேராகப் பார்த்தாள். அவன் முகம் தளும்பிக் கொண்டிருந்தது. ஒன்றும் பேசவில்லை. அவள் முகம் மாறிற்று.

''தோது இல்லாம இருக்கு...''

''என்னவாம்?''

''எங்க அப்பனுக்கு அப்பவே மேலுக்கு சேட்டமில்லைன்னுச்சு. தண்ணீ கட்டுற வேலையும் இல்லை. இங்கயே நொடக்கிடும். மழ விடட்டும்.''

''சரி.''

''கொஞ்சம் கஞ்சி குடிக்கிறீகளா?''

''ம்'' தலையாட்டினான்.

''அம்புட்டுத்தேன்!'' என்று கையை உதறினாள்.

''என்ன ஆயிடும்?''

''என்ன ஆகுமா? வேற வெனையே வேண்டாம்.''

குடிசைக்குள் இருந்து குரல் வந்தது. அப்பன்தான். நடுங்கும் குரலில் கூப்பிடவும் பஞ்சு விலகி ஓடினாள். ஓடியவள் ஒருகணம் திரும்பினாள். தயக்கத்தோடு கோவிந்து நகர்ந்தான். குடிசைக்குள் நுழையும் போதும் ஒருகணம் அவனைப் பார்த்தாள். அவளுக்கும் என்னவோ போல்தான் இருந்தது. கோவிந்து மனமின்றி வரப்பில் நடந்தான்.

என்றும் இல்லாத திருநாளாய் இன்று மம்பட்டியான் பகலில் நொடக்கிவிட்டார். ஆசை ஆசையாய் அரிசிக் கஞ்சியைக் குடித்தார். மூணு கும்பா கஞ்சியைக் காலி செய்தார். கொஞ்ச நேரம் இங்குமங்குமாய் ஊர்ந்து கொண்டிருந்தார். பிற்பாடு தென்னை மட்டையில் பின்னப்பட்ட பாயைத் தூக்கிக்கொண்டு வந்தார். அது அவர் உசரத்துக்கு மேல் இருந்தது. அதை குடிசைக்குள் கிழக்கு ஓரமாகப் போட்டு படுத்துவிட்டார். பஞ்சம் பதறித்தான் போனாள்.

''என்னாப்பே நொடக்கிட்ட?''

''முடியலெ தாயி.''

''என்னா செய்யுது, சொன்னாத்தானே!''

தமிழி!


* கல்கி

அரிமா சங்கத்தின் பெண்கள் பிரிவு, 'சாதனையாளர்' விருதுக்கு சமீபத்தில் திருநங்கை கல்கி பெயரை அறிவித்துள்ளது. இவர் தமிழகத்திலுள்ள திருநங்கைக் கலைஞர்களை ஒன்றிணைத்து 'தமிழி' என்ற பெயரில் திருநங்கை கலை இலக்கிய மையத்தைத் துவக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். திருநங்கைகளின் வாழ்வை, கலையை ஆவணப்படுத்தவும் ஆக்கபூர்வமான பிரசாரப் பணியைச் செய்யவும் இவ்வமைப்பு முயலும் என்கிறார். சபாஷ்!

– சூர்யா

''குதுகுதுன்னு வருது.''

''மழையிலெ நனைஞ்சுட்டியாக்கும்.''

''இன்னைக்கு நேத்தா நனையுது!''

''பின்னே?''

''என்னவோ தாயி. மனசுக்கு ஒண்ணும் வெளங்கலெ. ஏதோ ஆத்தமாட்டாப்புலெ. ஒன்னையும் ஒருத்தன் கையிலெ பிடிச்சுக் கொடுத்துட்டா கொறை பொழுதும் எப்படியோ போக்கிப்பிடுவேன்.''

''ஆமணக்கு! அதுக்குத்தேன் இப்ப கொற.''

''ஏன் தாயி?''

''ஒண்ணக் கட்டிக் கொடுத்துட்டு டங்கு வேரு கிழிஞ்சு கெடக்கு'' என்றாள்.

''ஒங்க அக்காகாரி வாங்கி யாந்த லவி அம்புட்டுத்

'' பாவம் அதுக. அதுகளை நொட்டச் சொல்லு சொல்லுவானேன்! ''



தேன். என்னைக்கு தாயி வெசாழக் கெளமை?''

''நாளண்டு!''

''ஒங்க ஆத்தாக்காரி வெசாளக் கெழமை வாரேண்டா. வர்றானோ இல்ல போடான்னு அவ ஆத்தா வூட்டுலெ இருந்து கிறானோ. குண்டிச் சேலையிலெ மண்ணு ஒட்டாம வேலை செய்யணும்கிறானே. அப்படிப் பொறப்பா பெறந்திருக்கு. சொன்னா கோபம் வந்திடுது. ஒரு சொல்லு தாங்க மாட்டேங்கிறா. கொளத்தங்கரை வழி நடத்திடுறா.

அந்தக் கெழவனும் கெழவியும் கொள்ளைக்கு செல்லம் கொடுக்குறாக. போடின்னு வெரட்டிவிட வேண்டாம்? ஒரு பானை 'கருக்கா' நெல்லு கெடந்துச்சு. ரெண்டு மூணு நாளா சொளகுலெ போட்டு பொடச்சுக்கிட்டுக் கெடந்தா. அம்புட்டையும் இப்ப மடியிலெ கட்டிட்டுப் போயிட்டா. மழை தண்ணியாக் கெடக்கே. என்ன செய்துகளோ ஏது செய்துகளோன்னு பொம்பளைக்குத் தெரிய வேண்டாம்.''

''அக்காவுக்கு முடியெலன்னுச்சு.''

''ஆமா. அவன் ஒரு பொசகெட்ட பய.''

''அப்புறம் ஏன் கொடுத்துச்சு?''

''ஒங்க ஆத்தாதேன். கொடுத்தா என் தம்பிக்குக் கொடுக்கணும். இல்லாட்டி நாண்டுக்கிடுவேன் நின்னுட்டானே! சரி. கொடுத்துட்டோம். பொம்பளைய வெச்சு துப்போட பொழைக்க வேண்டாம்? ஒரு கூறுவாகு வேண்டாம். சம்சாரிங்களைப் புடிச்சு வயக்காட்டுப் பக்கம் போனா பொழச்சுக்கிடுவான். கேட்டாத்தானே? நான் பஞ்சாயத்து போர்டுலெ தோட்டியா போறேன். மாசம் முப்பது கெடைக்குதுண்டு போனான். மேல் நோகாத வேலை. காக்கி உடுப்புண்டு போச்சு. எல்லாம் குடியிலெ போச்சு. அந்தக் கெழவனும் கெழவிக்கும் துப்பு கெடையாது. அவனை அமட்டி வெக்கலாமுல்லெ.''

''பாவம் அதுக. அதுகளை நொட்டச் சொல்லு சொல்லுவானேன்!''

''ஆமா! பாவம் நோவமுண்டு. சன்னப்பய தொரட்டா பண்ணி விட்டுச்சுக. ஒன் அக்காகாரிட்ட கேளு. ஒப்புச் சொல்லி அழுவா. என்னமோ ஆத்த மாட்டாப்புலெ பொழப்பு...''

''சரி, வுடு.''

''அங்க சின்னது ஒண்ணு சுத்திக்கிட்டு திரியுது பாரு. மண்ட மகர வளத்து விட்டுக்கிட்டு, கொட்டுக்காரங்க கூட செட்டு சேத்துக்கிட்டு சுத்துது பாரு. அது இப்ப இங்க நோங்கிக்கிட்டு கெடக்கு.''

பஞ்சவர்ணம் திகைப்போடு பார்த்தான்.

(காற்று வீசும்)

11 ஆண்டுகளாக கயிலாய யாத்திரைக்கு இந்தியாவிலேயே குறைவான கட்டணத்தில் நிறைவான பயணத்துடன் தன்னை அர்பணித்துக் கொண்ட நிறுவனம்

திருக்கயிலாயம்-மானஸரோவர்-முக்திநாத்

மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் , செப்டம்பர் 2009

மேற்கண்ட ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவர் தடாகத்தில் புனித நீராடல்

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மண்டு வருவதற்கு 16 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.59,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது).

சென்னையிலிருந்து இரயில் மூலம் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி)மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து, பின் இரயில் மூலம் சென்னை வருவதற்கு 22 நாட்கள் ஆகும். இரயில் கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) **ரூ.61,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது).

சென்னையில் இருந்து டெல்லி/கொல்கத்தா வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் மூலம் திருக்கயிலாயம் சென்று தரிசித்து, பின் விமானம் மூலம் டெல்லி/கொல்கத்தா வழியாக சென்னை வருவதற்கு 16 நாட்கள் ஆகும். தாங்களே அந்தந்த தேதியில் விமான டிக்கெட்டுகளை குறைவான கட்டணத்தில் பதிவு செய்து கொள்ள உதவி செய்கிறோம்.

சிவாச்சாரியார்கள், திருமுறை ஓதுபவர்கள், டாக்டர்கள் மற்றும் குரூப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை. பாஸ்போர்ட் அவசியம். இல்லாதவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

♦ மானஸரோவரிலும் கயிலாயத்திலும் சாஸ்திரிகளைக் கொண்டு பூஜை, ஹோமம் சிறப்பாக செய்யப்படும் ♦ ஒரு ஜீப்பில் (New Jeep) 4 அன்பர்களை மட்டுமே அழைத்துச் செல்கிறோம் ♦ திருக்கயிலை திருப்பயணம் வீடியோ எடுக்கப்படும் ♦ யாத்திரை காலம் முழுவதும் ஆசாரமான பிராமணாள் உணவு ♦ மருத்துவ வசதி ♦ குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) ♦ உயர்மட்ட அழுத்தத்திற்கேற்றபடி அதிக நாட்கள் தங்கிச் செல்லுதல் ♦ சென்னையிலிருந்து, திருக்கயிலாயம் சென்று கிரிவலம் வந்து திருக்கயிலைநாதனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

தமிழ்நாட்டிலிருந்து கயிலாய பயணத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடனும் பாதுகாப்புடனும் தரமான வசதிகளுடனும் சுகாதாரமான தென்னிந்திய உணவு வகைகளை 3 வேளையும் வழங்கி ஒவ்வொரு குழுவிலும் டாக்டர் மற்றும் சிவாச்சாரியார் துணையுடன் அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க ஒரே நிறுவனம்.



ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

(Kailash - Manasarovar & Mukthinath Yatra Entirely Organised by Brahmins)
68, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை – 600 004.
Cell : 97911 11979 / 94446 76757 (24 Hrs)



SPECIAL CARE FOR SENIOR CITIZENS **An Memorable journey in a life time**




யூத் எக்ஸிபிஷன்!

இது ஜாலி எலெக்‌ஷனுக்கான கல்கியின் மூன்றாவது காலேஜ் விசிட். சென்னை பள்ளிக்கரணையிலுள்ள குமாரன் ஆசான் கலைக் கல்லூரிக்குள் கொஞ்சம் திகிலோடுதான் என்ட்ரி ஆனோம் - இது கோ எட் காலேஜ் ஆச்சே. பாய்ஸின் ஃபேன்டஸி பேண்டேஜ் நக்கல் இருக்குமோன்னு. கான்ஃபரன்ஸ் ஹால்ல நுழைஞ்சா ஃபைட் எக்ஸ்பிஷன் காட்ட பாய்ஸின் புர் புர் புல்லட் சப்தமும், சில்லறை சிதறினா மாதிரி கேர்ள்ஸின் டான்ஸ் ரிகர்ஸல் சங்கீதமும்தான் கேட்டது. மதியம் ஒரு மணிக்கு புரோகிராம் துவங்கி, திரும்பிப் பார்க்கறதுக்குள்ள, 'மணி நாலாயிடுச்சு. இன்னும் இருக்கலாமா ஸார்'னு கேட்டப்பதான் தெரிஞ்சுது. யூத் எக்ஸிபிஷன்ல நேரம் போறது தெரியாம நாம தொலைஞ்சது. அடடா அந்த மூணு மணி நேரமும் கலக்கல் உற்சவம்தான்! அந்த அமர்க்களத்திலேருந்து சில பிட்ஸ்.

மொக்க (விக்னேஷ்) ராஜின் கலக்கல் வரவேற்பு:

இந்த ஜாலிலோ ஜிம்கானா டைப் எக்ஸிபிஷனுக்கு என் பேர்லயே கணேஷ் இருக்கறதால நானே பிள்ளையார் சுழி போட்டு ஒரு மொக்க பாட்டோடு வெல்கம் பண்றேன்.

('வெல்கம்' மினாதே போதும்; பாட்டெல்லாம் வேண்டாம் என நாம் எஸ்கேப் ஆனது தனி அட்வென்ச்சர்!)



● 'மொக்க'

அது எப்படி பாய்ஸ், கேர்ள்ஸ்ன்னு ரெண்டு பேரும் சேர்ந்து படிக்கிற காலேஜுல ஒரே ஒரு மிஸ் ஆர் மிஸ்டர் பிரபலத்தை மட்டும் நீங்க தேர்ந்தெடுக்க முடியும்... ஒரு மிஸ் பிரபலம், ஒரு மிஸ்டர் பிரபலம் அப்படின்னு தனித்தனியா வெக்கணும் இல்லையா?

(உங்களுக்கு சட்டக் கல்லூரியில் இடம் கிடைக்கலையா?)



கொசு கடிச்சா டார்டாய்ஸ் கொளுத்திக்கலாம். ஆனா டார்டாய்ஸ் கடிச்சா கொசுவைக் கொளுத்த முடியுமா?



• 'கஷ்' ராணி நான்சி

'ஆ, ஊ' என கராத்தே செய்து காட்டி, ஆறு மாணவர்கள் சும்மா ஜும்முன்னு மும்பை எக்ஸ்பிரஸ் கணக்கா கலக்கலா மைக் இல்லாம பைக்கை மட்டுமே பிடித்து விதவிதமா வித்தை எல்லாம் காட்டி, அரங்கத்தின் ஒட்டுமொத்த அப்ளாஸ்களையும் அலேக்காக வாங்கிக் கொண்டார்கள். "எனக்கு பதினாறு கலைகள் தெரியுமோ தெரியாதோ... ஆனா பதினாறு வருஷமா கத்துட்டு வர்ற இந்தக் கலை நல்லா தெரியும்" என அசத்தலாகப் பேசினார் ஸ்டண்ட் காட்டியே ஸ்டூடன்ட்களை ஸ்டன் ஆக்கிய பிரஜன்.



• ஃபைட் எக்ஸிபிஷன்

" 'காந்தி ஜெயந்தி'க்காக காந்திஜியோட புகைப்படங்கள்லாம் சேகரிச்சுக்கிட்டு இருக்கோம். நீங்களும் இதற்கு உதவணும்.

ஒரே ஒரு சின்ன கண்டிஷன்ங்க. காந்திஜியோட படம் 500 ரூபா நோட்டுலேயோ அல்லது 1000 ரூபா நோட்டுலேயோ இருக்கணும்..."

(நல்லா கௌப்புறாங்க பீதியை...)



வோட்டு எண்ணிக்கை முடிஞ்சதும், 'பிரபலம்' பிரியாணி விருந்து தருவாங்களா?



* கவுன்டிங் கமிஷனர்கள்



ஒரு நிமிஷத்துல 130 பெயர்களைச் சொல்றேன். நின்னு நிதானமா கேட்டுக் குறிச்சுக்குங்க.

நூர் மொஹமத் (நூறு மொஹமத்)

நயன் தாரா, ஆறு முகம், ஏழு மலை, அஞ்சலி, த்ரீ ஷா கூட்டிக் கழிச்சு பாரு. கணக்கு சரியா வரும்.

(உங்க மேத்ஸ் ப்ரொஃபஸைக் கேக்கணும் முதல்ல... உங்களுக்கு கணக்கு சரியா வருதான்னு)





* 'Mr.பிரபலம்' வினோத்

80% வோட்டுக்களை
வாங்கி இந்த காலேஜின்
மிஸ்டர் பிரபலமாக நான்
செலக்டாகியிருக்கேன்னா நான்
எலெக்ஷன் கிங்கா இல்ல கலெக்ஷன்
கிங்கா? எங்கிட்ட பைட்டும் இருக்கு
வோட்டும் இருக்கு. அப்ப நானும்
மினிஸ்டர் ஆகலாமில்லே!
(ஆகலாம். நல்லா
பேசறீங்களே?!)

* டாக்டர் லலிதா ராமமூர்த்தி துணை முதல்வர்

கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் லலிதா ராமமூர்த்தியின் நேர்காணலிலிருந்து...

மலையாள மண்ணின் மிகச் சிறந்த கவிஞரான மஹாகவி குமாரன் ஆஸானைப் போற்றும்விதமாக இக்கல்லூரி அவரது பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கல்லூரியின் மிகப் பெரிய சிறப்பம்சமே, இந்தியாவிலிருந்து மட்டுமல்ல உலகின் பல பாகங்களில் உள்ள மாணவர்களும் இங்கு வந்து படிப்பதுதான். இதனால் மதம், மொழி, இனம் தாண்டிய ஒரு நட்புணர்வும், சகிப்புத் தன்மையும் இங்குண்டு.

கல்லூரியில் பதின்மூன்று விதமான க்ளப்கள் இயங்கி வருகின்றன. இதில் ஒன்றான நேச்சர் க்ளப்பைச் சேர்ந்த 70 மாணாக்கர்கள், இயற்கை உரம் தயாரித்தல் மற்றும் மரங்கள் நடுதல் என ரொம்ப சுவாரஸ்யமான பயனுள்ள விஷயங்களைச் செய்து வருகிறார்கள்.

- நளினி சம்பத்குமார்



படிக்க 3 மணி நேரம்

மாபெரும் படைப்பாளிகளாக ஒரு சமூகத்தால் அங்கீகரிக்கப்படும் எழுத்தாளர்களின் படைப்புகள் கொண்டாடப்படும்போது, அவர்களின் பிற முக்கியமான சிந்தனைகள் கவனம் பெறாமல் போய்விடுகின்றன. பாரதியின் கவித்துவத்தின் பிரகாசம் அவருடைய செழுமையான உரை நடையைக் கொஞ்சம் மறைத்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். பாரதியைப் போல் தமிழ் வாசகர்களிடையே ஒரு 'திருஉருவாக' (icon) திகழும் இன்னொரு பெயர் கல்கி. இன்றளவும் பொன்னியின் செல்வனும் பார்த்திபன் கனவும் புதிய தலைமுறை வாசகர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என்றால், அது மிக மிக அபூர்வமாக நிகழக்கூடிய ஒன்று. தமிழ் இலக்கிய வரலாற்றில் அத்தகைய காலத்தால் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டன கல்கியின் புதினங்கள். அந்தப் புதினங்களின் வெளிச்சத்தில் ஒரு சமூகச் சிந்தனையாளராக அவர் நேரடியாக எழுதிய பல முக்கியமான கருத்துக்கள் இன்றைய தலைமுறை வாசகர்களைச் சென்றடையாமல் போய்விட்டன. அதை நிவர்த்திக்கும்பொருட்டு வானதி பதிப்பகம் 'அமரர் கல்கியின் கல்விச் சிந்தனைகள்' என்ற தலைப்பில் கல்வி முறை குறித்து கல்கி எழுதிய கட்டுரைகளை ஒரு அழகிய நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளது.

அமரர் கல்கியின் கல்விச் சிந்தனைகள் நடைமுறை சார்ந்ததும் நவீனமானதும் என்றால் மிகையில்லை. அவற்றை அவர் எழுதிய காலத்தில் இந்தச் சிந்தனைகள் மிகவும் முன்னோடியான சிந்தனைகள். இன்றளவும் கல்வி மற்றும் கற்பித்தல் முறை தொடர்பாக நடந்து வரும் பல விவாதங்களை, கல்கி அன்றே மிகக் கூர்மையாக எழுப்பியிருக்கிறார். அவருடைய அக்கறைகள் நமக்கான ஒரு சுயமான, நமது தேவைகள் சார்ந்த கல்விமுறையை உருவாக்குவதேயாகும்.

கல்கி, மெக்காலேயால் உருவாக்கப்பட்ட குமாஸ்தா கல்விமுறையை மிகக் கடுமையாகப் பல இடங்களில் விமர்சிக்கிறார். எதற்கும் உதவாத ஒரு தலைமுறையை உருவாக்குவதுதான் இந்தக் கல்விமுறையின் நோக்கமும் விளைவும் என்பதை ஆதாரங்களுடன் முன்னிறுத்துகிறார். கற்பித்தல் தொடர்பாக அவர் இரண்டு முக்கியமான விமர்சனங்களை, திரும்பத் திரும்ப முன்வைக்கிறார்.



● தமிழச்சி தங்கபாண்டியன்

முதலாவதாக நமது மாணவர்களுக்குத் தேவையில்லாத வரலாறு மற்றும் புவியியல் சார்ந்த விஷயங்களைக் கற்பித்தல். இது மாணவர்களைச் சித்ரவதை செய்யும் ஒரு வேலை என்பது கல்கியின் தீர்மானம். கேள்வித்தாள்களில் அவ்வாறு கேட்கப்படும் அபத்தமான வினாக்களை அவர் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.




போதும்!

தமிழச்சி தங்கபாண்டியன்

இரண்டாவதாக, கணிதம் மற்றும் ஆங்கிலம் போன்றவை கற்பிக்கப்படும் முறை குறித்து அவர் முன் வைக்கும் விமர்சனங்கள். 'சிம்பல்' மற்றும் குருட்டு மனப்பாடம் வழியே கற்பிப்பதற்குப் பதில், நடைமுறை யதார்த்தத்திலிருந்து சிந்தனா பூர்வமாக உருவாக்கப்படும் ஒரு சுயேச்சையான கல்விமுறையை அவர் தீவிரமாக வலியுறுத்துகிறார்.

கல்கி தேர்வு முறையைக் கடுமையாக



வெறுப்பதை இந்தக் கட்டுரைகளில் காண முடிகிறது. தேர்வு பயம் குழந்தைகளிடம் உருவாக்கும் மன அழுத்தம் பற்றி அவர் விரிவாகப் பேசுகிறார். பரீட்சை தோல்வியின் அவமானத்தால் தற்கொலை செய்து கொள்ளும் அல்லது ஆளுமைச் சிதைவுக்கு ஆளாகும் குழந்தைகளின் துயரம், அவரை மிகவும் பதற்றமடையச் செய்கிறது. இந்தத் தேர்வு முறை மூடத்தனமானது என்பதை வலியுறுத்தும் கல்கி, மதிப்பெண் போடும் ஆசிரியர்களை எள்ளிநகையாடுகிறார்.

சுயமான கற்றல்முறையும், பாடச்சுமை இல்லாததுமான மாண்டிசோரி கல்விமுறை குறித்து அவர் பேசுகிறார். இன்று தமிழக அரசு செயல்வழிக் கற்றல் என்ற புதிய கல்விமுறையை நடைமுறைப்படுத்தி வருவதைப் பார்த்தால், கல்கி உண்மையில் மிக மகிழ்ந்திருப்பார். மனப்பாடக் கல்வி முறைக்கு அடிமையான சில பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்தக் கல்வி முறைக்கு எதிர்ப்பு தெரிவிப்பதைக் கல்கி கண்டிருந்தால், அவர்களை எப்படிச் சாடியிருப்பார் என்பதை இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது கற்பனை செய்ய முடிகிறது.

குழந்தைகளின் பாடச் சுமையை நீக்குவது, அதே சமயம் கல்விக்கான வாய்ப்புகளைப் பெருக்குவது என இரண்டையும் ஒரே சமயத்தில் செய்வதற்கான வழிமுறையை, கல்கி பரிந்துரைக்கிறார். அதன்படி குழந்தைகள் ஒருநாளில் மூன்று மணி நேரம் மட்டும் வகுப்பில் இருந்தால் போதும் என்பதைத் தீவிரமாக வலியுறுத்துகிறார். அதுவே அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கு உகந்தது என்று காட்டும் கல்கி, அதன் மூலம் கல்வித் தேவைகளைத் தீர்க்கும் வழிமுறையைக் காட்டுகிறார். போதனா நேரத்தைப் பாதியாகக் குறைப்பதன் மூலம் இன்னொரு 'ஷிப்ட்'டாக வேறு மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பு அளிக்கலாம். அதன் மூலம் பள்ளிகள் கல்லூரிகளில் இடம் கிடைக்காத மாணவர்கள் பிரச்னையை எளிதில் தீர்த்து விடலாம் என்பதுதான் கல்கியின் கருத்து. இதற்காகப் புதிய கல்விக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டியதில்லை. ஆசிரியர்

களுக்கு அவர்கள் ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு உயர்த்திக் கொடுத்தால் போது மானது என்று அவர் பரிந்துரைக்கிறார்.

கல்கியின் கல்விச் சிந்தனைகளில் முக்கியமானது எழுத்தறிவுடன் தொழில் சார்ந்த கல்வியினையும் வழங்க வேண்டும் என்பதுதான். இதற்காக அவர் ராஜாஜியின் குலக்கல்வித் திட்டத்தை, பல இடங்களில் தீவிரமாக ஆதரிக்கிறார். குழந்தைகள் தங் களது பெற்றோர்களின் பாரம்பரியமான தொழில்களைக் கற்றுக் கொள்வதில் தவறு இல்லை. ஆனால் நமது சமூகத்தில் பல பாரம்பரியத் தொழில்கள் சாதிய இழி வோடும், சாதிய அடிமைத்தனத்தோடும் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்ததால் அன்று குலக் கல்வித் திட்டம் கடுமையாக எதிர்க்கப்பட்டது. எனவே பாரம்பரியத் தொழில் என்பதைக் காட்டிலும் சமூகத்துக் குத் தேவையான தொழிற்படிப்புகளை சாதிய பாரம்பரிய அடையாளங்கள் அற்ற வகையில் கற்பித்தால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. மேலும் இன்று உலக மயமாதலின் விளைவாகப் பல பாரம்பரி யத் தொழில்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இன்றைய காலத்துக்கேற்ற நவீன தொழிற் கல்விகளை உருவாக்கினால் அதுவே கல்கி யின் கனவுகளை நிறைவேறச் செய்யும்.

அமரர் கல்கியின் கல்விச் சிந்தனைகள் நடைமுறை சார்ந்ததும் நவீனமானதும் என்றால் மிகையில்லை

கல்வியில் மொழிசார்ந்த பிரச்னைகள் குறித்த கல்கியின் பார்வைகள் இந்த நூலில் மிகவும் குறிப்பிடத்தக்கவை. அவர் தாய் மொழியில் படிப்பதே உண்மையான கல்வி என்பதை ஆழமாக வலியுறுத்துகிறார். அதே சமயம் ஆங்கிலக் கல்வி மூலம் நாம் அடை யக்கூடிய பயனை இழக்கக்கூடாது என்பதி லும் உறுதியாக இருக்கிறார். அறிவியல் போன்ற துறைகளை தமிழில் படிப்பது பற்றிப் பேசும் கல்கி, நாம் புதிய துறைகள் சார்ந்து கலைச் சொற்கள் உருவாக்கும்போது அவற்றை ஒருமுறையான அமைப்பின் கீழ் செய்யவேண்டுமே அல்லாது ஒவ்வொரு வரும் விருப்பம்போல கலைச்சொற்களை உருவாக்கக்கூடாது என்பதை வலியுறுத்து கிறார். அவ்வாறு புதிய கலைச்சொற்களைப் பயிலும்போது அவற்றின் ஆங்கிலப் பதங் களுடன் சேர்த்தே பயில வேண்டும் என்ற கல்கியின் கருத்து மிகவும் முக்கியமானது. தமிழ் மொழிக்கு அடுத்து நாம் ஆங்கிலம் படித்தால் பயன் உண்டு. ஹிந்தி படிப்ப தால் என்ன பயன் என்பதை ஆழமாக வினவுகிறார். தமிழகத்தில் இன்று பின் பற்றப்படும் மொழிக் கொள்கை கல்கி அவர்களால் தெள்ளத் தெளிவாகப் பிரதி பலிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நூல் இவ்வாறு பலவிதங்களிலும் முக்கியமானது மட்டுமல்ல, நமது சமகாலக் கல்விப் பிரச்னைகளைப் பொறுத்தவரை யில் இன்றும் பொருத்தமுடையதாக இருக் கிறது. ●



திரை விமர்சனம்


- ஆசிரியர் குழு

சிவா மனசுல சக்தி

இளைஞர்கள் கழுத்தில் கத்தி



கேம்பஸ் கதை



கிறுக்கு கணங்கள்!

அவளை அதுவரை கிருஷ்ணன் பார்க்கவில்லை.

கல்லூரி இல்லாத சனி ஞாயிறுகளில் வேலை அதிகமாகி விடுகிறது. குளித்து நல்லாடை உடுத்தி பக்தி பீறிட்டெழ சில பெண்கள் அப்போது கோயிலுக்குக் கிளம்பு கிறார்கள். மல்லிகைச் சரம் அந்தரத்தில் தொங்க, குனிந்து புத்துக்கு முட்டை உடைத்து பாலும் ஊற்றுகிறார்கள். பிறகு செல்ஃபோனில் கல கலத்தபடியே வீடு வரை வந்து, சட்டென செல்ஃபோனை அமுக்கி அடக்க ஒடுக்கமாய் வீடு திரும்புகிறார்கள்.

இதுவரை அவள் அவன் கண்ணில் படா திருந்தாள். எப்படி என முதலில் திகைப் பாய் இருந்தது. ஒருவேளை புதுசாய் வந்திருக்கலாம்...

டிரான்ஸ்பாரம் பக்கம் தினசரி சபை கூடும். புதிய செய்தி கள் அப்போது நண்பர் மத்தியில் பரிமாறப் படும். சுசீலாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று ஒருநாள் எல்லோரும் துக்கப்பட்டார்கள். விவேக் தான் அவளை மானசீகமாக வரித்து பிள்ளை யெல்லாம் பெற்று பெயர்கூட வைத்திருந் தான். டவுன் பஸ்ஸில் விவேக் சுசீலா காதல் என, செய்தியறிக்கை வெளியிட்டான். கொஞ்சம் அவள் காத்திருந்திருக்கலாமாய் இருந்தது.

அதே போல கட்டடம் கட்டிய சாரம் சரசரவென்று சரிந்து விழுந்தாற்போல மோகனின் ஒருநாள். அவன் ஆள் மோகனா வைப் பெண் பார்க்க யாரோ காரில் வந்து இறங்கினார்கள். ''அந்த காரை பங்க்சர் பண்ணிடலாம் போலிருக்குடா?'' என்றான் மோகன். அவன் நெஞ்சு ஏறியேறி இறங்கி யது. மோகன் - மோகனா... என்ன பெயர்ப் பொருத்தம் என புளகாங்கிதப்பட்டிருந் தான்.

வந்த கம்னாட்டி பேர் என்ன என்று தெரியவில்லை. ''அவன் பேர் மோகனரங்கனாம்டா....'' என கம்மாவாச்சும் சீண்டிய இளங்கோ, அவன் முகம் போன போக்கைப் பார்த்து ''ஸாரிடா'' என்றான்.

இளங்கோவுக்கு எதிர் வீட்டில் ஒரு பெண். துர்கா. அவனை விடப் பெரியவள்.



'பரவாயில்லை' எனப் பெருந்தன்மையுடன் நினைத்திருந்தான் இளங்கோ.

துர்காவுக்கு வேலை கிடைத்துவிட்டது. பெண்களுக்கு எப்படியோ உடனே வேலை கிடைத்துவிடுகிறது. அதுகூடப் பிரச்னை இல்லை. முன்னெல்லாம் காலையில் பால் எடுக்க வருகையில் நிமிர்ந்து ஒரு பார்வை - இவன் பார்க்கிறானா என்ற பார்வை- பார்ப்பாள். அதற்காகவே எதிர்வீட்டில் பால் போட்ட சப்தத்தில் அவளுக்கு முன் இவன் எழுந்துகொண்டு வாசல்பக்கம் காத்திருப்பான்.

வேலை கிடைத்ததில் இருந்து துர்காவின் போக்கு மாறிவிட்டது. எப்பவாவது அவனைத் தாண்டிப் போகையில், அவன் சைக்கிளில் சும்மாவாச்சும் மணியடித்தால் தலையைக் குனிந்து உள்ளே பொங்கும் சிரிப்பை அடக்கியபடி போவாள். வேலை கிடைத்துவிட்டபின், ''சனியன் இதுங்களுக்கெல்லாம் வேற வேலையே இல்ல'' என்று விட்டாள் ஒருநாள்.

சிந்து என்று ஒரு பெண். எப்பவும் சிரித்தாற்போலிருக்கும். இவன், அவன் என்றில்லாமல் எல்லாப் பையன்களைப் பார்த்தும் சிரிக்கும். துப்பட்டாவை இழுத்து இழுத்து விட்டுக்கிட்டே பேசும். பேசினால், ''அண்ணா'' என்று ஆரம்பித்து விடும். அதற்காகவே பேசாமல் எல்லாப் பையன்களும் சிரிப்பு மாத்திரம் சிரித்து வைத்தார்கள்.

அத்தெருவில் வீட்டைக் காலி செய்து கொண்டு போன ஒரு பெண்ணின் பின்னாடியே கொஞ்ச தூரம் ஓடிப் போனது

தெரு நாய். எல்லாரும் அவள் முன் தெரு நாயாய் உணர்ந்தார்கள்.

சிந்துவுக்கு ஒரு தங்கை, ராணி. இடது கால் கொஞ்சம் ஊனம். எந்த ஆம்பிளையுடனும் 'அண்ணா' என அழைப்பதை அவள் தவிர்த்தாள். ஆனால் நம்ம பசங்கள் 'என்ன தங்கச்சி' எனப் பிரியமாய்ப் பேசி அவளை அனுப்பி வைத்தார்கள்.

கிருஷ்ணனுக்கு ஆச்சர்யம். தெருவில் புதுசாய் ஒருத்தி. சாரங்கபாணி மாமா வீட்டுக்கு வந்திருக்கிறாள்.

வெடவெடவென்று ஒல்லியாய் இருந்தாள். சிரித்தால் முன்பல் கொஞ்சம் அதிகம் எட்டிப் பார்த்தது. பரவாயில்லை அதுகூட அழகாகத்தான் இருந்தது. வாழைப்பூ. குளித்த ஈரக்கூந்தலைத் தளரப் பின்னி நீள ஒற்றைச் சரம் மல்லிகை வைத்திருந்தாள். உச்சியில் ஒரு ரோஜா. அவள் அழகைச் சொல்லும் லவுட்ஸ்பீக்கர்.

திடீரென்று ஒரு யோசனை. நினைத்த கணம் பரவசமாய் இருந்தது அவனுக்கு. இந்தப் புது வரவு, இதை சபையில் போட்டு உடைக்காமல் நமக்குள்ளேயே ரகசியமாய் வைத்திருந்தால் என்ன? ஆள் அத்தனைக்கு இல்லை, பரவாயில்லை... அதே தெருவில் இவன் சகாக்கள் யாரும் இல்லை. ரகசியம் தாக்குப்பிடிக்கும் போலிருந்தது.

கிருஷ்ணன் எதிர்பாராத விஷயம் நடந்தது. மறுநாள் அவன் கல்லூரியில் அந்த வாழைப்பூ படிக்க வந்தாள்.

நீள ஒற்றைச் சர மல்லிகைத் தொங்கல். உச்சியில் ரோஜா. பட்டம் கட்டிய கோயில் யானை.

ஆக, இனி இங்கேயேதான் படித்து முடிப்பாள் என நினைக்கப் பரவசம். எந்த வருஷம், எந்தப் பாடம் படிக்க வந்தாளோ... பரபரப்பாய் இருந்தது.

கல்லூரி வளாகத்தில் அவளைத் தாண்டிப் போக நேர்ந்தால், மனம் படபட படபடத்தது. நேரே முகத்தைப் பார்க்கத் திணறியது. நிமிர்ந்து அவளைப் பார்க்கவே நாலைந்து வாரம் ஆகிவிட்டது. பத்து தரம் அவன் பார்க்க அவள் தலைகுனிந்து கொள்ள, ஒரு தரம் அடடா, அவள் தற்செயலாகத் திரும்பியபோது அவள் பார்வையில் அவன்பட, சட்டெனப் பதறி அவன் குனிந்து கொண்டான்.

'மச்சான் இதான் காதலாடா' என நண்பர்களிடம் கேட்க வெட்கம். ஊய் யென்று கத்தி அமர்க்களப்படுத்தி விடுவார்கள். இதுநாள் வரை அவர்களிடம் சொல்லவும் இல்லை.

கார்ட்டூனில் 'வாழும் கலை'!

'டோரா புஜ்ஜி, டோரா புஜ்ஜி'- என்று தங்கள் மனம் கவர்ந்த கார்ட்டூன் கேரக்டரை உச்சரிக்கும் குழந்தைகள், வெகு சீக்கிரம் 'குருஜி, குருஜி' என்று கொண்டாடத் தொடங்குவார்கள் என எதிர்பார்க்கலாம். ஆன்மிக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் - இந்தியாவில் மட்டுமல்ல, உலகமெங்கிலும் பலராலும் பின்பற்றப்படுபவர். இவரை மையமாகக் கொண்ட கார்ட்டூன் கேரக்டரை தென் அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளை மனத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த 'ப்லிம் ப்லிம்' கார்ட்டூன், ஸ்பானிஷ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஒளிபரப்பாகிறது. விரைவில் பிற மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட உள்ளது என்கிறது வாழும் கலைப் பயிற்சி மையம்.(Art of Living Foundation)

பி.எஸ்ஸி., வேதியியல் முதலாம் ஆண்டு வகுப்புக்குள் அவள் நுழைவதை ஒருதரம் பார்த்துவிட்டான். துப்பறிகையில் வாழ்க்கை எத்தனை சுவாரஸ்யமாகி விடுகிறது... மெல்ல மெல்ல அவளைப் பற்றிய ரகசிய முடிச்சுகளை நானே அவிழ்ப்பேன்.

அவன் கல்லூரிக்கு சைக்கிளில் வந்தான். அவள் பஸ்ஸில் வருவதைத் தெரிந்து கொண்டான். என்னிக்காவது சைக்கிள் ரிப்பேர் ஆகாதா என்றிருந்தது. அப்பா பஸ்ஸில் அனுப்ப மாட்டார். தினசரி செலவுக்கு என்று அம்மாவிடம் காசு தேற்றுவதற்குள் பெரும்பாடாகி விடுகிறது. அதுவும் அப்பாவுக்குத் தெரியாமல் அம்மா தரும் பணம்.

பொறு கண்ணா, உன் சைக்கிளில் டபுள்ஸ் அடிக்கும் காலம் வரும்... என நினைக்க சிரிப்பு.

''இன்னிக்கு என்ன சமையல்ம்மா?''

''வாழைப்பூ தொகையல்...'' என்று கேட்கச் சிரிப்பு.

அவள் பெயரை எப்படித் தெரிந்து கொள்வது என்று யோசனையாய் இருந்தது. சபைக்குப் போவதே இப்போது குறைந்து விட்டது. ''ஏய் மாப்ள படிக்க ஆரம்பிச்சிட்டான்டா'' என்றார்கள் சிநேகிதர்கள். ம், எனப் புன்னகைத்தான். கோயிலுக்குப் பாலூத்த வருவாளா என்று பார்த்தான். அவன் கோயிலுக்குப் போனதே இல்லை. அம்மா துணைக்கு என்று கூப்பிட்டால் கூடப் போனதில்லை.



அவளிடம் செல்ஃபோன் வகையறா எதும் இருக்கிற மாதிரித் தெரியவில்லை. அலங்காரம் என்று பிரத்யேக கவனம் அவளிடம் இல்லை. ஒரேயொரு தடவை லிப்ஸ்டிக் போட்டு வந்தாள். அந்த உதட்டுச் சாயத்தோடு யாருடனோ பேசியபடி பல்லை விரித்து ஒரு சிரிப்பு. யட்சிணி. நல்ல வேளை மத்தியான வெளிச்சம் இருந்தது.

நூலகத்தில் ஒருநாள் அவளைக் கண்டு பிடித்தான். என்னவோ புத்தகம் தேடிக் கொண்டிருந்தாள். இருக்கிற புத்தகத்தையே அவன் படிப்பதில்லை. நூலகம் எல்லாம் வேஸ்ட், அவனைப் பொறுத்தமட்டில். அவன் நூலகத்துக்குள் போனான். நூலகர் ஒரு மாதிரி பார்த்ததை அலட்சித்தான். அலமாரி நிறைய புத்தகம் மறைக்க இந்தப் பக்கம் அவன். மறுபக்கம் அவளது அசைவுகள். கிசுகிசுப்பான சத்தம். வாடிய மல்லிகைப்பூ வாசம். சிநேகிதியோடு வந்திருந்தாள். ''மீனா...'' என்ற ஒருத்தி பேச, அடுத்தவள் பதில் சொல்ல... யார் மீனா தெரியவில்லை. சில குரல்களைக் கேட்ட மாத்திரம் மைக் அட்ஜஸ்ட் செய்தாற்போல உள்ளே ருய்ய்ங்கென்று இருக்கும். இது அப்படியெல்லாம் இல்லை. பரவாயில்லை.

யார் மீனா தெரியவில்லை. சட்டென்று ஒரு கொத்து புத்தகத்தை நீக்கி அவளைப் பார்த்துச் சிரிக்கலாம் போலிருந்தது. திரும்பிப் பார்த்தான். நூலகர் இவனையே பார்த்துக் கொண்டிருந்தார். எதுவும் பேசாமல் வெளியே வந்து விட்டான்.

கல்லூரியில் சக மாணவர்கள் அவன் நூலகத்துக்குப் போவதை ஆச்சர்யமாய்ப் பார்த்தார்கள். ''என்ன மச்சி திருந்திட்டியா?''

அவள் பேர் தெரியாத சஸ்பென்ஸ் தாள முடியாதிருந்தது. தன் வாழ்வின் லட்சியம் போல அவள் பேரைக் கண்டுபிடிப்பதை உணர்ந்தான். அவன் முன்னால் அவள் போய்க் கொண்டிருப்பதாகவும், கவனப் பிசகாய் அவள் புத்தகங்களில் இருந்து கல்லூரி ஐ.டி. கார்ட் கீழே விழுகிறதாகவும் கனவு... அவன் குனிந்து அந்த அட்டையை எடுக்குமுன் கனவு கலைந்து விட்டது.

அவள் பக்கத்தில் அவளுக்குத் தெரியாமல் நடந்து போனபடி, காது ரெண்டையும் உக்கிரக் கூர்மையாக்கி கவனித்தான். எப்போது அவள் எங்கே இருப்பாள், எந்த மரத்தடியில் சாப்பிடுவாள், எங்கே கை கழுவுவாள்... என அத்தனையும் அறிந்திருந்தான், பேரைத் தவிர.

அவள் அவனைக் கவனித்தாளா தெரியவில்லை. 'என் பேர் கிருஷ்ணன்' என தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான். இஸ்திரி போட்ட உடைகள் எடுத்து அணிந்து கொண்டால், மனம் தன்னைப் போல அவள் முன்னால் போய் நிற்க ஆசைப்பட்டது.

''உன் பெயர் நோட்டீஸ் போர்டுல இருக்குடி....'' என்றாள் சிநேகிதி. ''ம்'' என அவள் தலையாட்டினாள்.

அப்படியே திரும்பிப் போனான். ஆகா இன்று முக்கியமான நாள். படபடப்புடன் போய் நோட்டீஸ் போர்டைப் பார்த்தான்... எங்கே போட்டிருக்கிறது தெரியவில்லை.

தேர்வுக்குப் பணம் கட்டாதவர்கள் பட்டியல் இருந்தது. ராஜமாணிக்கம், கணேஷ்ராஜ். அடுத்து அவள் - சித்ரா.

தூரத்தில் அவள். வாடிய ரோஜாப்பூவை கூந்தலில் இருந்து பிரித்து விட்டெறிந்தாள் சித்ரா. குனிந்து அந்தப் பூவைக் கையில் எடுத்தான். சினிமா மனுஷாளை எப்படிக் கெடுக்கிறது...

அம்மாவிடம் என்ன பொய் சொல்லிப் பணம் திரட்டலாம் என அவன் யோசிக்க ஆரம்பித்தான்.

சைக்கிளில் ஏறியபோது விரைவில் டபுள்ஸ் யோகம் அதற்குக் கிடைத்துவிடும் என்று தோன்றியது. ●

கரகம் - சில ஹைலைட்ஸ்

உச்சந்தலை உச்சியிலே
ஏத்தி வெச்ச கரகம் இது...
தேனிப்பட்டி கரகம் - இதில்
கிறங்குதய்யா உலகம்...
முத்தய்யா கிரகம் முறுக்கா
ஈடா ஆளு யாரு இருக்கா...

எஸ்.கே.எம். மீடியா தயாரிக்கும் 'கரகம்' படத்துக்காகத்தான் இந்தப் பாடல்.

✱ அனுராதா ஸ்ரீராம் - பென்னி தியோல் பாடிய இந்தப் பாடலுக்கு இசை புதுமுகம் விஜய் ராஜேஷ்கண்ணா.

✱ 18 அடி உயரமுள்ள வீரகாளியம்மன் சிலைக்கு முன் ஆட வேண்டுமென்பதற்காக செட் போட்டுக் கொடுத்திருக்கிறார் என்.எஸ்.தாஸ்.

✱ கும்பகோணம் பகுதியில் இந்தப் பாடல் படமாக்கப்பட்டபோது, நடிகர்களோடு சேர்ந்து மக்களும் நடனமாடி இருக்கின்றனர்.

✱ 'நாக்க மூக்க' சின்னப் பொன்னு இந்தப் படத்தில் 'சமயபுரம் மாரியம்மா' பாடலைப் பாடி நடித்திருக்கிறார்.

✱ இந்தப் படத்தின் மொத்தக் காட்சிகளும் ஏறக்குறைய ஏரிகளால் சூழப்பட்ட தீவு போன்ற பகுதியில்தான் எடுக்கப்பட்டன.

✱ 'கரகாட்டக்காரன்' படத்துக்குப் பிறகு முழுக்க முழுக்க 'கரகம்' ஆடும் ஒரு குடும்பத்தின் பின்னணியைக் கதையாகக் கொண்டது இந்தப் படம்.

- தேவிஸ்ரீ



காதலும் காதல் சார்ந்த இடமும்

காதல் திணையில் ஒரு புயல்

— கே.பாரதி





* பிரமோத் முதலிக்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து திணைகளும் மனித வாழ்வில் காதலும் காதல் சார்ந்த இடங்களாக வரையறுக்கப்பட்டவை. அந்தக் காதல் திணையில் இப்போது மையம் கொண்டுள்ளது ஒரு கலாசார புயல்! (புயல் என்றாலே அழிவு என்றுதானே பொருள்?) கலாசாரக் காவலர்களாக, புயலாக 'ராம்சேனா' அமைப்பு செயல்படத் துவங்கியவுடன் கேரளாவைச் சேர்ந்த மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ.வின் மகள் தாக்கப்பட்டார் இஸ்லாமிய இளைஞருடன் நட்பு கொண்டதற்காக! இவர்களின் தாக்குதலால் மற்றொரு இளம்பெண் தற்கொலை செய்து கொண்டார். இவையிரண்டும், வெறுமே பேசிக்கொண்டு சென்றவர்களை காதலர்கள் என நினைத்து ராம் சேனா தாக்கியதன் விளைவு. பிறகு இந்தப் புயல் வலுவடைந்தது.

கேளிக்கை (பப்) விடுதியிலிருந்த மாணவர்களை, பெண்களை அடித்து விரட்டி ரணகளமாக்கியது. ஒவ்வொரு வினைக்கும் அதற்கு இணையான எதிர்வினை உண்டு. மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சர் ரேணுகா சௌத்ரி 'பப்பரோ' (பப்புகளை நிரப்புவோம்) என்று அறைகூவல் விடுத்து, இணையதளங்களில் ஆதரவு திரட்டி, முப்பதாயிரம் பெண்களை ஒன்றிணைத்து தமது எதிர்ப்பைக் காட்டினார்.

'காதலர் தினக் கொண்டாட்டத்தை அனுமதிக்க முடியாது. பொது இடத்தில் கூடிக் குலவும் காதலர்களுக்குக் கட்டாயத் தாலி கட்டி வைப்போம்' என மிரட்டல் விடுத்ததும், பெண்கள் அமைப்பினர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிங்க் ஜட்டிகளை காதலர் தினப் பரிசாக பிரமோத் முதலிக்குக்கு அனுப்புவோம் என்றனர். அவர் பதிலுக்கு நாங்கள் புடைவையை அனுப்புவோம் என்றார். முன்னெச்சரிக்கையாக ராம்சேனாவினரைக் கைது செய்தாலும், காதலர் என நினைத்து கணவன் -

மனைவி தாக்கப்பட்டும், கடைக்குப் போன அக்கா - தம்பி தாக்கப்பட்டும், காதலர் கொடும்பாவியை எரித்தும், காதலர்கள் என்று நாய்க்கு கல்யாணம் செய்வித்து 'காமெடி' செய்தும்... என காதல் என்ற ஓர் உணர்வும் இப்போது அரசியலாக்கப்பட்டு விட்டது. ராம்சேனா அணுகுமுறை தனிநபர் உரிமையை மதிக்காத மூர்க்கத்தனமானது மட்டுமல்ல; ஜனநாயக அமைப்புக்கே விரோதமானது. காதலர்களை, காதலைத் தடைசெய்து கலாசாரத்தைக் காப்பாற்றும் உரிமையை அதிகாரத்தை இவர்களுக்கு அளித்தது யார்?

''உலகமயமாதலைப் பட்டிதொட்டி வரை கொண்டுபோனதன் விளைவு இது. சினிமாவும், தொலைக்காட்சியும், பத்திரிகையும் அள்ளித் தெளிக்கும் ஆபாசத்தை அனுமதித்துவிட்டு, கலாசாரம் சீரழிந்து விட்டதாக தனிநபர்களைத் தாக்குவது மோசமான முரண்பாடு'' என்கிறார் எழுத்தாளர் லதா ராமகிருஷ்ணன்.

பள்ளியில், கல்லூரியில் இருக்க வேண்டியவர்கள் பப்(கேளிக்கை விடுதி)புகளில் ஏன் இருக்கிறார்கள் என்ற கேள்வி, மீடியாவால்

''அவரு போலி டாக்டர்னு எப்படிச் சொல்றீங்க?''

''பின்னே! அவருகிட்ட போனா உள்நாக்கை நீட்டச் சொல்றாரே...!''

- வெ.சீதாராமன், திருவல்லிக்கேணி



❝ உலகமயமாதலை பட்டி தொட்டி வரை, கொண்டுபோனதன் விளைவு இது ❞



* லதா ராமகிருஷ்ணன்

வசதியாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று குற்றம்சாட்டுகிறார் வித்யா ராம் பிரதீப்.

இப்போது புயல் வலுவிழந்து இருக்கலாம் அல்லது இன்னொரு முறை மையம் கொள்ளலாம். நாம் சொல்வது இதுதான்... கலாசாரத்தின் பெயரால் அச்சுறுத்துவது தவறு. போதையூட்டும் ஆதரவு காட்டுவதும் தவறு. வன்முறையுடன் கூடிய மதவாத மிரட்டல்கள் ஒருபோதும் உதவப் போவதில்லை. காதல் மற்றும் கேளிக்கையிலேயே பிரதானமாய் இருக்கும் இளைஞர்கள் நழுவவிட்டிருக்கும் நல்ல மதிப்பீடுகளை, கொள்கைகளை, அவர்களின் பிடிமானமாய் மாற்றுவது எப்படி என்பதே சமூக ஆர்வலர்களின் பிரதான கவலை. காதலுக்கு வக்காலத்து வாங்கும் அதே வேளையில், அரசுகளின் மதுக் கொள்கையும் வாழ்க்கை முறையாகவே மாறி, பெண்ணையும் வீழ்த்திக் கொண்டிருக்கும் மதுப் பழக்கமும் முதல் விவாதப் பொருளாகி விட்டன. இங்கிருந்தே நாம் நமது பாதையை வரையறுக்க வேண்டும்.

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? சட்டமன்ற உறுப்பினர்கள் ஒட்டு மொத்தமாகப் பதவி விலகினால், இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்கிறாரே முதல்வர்?

! முன்பு இலங்கைப் பிரச்னை தீர மத்திய அரசு தலையிடாவிட்டால் தமிழக எம்.பி.க்கள் ராஜினாமா செய்வர் என்று நெருக்கடி கொடுத்தாரே... அப்போது என்ன உத்தரவாதம் இருந்ததாம்?!

● அ.அப்துல்காதர், சென்னை-45

? ஐம்பதாயிரம் பேரோடு தி.மு.க.வில் இணையப் போகிறோம் என்கிறாரே எல்.கணேசன்?

! ஒரு லட்சம் பேரோடு இணையப் போவதாக முன்பு சொன்னாற்போல் இருக்கிறதே? இப்போது ஐம்பதாயிரம்! அடுத்த அறிவிப்பில் இது 25,000 ஆகக் குறையுமோ!

● கே.எஸ்.கிழாம்பூர் ராமையா, டேவாஸ் (ம.பி.)

? விலைவாசியெல்லாம் எக்கச்சக்கமாக ஏறியிருக்கும்போது, 'நீங்கள் கேட்டவை' பகுதிக்கான சன்மானங்கள் மட்டும் நூறு, ஐம்பது என்று நிலையாக நிற்பது ஏன்?

! ஏத்திட்டோம் - முதல் பரிசு ரூ. 150/-; இரண்டாம் பரிசு ரூ. 75/-

● D. ராமகிருஷ்ணன், குளித்தலை

? நடிகைகள் ஏராளமான பணம் தந்து கிரிக்கெட் வீரர்களை ஏலம் எடுத்துள்ளனரே?

! பணம் தங்களிடம் குவிஞ்சு கிடக்கிற மாதிரி, இந்த ஏலத்தின் மூலம் பப்ளிஸிடியும் குவியும் என்கிற தைரியத்துலதான்!

● வீர.செல்வம், பூம்புகார்

? காதலர் தினம் கொண்டாடுபவர்களுக்குப் பாதுகாப்பு தருகிறது அரசு. இது நம் சமுதாயத்துக்குத் தேவையற்ற



நீங்கள் கேட்டவை - தராசு



✱ அவசரச் சான்றிதழ்!

விழா என்று அறிவுரை கூறாதது ஏன்?

! சங்க கால இலக்கியத்தில் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை காதலைப் போற்றி, சிறப்பித்து வருகையில், காதலர் தினம் நம் சமுதாயத்துக்குத் தேவையில்லை என்று எப்படிச் சொல்லுவது? நமது பாரம்பரியப் பண்பாடு கெடாத வகையில் அதைக் கொண்டாடுமாறு வேண்டுமானால் அறிவுரை கூறலாம். அவ்வளோதான்.

● **எம்.சம்பத், வேலாயுதம் பாளையம்.**

✱ குறையும் கணக்கு!



✱ புரியாத டைரக்ஷன்!



? "மும்பையில் நிகழ்ந்த தீவிரவாதத் தாக்குதலுக்கான சதித்திட்டம் எங்கள் நாட்டில்தான் தீட்டப்பட்டது" என்று பாக். உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் ஒப்புக்கொண்டிருக்கிறாரே?

! சர்வதேச நிர்ப்பந்தத்தின் பேரில், வேறு வழியின்றி, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் முயற்சியை நிறுத்தியுள்ளனர். இனிமேல் அதைத் துருவி அல்வா கொடுக்காமல் இருந்தால் சரிதான்!

● **க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? தங்கத்தில் முதலீடு செய்யலாமா?

! நீண்ட கால முதலீடு வேண்டுமானால் செய்யலாம், தங்கத்தின் தூய்மை உத்தரவாதம் செய்யப்படுமானால். அதில் கவனம் தேவை.

● **செ.சத்தியசீலன், கிழவன் ஏரி**

? இலங்கைத் தமிழர் பிரச்னையில் மத்திய அரசு தனது மௌனத்தைக் கலைத்திருப்பது பற்றி...?

! 'புலிகளுக்கு எதிரி; ஈழத் தமிழனுக்கு நண்பன்' - இதுதான் மத்திய அரசின் பாலிஸி. என்ன, தோழமை தி.மு.க., பா.ம.க.வின் நெருக்குதலுக்குக் கட்டுப்பட்டு, இப்போது 'புலிகளின் எதிரி' என்பதை அடக்கி வாசித்து, 'ஈழத் தமிழனின் நண்பன்' என உரக்கக் குரல் கொடுக்கிறது. That's all.

● **மல்லிகை மன்னன், மதுரை-17**

? 'காவிரிப் பிரச்னையைத் தீர்க்க முடியாத அரசியல்வாதிகள் இலங்கைப் பிரச்னையில் அலட்சியம் காட்டுவதும் என்னைக் கைது செய்வதும் கோழைத்தனம்' என்று விமர்சனம் செய்துள்ளாரே இயக்குநர் சீமான்?

! சினிமா நடிகர்களை டைரக்ட் செய்வது போல் ஆட்சியில் உள்ளவர்களை டைரக்ட் செய்ய முடியாது. இதை சீமான் இன்னுமா புரிந்துகொள்ளவில்லை! ஐய்யோ பாவம்! கனவுத் தொழிற்சாலையில் எவ்வளவு வேணுமானாலும் வீரம் காட்டலாம். நிஜத்தில் வீரத்துடன் விவேகமும் தேவை. அது கோழைத்தனம் ஆகாது.

● **எம்.சிவசண்முகம், திருப்பூர்** ❑



✱ கேட்கும் சலுகை!

? தமிழக அரசு படிப்படியாக மதுவை ஒழிக்கப்போவதாகச் சொல்லிவிட்டு, இப்போது 'டாஸ்மாக்'குகளில் ஜில்லென 'பீர்' வழங்குவதற்கு ஒன்பது கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறதே?

! படிப்படியாக மதுவிலக்கு என்பது ராமதாஸுக்கு வைக்கப்பட்ட ஐஸ். ஜில் பீரும் டாஸ்மாக் கடைகளுக்குக் கூடுதலான விற்பனை இலக்கும்தான் தி.மு.க. அரசின் நிரந்தர பாலிஸி.

● அ.சுகுமார், காட்பாடி

? அரிசி விலை வெளிமார்க்கெட்டில் விர்ரென்று உயர்கிறதே?

! மார்க்கெட் நிலவரத்துக்குச் சம்பந்தமில்லாத விதத்தில் அரசு மலிவு விலையில் அரிசி விநியோகிக்கும்போது, வெளிமார்க்கெட்டில் அதற்கு ஈடாக விலை உயர்வது பொருளாதார நியதி. உணவு உற்பத்தி, வெள்ளத்தால் பாதிக்கப்படும்போது விலை உயர்வது இயற்கை நியதி. தற்போது நடுத்தரவர்க்கத்துக்கு இரண்டு பக்கமும் அடி!

● ஆர்.ராஜதுரை, சீர்காழி

? ''ஆதீனங்கள் மீது யாராவது வழக்கு தொடர்ந்தால், குருமகா சன்னிதானங்களை எக்காரணம் கொண்டும் கோர்ட்டுக்கு அழைக்கக்கூடாது. உரிய அனுமதி பெற்று, நீதிபதி நேரில் ஆஜராகி, அவர்களிடம் விசாரணை செய்ய வேண்டும்'' என்கிறாரே மதுரை ஆதீனம்?



✱ மறந்த நெருக்கடி!

! சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம் என்பதால் அவரது வேண்டுகோள் எடுபடாது. நிற்க; ''வழக்குக்கே இடமிராது'' என்ற நம்பிக்கையுடனும் நம்பிக்கையூட்டும் வகையிலும் அவர் பேசியிருந்தால் அது மதுரமாக இருந்திருக்கும்!

● ஜி.சுந்தரராஜன், சென்னை-42. ★

? வழக்கறிஞர்களின் நீதிமன்றப் புறக்கணிப்பால் நிலுவையிலுள்ள வழக்குகள் அதிகரித்துக்கொண்டே போவது நியாயமா?

! எதற்காகப் போராடுகிறீர்கள் என்று கேட்கப்பட்டபோது, பதில் தெரியவில்லை பல வழக்கறிஞர்களுக்கு; அவர்களா குவிந்து கிடக்கும் வழக்குகளைப் பற்றிக் கவலைப்படப் போகிறார்கள்!

● பி.இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

? மிகப் பெரிய பட்ஜெட்டில் எந்திரன் படம் தயாரிப்பில் இருக்கும்போது அதன் ஹீரோவான சூப்பர் ஸ்டார், ''நான் கடவுள் போல இனி படங்கள் வராது'' என்று சொல்வது சரிதானா?



✱ துருவும் பூசணி!

! எந்திரன் எப்படியோ தெரியாது; ஆனால், தமிழின் ஆகச் சிறந்த படம் எடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்வதோ நினைப்பதோ முற்றிலும் தவறாகிவிடும். The best is yet to come... (always)!

❑ ரூ. 150 பரிசு பெறுபவர்: எம்.சிவசண்முகம், திருப்பூர்


★ ரூ. 75 பரிசு பெறுபவர்: ஜி.சுந்தரராஜன், சென்னை-42.

பொழுது போக்கும், அன்றைய தினத்தை சுவாரஸ்யமாக்கும், புதிய தகவல்களை அளிக்கும் பொருட்காட்சி, கண்காட்சிக்கு கூட்டம் கூடும். ஆனால், சமீபத்தில் இந்து ஆன்மிக சேவை கண்காட்சிக்கு மக்கள் வெள்ளம் அலை பாய்ந்தது ஆச்சரியமாய் இருந்தது. மரணத்தை நோக்கிப் பயணமாகும் வாழ்வில் மரணம் குறித்தான மதிப்பீடு என்ன என்று கேள்வி எழுப்பிய நவீன நாடகத்தைப் பார்த்த ஜனங்களின் கைத்தட்டல், கண்காட்சியின் அரங்கை அதிர வைத்தது. 33 அமைப்புகள் கலந்து கொண்ட இந்தக் கண்காட்சி அரங்கினைக் காண வந்திருந்தவர்களிடம் கருத்து கேட்டபோது...

''+2 படிக்கிறேன். மரணத்தைப் பற்றிய குழப்பம் போயிடுச்சுனா வாழ்க்கை பற்றிய தெளிவு வந்துடும்னு இப்ப தெரிஞ்சுக்கிட்டேன். இதைத் தெரிஞ்சுக்க இந்தக் கண்காட்சி ஹெல்ப் ஃபுல்லா இருந்துச்சு.''



''**ஆ**ங்கில ஆதிக்கம் அதிகம். நாடகம் கூட இங்கிலீஷ்லதான் நடந்தது. அதனால உள்வாங்க முடியல. 32000 பள்ளிக்கூடங்களும் 13000 ஹாஸ்பிடல்களும் இந்து அமைப்புங்க நடத்துறது இப்பதான் தெரியுது.''



வெவ்வேறு ஆன்மிகம்

• சாந்தி

''**எ**னக்கு ரவிசங்கர் சுவாமிஜிதான் தெரியும். அப்பாதான் சொன்னாரு அவரைப் போல நிறைய பேர் இருக்காங்கன்னு. அவங்க எப்படி இருப்பாங்க என்னெல்லாம் பண்ணுவாங்கன்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன்.''



• வெங்கட் லக்ஷ்மி



"இந்து மத அமைப்புகள் இவ்வளவு இருக்கா? என்ற ஆச்சரியமும், இவ்வளவு சோஷியல் வொர்க் செஞ்சுக்கிட்டு இருக்கிறப்ப அதை ஏன் இவ்வளவு நாளா இவங்க பிரபலப்படுத்தல என்ற கோபமும், இப்பவாவது வெளி உலகத்துக்குத் தெரிய வெச்சாங்களே என்ற பெருமையும் இந்தக் கண்காட்சிக்கு வந்தப்ப எனக்கு ஏற்பட்டது."



✱ ஸ்ரீதேவி

"இந்த ஸ்டால் வெறும் வியாபாரத்துக் கானதில்ல! சக்ஸஸ்ஃபுல்லான பிஸினஸ் பண்ண ஆயிரம் வழி இருக்கு... அதெல் லாம் ரொம்பச் சுலபம். முதல்ல, 'எங்க சர்வீஸ் என்ன உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்கு நாங்க உதவ முடியுமா?' இத பப்ளிக் கிட்ட கேக்கிற, சொல்ற முயற்சி."



✱ விஷ்ணு

உண்டா?

இந்து ஆன்மீக - சேவை கண்காட்சிக்கான சென்னை வரவேற்புக் குழு சேர்மனாக இருந்து பணியாற்றிய பத்மா சுப்ரமணியம்:

"உலகம் முழுதும் மனத்தளவில், செயலளவில் பல சீரழிவுகளையும் நெருக்கடியையும் சந்தித்து வரும் சூழலில் இது நல்ல ஆரம்பம். இது அறிவார்ந்த ஆன்மீகக் குழுக்களின் ஒருங்கிணைப்பு. பல்வேறு சமயங்களில் வித்தியாசம் இருக்கலாம். அவர்களின் ஆன்மீகத்தில் வித்தியாசம் இருக்க முடியுமா என்ன? எத்தனை நாள் சண்டைக்கான மனோபாவத்தோடு இருப்பது? நல்லிணக்க முயற்சியை யாராவது துவக்கித்தானே ஆக வேண்டும். அதனால், குளோபல் ஃபவுண்டேஷன் ஃபார் சிவிலைசேஷன் ஹார்மனி என்ற அமைப்பு துவக்கப்பட்டது. அதில் நானும் உறுப்பினர். இதன் சார்பில்தான் சென்னையில் இந்து ஆன்மீக - சேவை கண்காட்சியை நடத்தினோம். இந்தக் கண்காட்சிக்கு மூலக்கரு சுவாமி மித்ரானந்தா தான். இதில் நாங்கள் சமயத்தை ஃபோகஸ் செய்யவில்லை. சமயத்தின் சமூக சேவையைத் தான் ஃபோகஸ் செய்தோம். அரசியலுக்கு அப்பாற்பட்ட இம்முயற்சி, சேவை அமைப்புகள் ஒன்றோடு ஒன்று பரிவர்த்தனை செய்து கொள்ளவும், இந்து அமைப்புகள் சமூக சேவையில் பிறருக்குச் சளைத்தவை அல்ல என்று காட்டவும் தான். மனநிறைவான, வெற்றிகரமான இக்கண்காட்சி வேறு வேறு இடங்களிலும் தொடரும். தொடரவேண்டும் என்பது என் ஆசை" என்றார்.

\- சூர்யா



✱ பத்மா சுப்ரமணியம்

பிரியமாணியம்

சினி சிப்ஸ் பகுதியில் சினிமா துணுக்கை தெரிவித்துவிட்டு அதற்கேற்றாற்போல் கமெண்ட் அடித்திருப்பது ரசிக்கும்படி இருந்தது. உதாரணம் : செல்வராகவன் = செலவுராகவன்.

- எம்.மிக்கேல்ராஜ், விருதுநகர்

எழுத்துக்கள் கூட காலப் போக்கில் அழிந்துவிடும். ஆனால், சிற்பங்கள் ஆயிரம் வருடங்களானாலும் அதை வடித்தவரின் திறமையைப் பறைசாற்றும் என்பதை சிற்பி கணபதியின் பேட்டி வாயிலாகத் தெரிந்துகொண்டேன்.

- ரேவதிப்ரியன், ஈரோடு-1



'அயோத்யா அபாயம்' - அத்வானிக்கு அறிவுறுத்தும் தலையங்கமும் சரி; ஜெ.வுக்கும் ராமதாஸுக்கும் ஏற்பட்ட பத்து நாள் கவலையை படமாகத் தந்ததும் சரி. கல்கி கல்கிதான்.

- இரா.கல்யாணசுந்தரம், அனுப்பானடி

நாம் நடப்பது என்றால் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதில் இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றனவா? என்று அதிசயப் பட வைக்கிறது 'நீ நடந்தால் நடையழகு!' கட்டுரை.

- ஆர்.பிருந்தா இரமணி, மதுரை

ரீடர்ஸ் கார்னர் தகவல்கள் வாசகர்களின் மனத்துக்கு புதிய சிந்தனையை வழங்கின.

- கீதா முருகானந்தம், திருவைகாவூர்

பாலிடிக்ஸ் பஜாரில் இந்த வாரம் நிறையவே (அரசியல்)காய்கறிகளை வாங்க(படிக்க) முடிந்தது.

- ஆர்.ரங்கநாதன், சென்னை - 17

'பழு... விழு' தஞ் சாவூர்க்கவிராயரது பழுத்த இந்தச் 'சொல்வாசம்' ஃபெவிக்காலாய் மனசுக்குள் ஒட்டிக் கொண்டது!

- எஸ்.ஏ.கேசவன், கு.கழுகாசலபுரம்

C.T.T.E. காலேஜ் செதுக்கலையும், R.B. கோத்தி ஜெயின் காலேஜ் கலக்கலையும் படிச்சேன். ரெண்டுலேயுமே 'நக்கல்' கொஞ்சம் தூக்கலாகவே இருந்தது.

- என்.பாலகிருஷ்ணன், மதுரை

கார்ட்டூனைப் பார்த்து விட்டு ஜெ.வும் மருத்துவரய்யாவும் அறிக்கையை கல்கி பக்கம் திருப்பி விடப் போகிறார்கள்!

- அ.சம்பத், திருவரங்கம்

மெர்வினின் 'எழுத்தாளர்களுக்குச் சில பரிந்துரைகள்', ஏமாளிகளாக ஆவதைத் தடுக்கின்ற கவசங்களாகத் திகழ்கின்றன!

-கே.கஸ்தூரி, வேலூர்

ஈரத்துணியும்!

"மரபணு மாற்றுவிதை மனித குலத்தின் வதை" படித்தேன்! குலை நடுங்க வைக்கிறதே! தேவையா இந்த வதையும் ஆராய்ச்சியும்?

- வே.முருகேசன், சென்னை - 88

"தேர்தல் சமயத்தில் பிரியாணி; மற்ற நாட்களில் ஈரத்துணி" என்ற தராசின் பதில் சரியான நெத்தியடி!

- வே.ந.கதிர்வேல், வேலூர்-6

ஸ்வீட்டா, ஸ்டைலா, ஸ்மார்ட்டா, என்று அட்டையில் போட்டால் மட்டும் போதாது. உள்ள விஷயமும் இருக்கணும்ல? கடந்த சில வாரங்களாக கல்கி வறட்சியாகவே காணப்படுகிறது. சிறு கதைகளுக்கு எடுத்துக்கொள்கிற அக்கறையை மற்றவற்றுக்கும் ஒதுக்கவேண்டுமல்லவா? ஏன் இந்தத் தொய்வு?

-எம்.மணிபாரதி, தேனி

ஆழமான வார்த்தைகளால் எழுதப்பட்ட விமர்சனத்தை, என் ஐம்பது வருட சினிமா வாழ்க்கையில் பராசக்திக்குப் பிறகு இப்போதுதான் 'நான் கடவுள்' படத்துக்காக படிக்கிறேன்.

- கே.எம்.பாலகிருஷ்ணன்,
ஆழ்வார்பேட்டை

வட்டமேஜை



'மாஃபா' பாண்டியராஜன்



தமது அறைக்கு வெளியே அந்த இளைஞர் தயங்கித் தயங்கி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் தலைவர் டாக்டர் ராவ். ''உள்ளே வா'' என்று அழைத்தார். அவன் நிறுவனத்தில் பணியில் சேர்ந்து சில வருடங்களே ஆகியிருந்தன. தயங்கித் தயங்கி உள்ளே வந்தவன் கையிலிருந்த கடிதத்தை ராவிடம் கொடுத்து, ''நீங்கள் படித்துவிட்டு, நேரம் இருக்கும்போது இது பற்றிப் பேச அழைக்க வேண்டுகிறேன்'' என்று பணிவாகச் சொல்லிவிட்டு அவசரமாக வெளியேறினான். அவனுக்கு இன்னும் பதற்றம் ஓயவில்லை. நெடு நாட்களாக மனத்தில் அரித்துக் கொண்டிருந்த விஷயங்களை கடிதத்தில் கொட்டியிருந்தான் இளைஞன். ''நமது நாட்டு செயற்கைக் கோள்களும், அவற்றை ஏவும் ராக்கெட்டுகளும், முழுக்க, முழுக்க வெளிநாட்டில் உற்பத்தியாகும் உதிரி பாகங்களையும், இன்ஜின்களையும் வைத்துத்தான் தயாரிக்கப்படுகின்றன. ஏதாவது சிறிய பழுது என்றாலும் வெளிநாட்டின் கையைத்தான் நாம் நம்பி இருக்கிறோம். சாட்டிலைட்டும், அதை ஏவும் ராக்கெட்டும் நமது தயாரிப்பாக இருக்க வேண்டும். இது பற்றிய தொழில்நுட்பம் முழுவதும் இந்தியாவில் உருவானதாக இருக்க வேண்டும். அதற்காக நாம் செய்ய வேண்டியவற்றை இங்கே பட்டியலிட்டிருக்கிறேன்'' என்பது தான் அந்த இளைஞன் எழுதிய கடிதத்தின் சாராம்சம்.

கடிதத்தைக் கொடுத்துவிட்டானே தவிர, அந்த இளைஞனுக்கு மனத்துக்குள் உதறல் இருந்துகொண்டே இருந்தது. ''நம்மைவிட மூத்த, அனுபவமிக்க விஞ்ஞானிகள் வேலை செய்யும் இந்த நிறுவனத்தில் மிக மிக இள நிலையில் உள்ள நான், இதுபோன்ற கடிதத்தைக் கொடுப்பது 'அதிகப்பிரசங்கித்தனம்' என்று முத்திரை குத்தி விடுவார்களோ?'' என்ற படபடப்பு கூடியது.

இரண்டு நாள் விடுமுறையில் ஊருக்குப் போய்விட்டு திங்கட்கிழமை காலை அலுவலகம் வந்தான் இளைஞன். உட்கார்ந்த உடனேயே தலைவர் ராவிடமிருந்து அழைப்பு வந்தது. 'நல்லா மாட்டிக்கிட்டோம்' என்று பயந்தவாறே அவரது அறைக்குச் சென்றான். உள்ளே நுழைந்தவுடன் ராவ் ஒரு கடிதத்தை அந்த இளைஞனிடம் கொடுத்தார். நடுங்கும் கைகளுடன் அதைப் பிரித்துப் பார்த்தான் இளைஞன். அவனது கடிதத்தில் சில யோசனைகளைச் சொல்லியிருந்தான் அல்லவா? அவற்றைச் செயல்படுத்த, விடுமுறை நாட்களிலும், அரசாங்க அனுமதியை வாங்கியிருந்தார் ராவ். நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருந்தது. தில்லியிலிருந்து வந்த அந்தக் கடிதத்தைத்தான் ராவ் அந்த இளைஞனிடம் கொடுத்தார். படித்து முடித்த இளைஞனின் கண்களில் நீர்கட்டியது. அனுபவத்திலும் வயதிலும் மிகவும் ஜூனியராக இருந்தும் தனது யோசனைகளை ஏற்று, அதற்கான நிதி ஒதுக்கீடும் மிகக் குறுகிய காலத்தில் பெற்றுத் தந்த ராவ் போன்ற ஸீனியர்கள் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும், இளைஞனை இன்னமும் வேகமாக வேலை செய்யத் தூண்டின. அந்த இளைஞன்தான் மயில்சாமி அண்ணாதுரை.

காலப்போக்கில் செயற்கைக் கோள் ராக்கெட் உருவாக்கத்தில், அண்ணாதுரையின் பங்களிப்பு அதிகமானது. இப்போது 'சந்திராயன்' செயற்கைக் கோள் வானத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கிறது. முழுக்க முழுக்க இந்தியத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு உருவானது. நமது நாட்டின் பெருமையையும் கௌரவத்தையும் உயர்த்தி விட்டார் அண்ணாதுரை. தமிழர்களுக்குப் பெருமை சேர்த்த விஞ்ஞானிகளின் கம்பீரமான வரிசையில் அண்ணாதுரையும் சேர்ந்துவிட்டார். கிராமத்துச் சூழலில் பிறந்து படித்து வளர்ந்த அண்ணாதுரையின் வாழ்க்கை, நமது இளைஞர்களுக்கு முன்னுதாரணம். அவரைப் போல ஆராய்ச்சித் துறையில் பிரகாசிக்க நமது நாட்டில் பல கதவுகள் திறந்திருக்கின்றன.

அழைக்கிறது ஆராய்ச்சி!



இந்தியாவில் அரசு சார்ந்த, சாராத, 1500 ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. 380 பல்கலைக்கழகங்கள், 11000 கல்லூரிகள் உள்ள நமது நாட்டில் வருடம் ஒன்றுக்கு 25 லட்சம் பட்டதாரிகள் வெளியே வருகிறார்கள். இவர்களில் ஆர்வமுள்ளவர்கள் பட்டமேற்படிப்பு முடித்து ஆராய்ச்சித் துறையில் கால்

பதிக்கிறார்கள். பெங்களூர் இந்திய விஞ்ஞானக் கழகம், ஐ.ஐ.டி. ஆகியவற்றைத் தவிர, சி.எஸ்.ஐ.ஆர். என்ற மத்திய அரசின் அமைப்பின் கீழ் இயங்கும் 17 ஆராய்ச்சி நிலையங்களில் ஆராய்ச்சிப் படிப்பு முடிப்பதென்பது மதிப்பு மிக்க தகுதி. ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றுவோருக்கு, ஆறாவது சம்பளக் கமிஷனுக்குப் பிறகு, சம்பளம் அள்ளிக் கொடுக்கிறார்கள். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பு தயாராக இருக்கிறது.

நமது ஆராய்ச்சி நிலையங்களைத் தவிர, மைக்ரோசாஃப்ட், டெல், பிலிப்ஸ், இன்டெல் போன்ற வெளிநாட்டு நிறுவனங்களும் தங்கள் ஆராய்ச்சித் துறையை இந்தியாவில் அமைத்திருக்கின்றன. நமது அரசு ஆராய்ச்சிக்காக இப்போது 41000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. வருங்காலத்தில் உலக அளவில் ஆராய்ச்சித் துறையில் அசத்தப்போவது சீனாவும் இந்தியாவும் தான். இந்த வகையில் பிரகாசமான வேலைவாய்ப்பு காத்திருக்கிறது.

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம் : ஸ்ரீநி



* பிரசாந்த மல்லாடி

பாண்டி 'S BLOG

நமது நாட்டில் ஆராய்ச்சிப் பட்டம் பெறுபவர்கள் ஏதோ ஒரு சப்ஜெக்ட்டை எடுத்து, அதில் மூழ்கி முத்துக்குளித்து பட்டம் பெற்று விடுகிறார்கள். ஆனால், அவர்களது ஆராய்ச்சிக் கட்டுரைகளால் சமுதாயத்துக்கு ஏதும் பயன் இருப்பதில்லை. 'கம்பராமாயணத்தில் மருத்துவம்' என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை தயாரித்தால், அது சமூகத்தில் மிகக் குறுகிய வட்டாரத்தில் மட்டுமே ரசிக்கப்படும்.

மொழித் துறையில் மட்டுமல்லாமல், விஞ்ஞானம், மற்றும் பல்வேறு துறைகளிலும் cutting edge என்ற வகையிலான ஆராய்ச்சிகள் குறைந்துகொண்டே வருகின்றன. ஆராய்ச்சிக் கூடத்தில் பரிசோதித்துப் பார்த்து வெற்றி கண்ட ஒரு விஷயம் மக்கள் பயன்பாட்டுக்கு வருவதுதான் cutting edge ஆராய்ச்சி. அரசு மட்டத்தில் இதுபோன்ற ஆராய்ச்சிகள் குறைந்து வந்தாலும், தனியார் துறையில் சில நிறுவனங்கள் இந்தப் பிரிவில் சக்கை போடு போடுகின்றன.

அப்படிப்பட்ட நிறுவனங்களில் மல்லாடி மருந்து நிறுவனமும் ஒன்று. இருமல், சளி, மன அழுத்தம் போன்றவற்றுக்கான மருந்து தயாரிப்பில் முழுக்க, முழுக்க இந்தியத் தொழில்நுட்பம் மற்றும் மூலப் பொருட்களை உற்பத்தி செய்து சாதனை படைத்திருக்கிறது மல்லாடி. இந்த வகையில் இதன் தயாரிப்பான 'எபிடரின்' உலகப் புகழ் வாய்ந்தது. இந்த மருந்தின் கிட்டத்தட்ட இருபது சதவிகித மார்க்கெட் விற்பனை மல்லாடிக்குத்தான். மல்லாடியின் வருமானம் எண்பது சதவிகிதம் வெளிநாட்டிலிருந்துதான். ஏற்றுமதியில் தொடர்ந்து ஐந்தாவது வருடமாக சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. பயோ டெக்னாலஜி ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகம் ஆராய்ச்சிப் படிப்புக்காக அங்கீகாரம் செய்திருக்கிறது இந்த நிறுவனத்தை. தலைவர் பிரசாந்த மல்லாடி பி.காம். முடித்து ICWA தான் படித்தவர்!

தேங்க்ஸ் டாக்டர்!

போளூர் சி.ரகுபதி

''என்னங்க! நச்சு நச்சுன்னு கழுத்தை அறுக்காதீங்க. என் தோள் வலிக்கே பிளட் டெஸ்ட், யூரின் டெஸ்ட், எக்ஸ்ரேன்னு ஆயிரம் ரூபாய்க்கு மேலே செலவாயிடுச்சு. உங்க கைக்கு எந்தக் கேடும் இல்லே. அடுத்த மாசம் நம்ம ரெண்டு பேர் சம்பளம் வரட்டும்... பார்க்கலாம்!''

மருத்துவமனை, பொது இடம்... பிரபாகரனுக்கு அவமானமாயிருந்தது.

உள்ளங்கையைப் பார்த்துக் கொண்டான். கரடு தட்டியது போல அங்கங்கே தோல் உரிந்து ஓணான் செதில் போல வெடிப்புகள்.

தமயந்திக்கு தன் உடம்பு, தன் சுகம் தான் முக்கியம். கணவனுக்கு செலவழிப்பதெல்லாம் தண்டம் என்ற எண்ணம்.

''சரி... சரி... இப்ப எனக்கு ட்ரீட்மெண்ட் வேண்டாம். முதல்ல உன் தோள் வலி குணமாகட்டும். கொஞ்சம் சுத்தாம வா!'' சொல்லும்போது இவர்களை கடந்து சென்றார் டாக்டர். கொஞ்ச நேரத்தில் நர்ஸ் அழைத்தாள்.

உள்ளே போனார்கள்.

''இந்த ஆயின்மெண்ட்டை உங்க மனைவி முதுகிலே பரவலா பத்து நிமிஷம் தடவி ஒரு வாரத்துக்கு தேய்ச்சு விடுங்க. அடுத்த வாரம் வாங்க.''

இப்போதாவது தன் மனைவி தன் கையைப் பற்றி டாக்டரிடம் சொல்வாளா?

ஊஹூம்.

ஒருவாரம் கழிந்தது. கடைத் தெருப் பக்கம் போனான் பிரபாகரன். அங்கே டாக்டரை யதேச்சையாகப் பார்க்க நேர்ந்தது.

''என்ன சார்... எப்படி இருக்கீங்க?'' என்று விசாரித்தார் டாக்டர்.

''சார், அவள் தோள் வலி போயே போச்சு!''

''அது போயிடும்... உங்க கை குணமாச்சா?''

''என்னது? என் கையா?'' ஆச்சரியத்தோடு அப்போதுதான் பார்த்தான். வறண்டு தோல் உரிந்து வெடித்துப் போன உள்ளங்கை இப்போது பழைய நிலையில் வழ வழவென்று... ''நானே கவனிக்கலையே டாக்டர்!''

''நான் எழுதிக் கொடுத்த மருந்தும் மாத்திரையும் உங்க மனைவிக்கு. அந்த ஆயின்மெண்ட் உங்க கைக்கு. உங்க மனைவியின் முதுகை ஒரு வாரம் உங்க கையாலேயே ஆயின்மெண்ட் தடவி மசாஜ் பண்ணி விட்டீங்களா..?''

அவனுக்குப் புரிந்தது.

''நன்றி டாக்டர்!'' கைகுவித்தான் பிரபாகரன். ●



கிரேஸியைக் கேளுங்கள்

● எம்.ஏ. பாதுஷா, அய்யம்பேட்டை.

யாருக்கு யார் உறவு? எவர்க்கு எது சொந்தம்? எதுக்கு எது சுமை?

எதுக்கும் சொந்தம் கொண்டாடும் எவருடைய உறவும் யாருக்குமே சுமைதான்!

● மஹேஸ்வரி, பெங்களூர்.

'சாக்லேட் - கிருஷ்ணா'வைத் தொடர்ந்து உங்கள் அடுத்த நாடகம் என்ன கிரேஸி...?

Sillyயாகக் கேட்கும் கேள்விகளுக்கு சில்மிஷமாகப் பதில் அளித்து கோமலீஸ்வரன் ஆகும் 'மாது-The-Sillyயனர்'.

● ஸ்ரீகுமார், சென்னை

பற்றின்மைக்கு 'தாமரை இலைத் தண்ணீரைத்தான்' எப்போதும் உதாரணமாகக் கூறுகிறோம்... புதுசா ஏதானும் சொல்ல முடியுமா?

'கண்ணாடியில் ஒட்டாத பிம்பம்.'

● கலைவாணி, தஞ்சாவூர்

ஒற்றுமைக்கும், வேற்றுமைக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்னவோ..?

அப்படிப் போடுங்க... ஒற்றுமை, வேற்றுமை இவற்றை வேறுபடுத்துவது 'தலை'யெழுத்துதான். தலையெழுத்து 'வே'றாக இருந்தால் வேற்றுமை... 'ஒ'ன்றாக ஆனால் ஒற்றுமை.

வேடிக்கையாக உதாரணம் சொல்லப் போனால், எனது அன்னைக்கும் எனது மகனின் அன்னைக்கும் 'தாய்மையில்' ஒற்றுமை. ஆனால், அவர்களுக்கு இடையே மாமியார்- மாட்டுப் பெண் என்ற வேற்றுமை.

● மா. உலகநாதன், திருநீலக்குடி

யாருடைய பதில்கள் கிரேஸிக்குப் பிடிக்கும்...?

வார்த்தை ஜாலத்தால் எஸ்கேப் ஆகாமல் வாஸ்தவமான பதில்களைத் தரும் தினமலர் வாரமலர் அந்துமணி பதில்கள்.

● எம்.அசோக்ராஜா, திருச்சி

கடமையைச் செய்துவிட்டு பலனை எதிர்பாராமல் இருப்பது சாத்தியமா?

ஏன் சாத்தியமில்லை? அந்திமக் காலத்தில் தனக்கு மகன் பால் ஊற்றுவான் என்ற பலனை எதிர்பார்க்காமல், மகனுக்கு தாய்ப் பால் ஊட்டும் கடமையைச் செய்யும் தாய்மை; காமத்துப்பால் என்ற பலனை எண்ணாது பரஸ்பர அன்பால் மலரும் காதல்; நட்பால் நண்பனுக்கு உயிரையே கொடுத்தல்... சொல்லிக்கொண்டே போகலாம். அடுத்த கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமே என்ற பலனை எதிர்பார்த்து, இத்தோடு என் கடமையை முடித்துக் கொள்கிறேன்.

● கலிவரதன், திருவண்ணாமலை

இப்ப நாம நல்ல உழைச்சா பின்னாடி காலை நீட்டிண்டு படுத்துக்கலாம்னு என் நண்பன் சொல்றானே?

உழைங்க தப்பில்ல. நண்பன் சொல்றானேன்னு யோகாசனம் மாதிரி பின்னாடி காலை நீட்டிண்டு படுக்காதீங்க. எக்கச்



கண்ணாடியில் ஒட்டாத பிம்பம்!

சக்கமா களுக்கிக்கும்... ஜாக்கிரதை.

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

எதையும் தாங்கும் இதயம் உங்களுக்கு உண்டா?

முடிந்தவரை தாங்குவேன். முடியாத போது பிரச்னைகளை 'By-pass' செய்து விடுவேன். அதுவும் முடியாமல் நான் கொந்தளித்தால், என்னைச் சமாதானப்படுத்த 'Peace-Maker' மனைவி உண்டே!

● **ரா. பிரசன்னா, மதுரை**

உங்களைப் பற்றி உங்கள் வீட்டுக் கண்ணாடியிடம் கேட்டால்?

கேக்கறதுக்கு நான் போனால் 'ஆஹா' என்று அழகைக் காட்டும். நீங்க போனா 'வெவ்வெவ்வெவ்வே' என்று அழகு காட்டும். எஜமான விசுவாசம் என் கண்ணாடிக்கு அதிகம்.

● **என். சண்முகம், திருவண்ணாமலை**

'நிறைகுடம் தளும்பாது' சரி. காலி குடம் கூடத்தான் தளும்பாதே...?

வித்தையால் வரவேண்டியது வினயம். நிறைகுடம் தளும்பாது என்பதைவிட, கூட இருப்பவர்கள் குலுக்கினாலும் தளும்பக் கூடாது. குறைகுடமாகி தளும்பிக் கொட்டி விடுவதால்தான், நிறைகுடம் காலி குடமாகி விடுகிறது.

● **மஞ்சு வாசுதேவன், அயிரோலி**

வான வில், ராமனின் வில் ஒப்பிடுக...

வான வில் ஏந்திய வானமும் நீலம், ராமனும் நீலம். ஏழு வண்ணத்தால் தீட்டிய வான வில் கடவுளின் கையெழுத்து... ஏழு மரத்தை வில்லால் துளைத்த ராமனின் கைவண்ணம், பத்து தலைக்குத் தலையெழுத்து. மழை நின்றதைத் தெரிவிக்கத் தோன்றும் வான வில்... சரமழை தொடங்கப் போவதைத் தெரிவிக்கும் ராமனின் வில்.





இன்றைய வேகமான உலகில் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காததாகவும், அதே சமயம் யூஸ் அண்ட் த்ரோவாகவும் உள்ள பொருட்களுக்கே மார்க்கெட். அந்த வரிசையில் பாக்கு மட்டைகள் இடம்பிடிக்க வந்துவிட்டன. பஃபே உணவுக்கு பாக்கு மட்டைத் தட்டு; ஐஸ்கிரீம் கடைகளில் பாக்கு மட்டை கப் எனக் கலக்கும் இவற்றின் பிறப்பிடம் எது?

தமிழ்நாட்டில் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி பகுதிகளிலும், பரவலாக சேலம் மாவட்டப் பகுதிகளிலும் பாக்கு மரங்கள் வெகு அதிகம். கோவை, சேலம் மாவட்டங்களில் பாக்குமட்டைத் தட்டு தயாரிப்பு குடிசைத் தொழிலாக இயங்கி வருகிறது. தவிர, சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் அருகே உள்ள சுப்புராய படையாச்சியூர் கிராமம், பேளூர் அருகே இராமநாதபுரம் கிராமம் என்று பாக்கு மட்டைத் தட்டு தயாரிப்புத் தொழில் பரவலாக பல கிராமங்களில் நடைபெற்று வருகிறது.

பாக்கு மரத்துலேருந்து உதிர்ந்து விழற மட்டை பச்சையா இருக்கும். அதனை வெயில்ல காய வைச்சு எடுத்து ஸ்டாக் பண்ணிக்கணும். காயவைச்சதும் மட்டை சுருங்கிப் போயிரும். தட்டுங்க தயாரிக்கணும்ங்கறப்ப அதுகளைத் தேவைக்கேற்ற அளவுக்கு எடுத்துத் தண்ணீர் தொட்டியில போட்டு ஊறவைக்கணும். ஊறிப் போன மட்டைய இழுத்து விரிச்சா பழைய சைஸுக்கே வந்துடும். அப்புறம் அதுகளை தட்டுங்க தயாரிக்கற மிஷின்ல விட்டு பிரஸ் பண்ணணும். ஒவ்வொரு சைஸ் தட்டுக்கும் மோல்டு அச்சு இருக்கும்.

''பன்னிரண்டு இஞ்ச் தட்டுலேர்ந்து நாலு இஞ்ச் தட்டு வரைக்கும் நாங்க தயாரிக்கிறோம். ரவுண்ட் கப், ஐஸ்கிரீம் கப் அப்புறம் ட்ரே அப்படின்னு பன்னிரண்டு விதமா உற்பத்தி செய்யறோம். இதெல்லாம் இல்லாம பாக்கு மட்டையில உரிச்ச மட்டை தயாரிக்கிறோம். வாழைச்



* தொழிலகத்தில் ஊழியர்கள்


சருகு இலை மாதிரி, எங்க பக்கத்துல இதனைக் கிராம ஹோட்டல்கள்ல பயன்படுத்துறாங்க. இந்தத் தட்டுகளில் மருத்துவக் குணம் இருக்கிறதால இதுல வெச்சு உணவுப் பொருட்களைச் சாப்பிடுறது உடம்புக்கு ரொம்ப நல்லது. தவிர, உபயோகித்துவிட்டு மண்ணிலே போட்டாலும் பாதிப்பில்லை!'' என்கிறார் சுப்பராய படையாச்சியூர் கிராமத்தின் பாண்டியன்.

இந்த இயற்கைத் தட்டு, விற்பனையில் இறக்கை கட்டிப் பறந்தாலும் அதன்

உற்பத்தியாளர்களைப் பதறவைத்து வருகிறது. காரணம், மூலப்பொருள் சேலம், கோவை என இரண்டு மாவட்டங்களில் மட்டுமே கிடைக்கிறது. தற்போது முப்பது மாவட்டங்களிலும் தொழில் விரிவடைந்துள்ளதால், மூலப்பொருள் இங்குள்ளவர்களுக்குக் கிடைப்பது அரிதாகி விட்டது. விலையும் உயர்ந்து விட்டது. இந்த வேலைக்குக் கூலி ஆட்கள் வருகை குறைந்து போனது. ''பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பாக்கு மட்டை தட்டு தயாரிப்பு யூனிட் நான்தான் ஆரம்பிச்சேன். மூலப்பொருள் விலையேற்றம், கூலி ஆட்கள் கிடைப்பதில்லை என இரண்டு காரணங்களுக்காக எனது யூனிட் கடந்த ஒரு வருடமாக இயங்கவில்லை!'' என்று கவலையுடன் சொன்னார் கோபால கிருஷ்ணன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

இறக்கை முளைத்த இயற்கை தட்டு!





உடம்புக்கு மருந்தாகவும், மண்ணுக்கு உரமாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் உள்ளது இந்தப் பாக்குமட்டை தட்டு.

சினி சிப்ஸ்

டைரக்டர் ஷங்கரின் 'எஸ்' பிக்சர்ஸு'க்காக 'ஈரம்' படத்தை எடுத்து வரும் அறிவழகன், ஏகத்துக்கும் படத்தை இழுத்தடிக்க, அவர் மேல் ஷங்கருக்கு ஏகத்துக்கும் கோபமாம். அதனால் ஷங்கர் என்ற பெயரைக் கேட்டாலே சாமி வந்தது போல நடுநடுங்குகிறாராம் அறிவழகன்!

(அப்புறமென்ன... இழுத்தடிப்ப தெல்லாம் ஷங்கரின் ஏகபோக உரிமையாயிற்றே!)

'காதல் கோட்டை' அகத்தியனின் மருமகன் திரு, விஷாலை ஹீரோவாகப் போட்டு ஒரு படம் இயக்கவிருக்கிறாராம். மருமகனுக்காக ஸ்கிரிப்ட் ஒர்க்கிலிருந்து ஸ்பாட் ஒர்க்... வரை அத்தனையையும் தனது கண்காணிப்பில் வைத்திருக்கிறாராம் அகத்தியன்!

(ஓ! உறவுக் கோட்டைக்குப் பாலம்...)

எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் ஸ்டார்ட், கேமரா, ஆக்ஷன்... சொல்ல ரெடியாகிவிட்டார். ஆஸ்கார் ஃபிலிம்ஸில் எஸ்.ரா., சொன்ன கதை ஓ.கே. ஆக, 'நீங்களே படத்தை இயக்கிவிடுங்களேன்' என்று தயாரிப்பாளர் க்ரீன் சிக்னல் கொடுத்துவிட்டாராம்!

(அப்ப பக்கம் பக்கமா படம் எடுப்பாரோ?)

விகடன் டாக்கீஸு'க்காக 'சிவா மனசுல சக்தி'யை இயக்கிய ராஜேஸ்.எம்., அடுத்த படத்தையும் இதே நிறுவனத்துக்கு இயக்க ஒப்பந்தம் ஆகியிருக்காராம். அச்சாரம் கூட வாங்கியாச்சு என்கிறது கோலிவுட் வட்டாரம்!


(டைட்டில்... தயாரிப்பாளர் மனசுல இயக்குநரா...?)

சௌந்தர்யா ரஜினியின் ஆக்கர் ஸ்டூடியோவுக்காக அடுத்த படத்தை இயக்க ஒப்புக்கொண்டிருக்கிறார் இயக்குநர் பாலா. 'படத்தை நிதானமாகத்தான் எடுப்பார் பாலா' என்று யாரோ சௌந்தர்யா காதில் ஓத, அதையே சௌந்தர்யா ரஜினி காதில் ஓத, ரஜினியோ, யாமிருக்க பயமேன் என்றாராம்!

(சூப்பர் ஸ்டார் உடையான் படத்துக்கு அஞ்சான்!)

சிம்பு அதிகமாக வெளி நாட்டு உடைகளைத்தான் விரும்பி அணிவாராம். அவருக்கு அப்படியே ஆப்போஸிட்டாம் தம்பி குறளரசன். கதர்ச் சட்டையைத்தான் விரும்பி அணிவாராம்!

(சிம்பு எது செஞ்சாலும் வம்பு!)




இப்போது கடைகளில்
தூரிகை மொழி!
ஜெயிப்பது நிஜம்!
சாதனைப் பயணம்!
கதைகள், கவிதைகள், பரிசுப் போட்டி...
கோகுலம்
மார்ச் 2009 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

